வ்யா:—(**வைகலும் வெண்ணெய் கைகலந்து உண்டான்**) "கற்பன் வைகலே" என்று - எனக்கு அவன் கு₃ணம் என்றும் த₄ாரகமாயிருக்கிறாப்போலே, ஆஶ்ரித ஸ்பர்ஶமுள்ளதொரு த்₃ரவ்யமே அவனுக்கும் நித்யத₄ாரகமாயிற்று என்கிறார். (**கைகலந்து உண்டான்**) A "தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி" என்கிற படியே "குடத்திலே கைபுக்கதனையும் வயிறு நிறையும்" என்கிற மௌக்₃த்₄யத் தாலே என்னுதல்; "கள்ளன்" என்று சிலுகிட்டவாறே, அவர்கள்தங்களோடே கலந்து அமுதுசெய்தான் என்னுதல்; "ஓர் இளம்பனும் ஒரு சதிரனும் களவு கண்டார்கள்" என்று ப₄ட்டர் கதையை ஸ்மரிப்பது; அபி₄நிவேஶத்தாலே இரண்டு கையாலும் அமுதுசெய்தான் என்னுதல். கைவாசி அறியாத மௌக்₃த்₄யத்தாலும், அபி₄நிவேஶத்தாலும். (**பொய் கலவாது என் மெய் கலந்தானே**) வெண்ணெயிற்பண்ணின விருப்பத்தில் பொய்யில்லாதாப்போலேகிடீர் என் உடம்பில் பண்ணுகிற விருப்பமும். அவன் மேல்விழ, தாம் மேன்மையைக் கண்டு இருய்க்கிறாராயிற்று; அவன் மேல்விழுகிறதும் இத்தாலேயாயிற்று. B"இங்கின்ற நீர்மை" என்று நான் அநாத₃ரிக்கிற ஶரீரமும் இவனுக்குக் கலக்கைக்கு விஷயமாவதே! 5.

ஈ— அவ:— அஞ்சாம் பாட்டு. a நீர் அவன் கு₃ணங்களை அப்₄யஸியாநின்றீராகில், அவன்தான் செய்கிறதென்? என்னில்; நான் அவனைவிட்டு அவன் கு₃ணங்களை

அ— அஞ்சாம் பாட்டு. (வைகலும் இத்யாதி₃) a "என் மெய் கலந்தானே" என்ற பத₃த்தைக் கடாக்ஷித்து ஶங்காபூர்வகமாக ஸங்க₃தி அருளிச்செய்கிறார் (நீர் அவன் கு₃ணங்களை இத்யாதி₃)

ஜீ— அஞ்சாம் பாட்டு. (வைகலும் இத்யாதி₃) a "என் மெய் கலந்தானே" என்ற பத₃த்தைக் கடாக்ஷித்து ஶங்காபூர்வகமாக ஸங்க₃தி அருளிச்செய்கிறார் (நீர் அவன் கு₃ணங்களை இத்யாதி₃)

 A சிறியதிருமடல்.32. B திருவிருத்தம்-1.

ஈ—விரும்புகிறுப்போலே, அவனும் என்னை விட்டு என்னுடைய தே$_{3}$ஹத்தை விரும்பாநின்றான் என்கிறார்.

வ்யா:— (வைகலும்) b "கற்பன் வைகலே" என்று - எனக்கு அவன் கு$_{3}$ணம் என்றும் த$_{4}$ாரகமாயிருக்கிறுப்போலே, ஆஶ்ரிதஸ்பர்ஶமுள்ள த்$_{3}$ரவ்யம் என்றுமொக்க த$_{4}$ாரகமாயிருக்குமாயிற்று அவனுக்கு. (வெண்ணெய் b$_{2}$ கைகலந்து உண்டான்) வெண்ணெயில் உண்டான ஆத$_{3}$ரத்தாலே c இடக்கையாலும் வலக்கையாலும் வாங்கி அமுதுசெய்தான்.

அன்றியே, dA "தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி" என்கிறபடியே, "கைநிறையுந்தனையும் வயிறு நிறையும்" என்னும் மௌக்$_{3}$த்$_{4}$யத்தாலே திருக்

அ— b வைகலும் வெண்ணெய் உண்டத்தை ஸநித$_{3}$ர்ஶநமாக அருளிச்செய்கிறார் (கற்பன் இத்யாதி$_{3}$) b$_{2}$ கைகலந்து - இடக்கையும் வலக்கையும் கலந்து என்னுதல்; கைகள் உள்ளளவும் வெண்ணெயிலே கலந்து என்னுதல்; மூன்றும் அர்த்த$_{2}$ம் - தேடுகிறவர்களோடே தானும் ஒருவனாய்க் கலந்து என்னுதல். அதாவது - கள்ளனுடைய ஸாமர்த்$_{2}$யம் சொல்லுகிறது. மூன்றும் அர்த்த$_{2}$த்துக்கு, கைகலந்து - முழுச்சொல்லு. c "வெண்ணெய் உண்டான்" என்றபோதே, வெண்ணெயோடே கலந்தமை தோற்றுகிறது; ஆனபின்பு, "கைகலந்து" என்றதுக்கு ப்ரயோஜநம் என்னென்ன (இடக்கையாலும் இத்யாதி$_{3}$) இரண்டு கையாலும் கலந்து வெண்ணெய் உண்டான் என்றபடி.

d சிறியதிருமடல் (தாரார் இத்யாதி$_{3}$) மாலையோடுகூட வெண்ணெய்க் குடத்திலே கையையிட்டான்; உள்ளளவும் கைநீட்டி - "வெண்ணெயிலே ஆழக் கையிட்டதனையும் வயிறு நிறையும்" என்றிருக்கிறான்காணும் மௌக்$_{3}$த்$_{4}$யத்தின் மிகுதியாலே; "இவன் தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி அள்ளி அமுதுசெய்தான்" என்று அறியும்படி எங்ஙனே? என்ன; பானையைப்பார்த்தாள்; பானை வாயிலே சாந்துபட்டிருந்தது; இவன் தோளிலே கோயிற்

ஜீ— b "வைகலும் வெண்ணெய்" என்றத்தை ஸநித$_{3}$ர்ஶநமாக அருளிச்செய்கிறார் (கற்பன் இத்யாதி$_{3}$) b$_{2}$ கைகலந்து - இடக்கையும் வலக்கையும் கலந்து என்னுதல்; கைகள் உள்ளளவும் வெண்ணெயிலே கலந்து என்னுதல்; மூன்றும் அர்த்த$_{2}$ம் - தேடுகிறவர்களோடே தானும் ஒருவனாய்க் கலந்து என்னுதல். அதாவது - கள்ளனுடைய ஸாமர்த்$_{2}$யம் சொல்லுகிறது. மூன்றும் அர்த்த$_{2}$த்துக்கு, "கைகலந்து" என்றது - முழுச்சொல்லு. c "வெண்ணெய் உண்டான்" என்றபோதே, வெண்ணெயோடே கலந்தமை தோற்றுகிறது; ஆனபின்பு, "கைகலந்து" என்றதுக்கு ப்ரயோஜநம் ஏதென்ன (இடக்கையாலும் இத்யாதி$_{3}$) இரண்டு கையும் கலந்து வெண்ணெய் உண்டான் என்றபடி.

d (தாரார் இத்யாதி$_{3}$) சிறியதிருமடல். மாலையோடுகூட வெண்ணெய்க் குடத்திலே கையையிட்டான்; உள்ளளவும் கைநீட்டி - "வெண்ணெயிலே ஆழக் கையிட்டதனையும் வயிறு நிறையும்" என்றிருக்கிறான்காணும் மௌக்$_{3}$த்$_{4}$யத்தின் மிகுதியாலே; "இவன் தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி அள்ளி அமுதுசெய்தான்" என்று அறியும்படி எங்ஙனே? என்ன; பானையைப்பார்த்தாள்; பானை வாயிலே சாந்துபட்டிருந்தது; இவன் தோளிலே கோயிற்

A சிறியதிருமடல்-32.

6. கலந்தென் ஆவி, நலங்கொள் நாதன்
புலன்கொள் மாணாய், நிலங்கொண் டானே.

ஆ— 6. வ்யா:— (கலந்து என் ஆவி) இப்படி என்னோடே கலந்த கலவியாலே தோற்பித்து அடிமையாக்கின இவன், எனக்கு போ₄க்₃யமாகைக்காக ஸகலஜந மநோநயநஹாரியான தன்னுடைய அழகிய திருவடிவைக் காட்டி, மஹாப₃லியை வஶீகரித்து, இந்த லோகத்தையும் கொண்டான் என்கிறார். 6.

ஒ— அவ:— ஆறும் பாட்டில் — தம்மோடு கலந்த எம்பெருமான் தம்மை அநந்யார்ஹமாக்கிக்கொண்டபடியை ஸநித₃ர்ஶநமாகச் சொல்லுகிறார்.

ஈ—கைகள் உள்ளளவும் கலந்து அமுதுசெய்தான் என்னுதல்; e "கள்ளன்" என்று f சிலுகிட்டவாறே g அவர்கள்தங்களோடே கலந்து அமுதுசெய்தான் என்னுதல். h"ஸர்வாதி₄கனானவன் நித்யஸம்ஸாரியாய்ப் போந்தவனுடைய தே₃ஹத்தைத் திருவாய்ப்பாடியில் வெண்ணெயோபாதி ஆத₃ரித்தான்" என்றால், இது கூடுவதொன்றோ? என்னில்: (பொய் கலவாது என் மெய் கலந்தானே) i'அவ்வெண்ணெயில் பண்ணின விருப்பத்தில் பொய்யில்லாதாப்போலே கிடீர் என் உடம்புடன் கலந்த கலவியிலும் பொய்யில்லாதபடி!' என்கிறார். (என் மெய்) j அவன் மேல்விழ மேல்விழத் தாம் இறாய்த்தமை தோற்றுகிறது. k A "அழுக்குடம்பு" என்று நான் அநாத₃ரிக்கிற ஶரீரம் இவனுக்கு ஆத₃ரணீயமாவதே! என்கிறார். 5.

அ—சாந்திருக்குமே, ஆகையாலே, கையுள்ளளவும் நீட்டினான் என்று அறிந்தாள். e ப்ராத₃ராந்யம் தோற்றவேண்டியிருக்கையைப்பற்ற முன்னே எடுக்கிறார் (கள்ளன் என்று) f சிலுகு - கலஹம். g B / "தன்னேராயிரம் பிள்ளைகள்" என்றபடி. h"ப்ரஸக்தஸ்ய ஹி ப்ரதிஷேத₄:" இதி ந்யாயேந ப்ரதிஷேத₄ஸ்ய ப்ரஸக்திம் ஸம்பாத₃யதி (ஸர்வாதி₄க இதி) i (அவ்வெண்ணெயில் இதி) "வெண்ணெய் கைகலந்து உண்டான்" இத்யேதத் த்₃ருஷ்டாந்தார்த்த₂ம் இதி பா₄வ:. j "என் மெய்" என்றதுக்கு பா₄வம் (அவன் இத்யாதி₃) k ஏகாரஸ்ய பா₄வமாஹ (அழுக்குடம்பு இதி) கீழ்வாக்யவிவரணம் என்னவுமாம். "வைகலும் வெண்ணெய் கைகலந்து உண்டான்; உண்டவன் என் மெய் கலந்தான்; இதில் பொய் கலவாது" என்று அந்வயம். 5.

ஜீ—சாந்திருக்குமே; ஆகையாலே, கையளவும் நீட்டினான் என்று அறிந்தான். e ப்ராத₃ராந்யம் தோற்றவேண்டியிருக்கையைப்பற்ற முன்னே எடுக்கிறார் (கள்ளன் என்று) f சிலுகு - கலஹம். g B / "தன்னேராயிரம் பிள்ளைகள்" என்றபடி. h"ப்ரஸக்தஸ்ய ஹி ப்ரதிஷேத₄:" இதி ந்யாயேந ப்ரதிஷேத₄ஸ்ய ப்ரஸக்திம் ஸம்பாத₃யதி (ஸர்வாதி₄க இதி) i (அவ்வெ. ண்ணெயில் இதி) "வெண்ணெய் கைகலந்து உண்டான்" இத்யேதத் த்₃ருஷ்டாந்தார்த்த₂ம் இதி பா₄வ:. j "என் மெய்" என்றதுக்கு பா₄வம் (அவன் இத்யாதி₃) k ஏகாரஸ்ய பா₄வமாஹ (அழுக்குடம்பு இதி) கீழ்வாக்யவிவரணம் என்னவுமாம். "வைகலும் வெண்ணெய் கைகலந்து உண்டான்; உண்டவன் என் மெய் கலந்தான்; இதில் பொய் கலவாது" என்று அந்வயம். 5.

A திருவிருத்தம்-1. B பெரியாழ்திரு 3-1-1.
/ இவ்விடத்தில் (அவர்கள்) என்பது விட்டுப்போயிருக்கலாம்.

ஒ— வ்யா:— (கலந்து என்று தொடங்கி) **என்னோடே ஸம்ஶ்லேஷித்து, என் ஆத்மாவில் நன்மையைக் கொண்டு, என்னையாளுங்கொண்டான்.** (புலன் என்று தொடங்கி) **ஸர்வேந்த்ரியாபஹாரக்ஷமமான குறள்வடிவைக் காட்டி மஹாபலியில் நிலங்கொண்டாற்போலே.** 6.

ப— 6. அவ:— அநந்தரம், லோகத்தை அநந்யார்ஹமாக்கினாற்போலே என் ஆத்மாவையும் அநந்யார்ஹமாக்கினான் என்கிறார்.

கலந்து—(ஒரு நீராகக்) கலந்து, **என் ஆவி**—என் ஆத்மஸ்வரூபத்தினுடைய, **நலம்**—(ஸ்வாஸாதாரண ஶேஷத்வமாகிற) நன்மையை, **கொள்**—(தனக்கு ப்ரயோஜநமாகக்) கொண்ட, **நாதன்**—ஶேஷியானவன், **புலன்**—இந்த்ரியங்களுக்கு, **கொள்**—ஆகர்ஷகமான, **மாணாய்**—வாமந ப்ரஹ்மசாரி வேஷத்தையுடையவனாய், **நிலம்**—பூமியை, **கொண்டான்**—(தன்னதாக்கிக்) கொண்டவன். நிலம் என்று லோகாந்தரங்களுக்கும் உபலக்ஷணம். 6.

இ— அவ:— ஆறாம் பாட்டில் — தேஹத்தளவன்றிக்கே என்னை அநந்யார்ஹமாக்கினான் என்கிறார்.

வ்யா:— **(கலந்து)** என்னோடே ஒருநீராகக் கலந்து. **(என் ஆவி நலங்கொள் நாதன்)** என் ஆத்மாவினுடைய நலத்தை-நற்சீவனைக் கொண்டான். **(நாதன்)** A "என்னையாளுங்கொண்டு" என்கிறபடியே தன்னையொழியச் செல்லாமையை விளைத்து, நான் எனக்குரியேனாயிருக்கிற நிலையைத் தவிர்த்தான். தாம் அகப்பட்டபடிக்கு மஹாபலியை நிதர்ஶநமாகச் சொல்லுகிறார்,— **(புலன் கொள் மாணாய்)** ஸர்வேந்த்ரியாபஹாரக்ஷமமான வடிவைக்கொண்டு. **(நிலங்கொண்டானே)** மஹாபலி "தன்னது" என்று அபிமாநித்த பூமியைக் கொண்டான். அவன் என்னைப்போலே தன்னைக்கொடுத்திலன். அவன் வடிவிலே தோற்றான்; நான் நீர்மையிலே தோற்றேன் என்கிறார். 6.

ஈ— அவ:— ஆறாம் பாட்டு. a இப்படிக் கலந்து செய்ததென்? என்ன; 'தேஹத்தளவிலே விரும்பி விட்டிலன்; என் ஆவிநலத்தையும் கொண்டான்' என்கிறார்.

அ— ஆறாம் பாட்டு. (கலந்து என் ஆவி இத்யாதி) a "என் ஆவி நலம் கொள் நாதன்" என்ற பதத்தைக் கடாக்ஷித்து ஶங்காபூர்வகமாக ஸங்கதி அருளிச்செய்கிறார் (இப்படி இத்யாதி).

ஜீ— ஆறாம் பாட்டு. (கலந்து என் ஆவி இத்யாதி) a "என் ஆவி நலம் கொள் நாதன்" என்ற பதத்தைக் கடாக்ஷித்து ஶங்காபூர்வகமாக ஸங்கதி அருளிச்செய்கிறார் (இப்படி இத்யாதி).

A திருநெடுந்தாண்டகம்-25.

7. கொண்டா னேழ்விடை, உண்டா னேழ்வையம்
தண்டா மஞ்செய்துஎன், எண்டா னானே.

ஆ— 7. வ்யா:— (கொண்டான்) திருநாட்டிற்பண்ணும் ப்ரேமத்தை என்பக்கலிலே பண்ணி, தன்னோடு ஶீக்ஷத்வேந ஸம்ஶ்லேஷிக்கவேணும் என்றுள்ள என்னுடைய மநோரதத்தைத் தான் கைக்கொண்டு என்னோடு ஸம்ஶ்லேஷித்தருளின இவன், எனக்கு போக்யமாகைக்காக, இன்னம் ஏருதேழடர்த்தது தொடக்கமாக அபர்யந்த திவ்ய சேஷ்டிதங்களைப் பண்ணியருளாநின்றான் என்கிறார். 7.

ஈ— வ்யா:— (கலந்து இத்யாதி) என்னோடே ஒருநீராகக் கலந்து, பின்னை என் b ஆத்மாவினுடைய நற்சீவனைக் கொண்டான். அவ்வளவேயோ?—(நாதன்) c A''என்னை யாளுங்கொண்டு'' என்கிறபடியே, நான் எனக்குரியேனாயிருக்கிற இருப்பையும் தவிர்த்தான். இப்படி அகப்பட்டார் நீரேயோ? என்ன; மஹாபலியும் அகப்பட்டான்; d ஆவிநலம் கொடுத்திலன்; கழஞ்சு மண் கொடுத்தானித்தனை; e ஸர்வேந்த்ரியாபஹார க்ஷமமான வேஷத்தைப் பரிக்ரஹித்து, f அவன் '' என்னது '' என்று அபிமாநித் திருக்கிற பூமியை அபஹரித்தான். 6.

அ— b ''நலம்'' என்று-போக்யதையாய், ஆவிநலம் என்று-ஆத்மாவினுடைய போக்யதை. ஸௌஶீல்ய நாதத்வங்களாகிற அகவாயில் குணங்களைக் காட்டி, என்னுடைய அகவாயில் பதார்த்தத்தை அபஹரித்தான்; புறவாயில் ஸௌந்தர்யத்தைக் காட்டி, அவனுடைய புறவாயில் பதார்த்தத்தைஅபஹரித்தான் என்றபடி c திருநெடுந்தாண்டகம்—(என்னையாளுங்கொண்டு இத்யாதி) என் ஸர்வஸ்வத்தையும் அபஹரித்துக் கொண்டுபோகையன்றியே, சுமையாளும் நானேயாகவேணுமோ? அவனோடே கலந்து பரிமாறின பரிமாற்றத்தை அடிமையாக நினைத்திருக்கையாலே ''என்னை அடிமையுங்கொண்டு'' என்கிறாளாகவுமாம். d ''நிலம் கொண்டான்''இத்யேதத் ஶ்ருதி நிதாய, ஸ்வஸ்மாத் தஸ்ய விஶேஷமாஹ (ஆவி நலம் கொடுத்திலன் இத்யாதி) e ஶப்தார்த்தம் (ஸர்வேந்த்ரிய இதி) B''மன்னும் குறளுருவில் மாணி''இத்யாதி. மாணி-ப்ரஹ்மசாரி. f (அவன்) மஹாபலி. ''கலந்து என் ஆவி நலம் கொள் நாதனானன், புலன் கொள் மாணாய் நிலம் கொண்டான்'' இத்யந்வய:. கலந்து என் ஆவி என்று தொடங்கி, அடைவே உரை அந்வயம். 6.

ஜீ— b '' நலம் '' என்று - போக்யதையாய், '' ஆவி நலம் '' என்று - ஆத்மாவினுடைய போக்யதை. ஸௌஶீல்ய நாதத்வங்களாகிற அகவாயில் குணங்களைக் காட்டி, என்னுடைய அகவாயில் பதார்த்தத்தை அபஹரித்தான் ; புறவாயில் ஸௌந்தர்யத்தைக் காட்டி, அவனுடைய புறவாயில் பதார்த்தத்தை அபஹரித்தான் என்றபடி. c (என்னையாளுங்கொண்டு இத்யாதி) திருநெடுந்தாண்டகம். என் ஸர்வஸ்வத்தையும் அபஹரித்துக் கொண்டுபோகையன்றியே, சுமையாளும் நானேயாகவேணுமோ? அவனோடே கலந்து பரிமாறின பரிமாற்றத்தை அடிமையாக நினைத்திருக்கையாலே '' என்னை அடிமையுங்கொண்டு '' என்கிறாளாகவுமாம். d '' நிலம் கொண்டான் '' இத்யேதத் ஶ்ருதி நிதாய, ஸ்வஸ்மாத் தஸ்ய விஶேஷமாஹ (ஆவி நலம் கொடுத்திலன் இத்யாதி) e ஶப்தார்த்தம் (ஸர்வேந்த்ரிய இதி) B''மன்னும் குறளுருவில் மாணி'' இத்யாதி. மாணி - ப்ரஹ்மசாரி, f (அவன்) மஹாபலி. ''கலந்து என் ஆவி நலம் கொள் நாதனானன்; புலன் கொள் மாணாய் நிலம் கொண்டான்'' இத்யந்வய:. 6.

A திருநெடுந்தாண்டகம்-25. B பெரியதிருமடல்-கண்ணி 108.

ஒ— அவ:— ஏழாம் பாட்டில் — தன் விஷயத்தில் என்னுடைய மநோரதத்தை, என் பக்கலிலே தான் பண்ணினான் என்கிறார்.

வ்யா:— (கொண்டான் என்று தொடங்கி) நப்பின்னைப் பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷ விரோதியான எருதேழையும் கொன்றான்; ஜகத்தையடையத் திரு வயிற்றிலே வைத்துக்கொண்டான்; இதுக்குக் கருத்து—தம்முடைய ஸம்ஶ்லேஷ விரோதிகளைப்போக்கி, ஜகத்துக்குத் தன்னையொழியச் செல்லாதாப்போலே தம்மை யொழிய எம்பெருமானுக்குச் செல்லாது—என்று. (தண் தாமம் செய்து) பரமபதத் திற்பண்ணும் வ்யாமோஹத்தைப் பண்ணி நான் நினைத்தபடி செய்தான் என்றுமாம். 7.

ப— 7. அவ:— அநந்தரம், என் நினைவே தனக்கு நினைவானான் என்கிறார்.

ஏழ் விடை-(அபிமத விரோதியான) ஏழ்விடைகளையும், கொண்டான்-(ப்ராண னைக்)கொண்டவனாய், (ஆபத்திலே) ஏழ் வையம்—ஸர்வலோகத்தையும், உண்டான்— வயிற்றிலே வைத்து ரக்ஷித்தவன், தண்—ஸாம்ஸாரிகதாபஶாந்திகரமான, தாமம்— பரமபதத்தில் விருப்பத்தை,செய்து—(என் பக்கலிலே) பண்ணி, என்—என்னுடைய, எண்—மநோரதத்தின்படியே, தான்-தான், ஆனான்-மநோரதிக்கத் தொடங்கினான்.

அதாவது - நான் பரமபதத்திலே தன்னை அநுபவிக்க எண்ணுமாபோலே, தான் இங்கே என்னை அநுபவிக்க எண்ணுநின்றான் என்றபடி. என் எண்ணிலே தான் கைப்புகுந்தான் என்றுமாம். 7.

இ— அவ:— ஏழாம் பாட்டில் — தன்பக்கல் உண்டான என்னுடைய மநோ ரதத்தை, என் பக்கலிலே தான் பண்ணினான் என்கிறார்.

வ்யா:— (கொண்டான் ஏழ்விடை) ஏழுவகைப்பட்ட வ்ருஷபங்களை ஜயித் தான். இன்ன படைவீட்டைக் கொண்டான் என்னுமாபோலே; "கொண்டான்" என்றது - ஜயித்தான் என்றபடி. நப்பின்னைப் பிராட்டியோட்டைக் கலவிக்கு விரோதியைப் போக்கினாப்போலே, என் விரோதிகளைப்போக்கி வந்து கலந்தான் என்கை. (உண்டான் ஏழ்வையம்) ஜகத்தையெல்லாம் ப்ரளயாபத்திலே தன் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தான். ப்ரளயாபத்தில் ஜகத்துக்குத் தன்னை யொழியச் செல்லாதாப்போலே, என்னையொழியத் தனக்கும் செல்லாதபடியா யிராநின்றான் என்கை. (தண் தாமம் செய்து) தட்பத்தையுடைய தாமமுண்டு - பரமபதம்; அதில் பண்ணக்கடவ விருப்பத்தை என்பக்கலிலே பண்ணி. தத் விபூதிகனாக என்னை ஆதரித்து என்னவுமாம். (என் எண்தான் ஆனானே) நான் மநோரதித்தபடியே எனக்குக் கைப்புகுந்தான் என்னுதல்; என் மநோரதத்தைத் தான் கைக்கொண்டான்; அதாகிறது - A"மாக வைகுந்தம் காண்பதற்கு என் மனம் ஏகமெண்ணும்" என்று - நான் அத்தேஶத்திலே அநுபவிக்க எண்ண, திருநகரியிலே வந்து என்னை அநுபவிக்க எண்ணுகிற்கை. 7.

A 9-3-7.

ஈ— அவ:—ஏழாம் பாட்டு. a ஆவிநலங்கொண்டுவிட்ட அளவேயோ? நித்யவிபூதியில் பண்ணும் ஆதரத்தையும் என்பக்கலிலே பண்ணினான் என்கிறார்.

வ்யா:—(கொண்டான் ஏழ்விடை) b "இன்ன படைவீட்டைக் கொண்டான்" என்னுமாபோலே. நப்பின்னைப் பிராட்டியோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு ப்ரதிபந்தகமான வ்ருஷபங்கள் ஏழையும் ஜயித்தான். (உண்டான் ஏழ்வையம்) d ப்ரளயாபத்தில் பூமி தன் வயிற்றிலே புகாவிடில் தரியாதாப்போலே, தான் என்பக்கலிலே புகுந்தல்லது தரியாதானாய்க் கலந்தான். e தனக்கு ஸ்நேஹிகளாயிருப்பார்க்குச்

அ— ஏழாம் பாட்டு. (கொண்டான் இத்யாதி) a "தண் தாமம் செய்து" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (ஆவிநலம் இத்யாதி).

b (இன்ன படை வீடு) "வென்றான்" என்னாதே, "கொண்டான்" என்கிற பதஸ்வாரஸ்யம். c போலே என்று வாக்யம்; அலப்யலாபத்திலே த்ருஷ்டாந்தம்; யத்நத்திலன்று; நப்பின்னைப்பிராட்டி ஸம்ஶ்லேஷத்துக்கு நிமித்தமாகையாலே அலப்யலாபமிறே. d ப்ரளயாபத்ரக்ஷணத்தை அருளிச்செய்ததுக்குத் தாத்பர்யம் (ப்ரளயாபத்தில் என்று தொடங்கி) யத்வா, "என் எண்தான் ஆனான்" என்றத்தைக் கடாக்ஷித்து பூர்வம் (ப்ரளயாபத்திலே இத்யாதி) அதவா, "கலந்து என்னாவி" என்றதுக்கு இது த்ருஷ்டாந்தமாயிருக்கிறது என்கிறார் (ப்ரளய இத்யாதி) e,f ஸ்வஸ்மிந் புகுவத்க்ருதா஽த்யாதராபித்ராதாவஸரே "கொண்டான் ஏழ்விடை உண்டான் ஏழ்வையம்" இதி வக்துர் பூர்வமாஹ (தனக்கு ஸ்நேஹிகளாய் இத்யாதிவாக்யத்வயேந) f (தான் பண்ணும் ரக்ஷணம்) இதி வாக்யம்- "உண்டான் ஏழ்வையம்" இத்யஸ்ய பூர்வாந்தரம். e (ஸ்நேஹிகளாயிருப்பார்க்கு) நப்பின்னைப் பிராட்டிக்காகவிறே விடை கொண்டது. e (ஸ்நேஹிகளாயிருப்பார்க்குச் செய்யுமதும் செய்தான்) என்றது - அவர்கள்விரோதியைப் போக்கினாப்போலே, என் விரோதியையும் போக்கினான் என்றபடி. f (விலக்காதார்க்குச் செய்யுமதும் செய்தான்) என்றது - அவர்கள் ப்ரளயா

ஜீ— ஏழாம் பாட்டு. (கொண்டான் இத்யாதி) a "தண் தாமம் செய்து" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (ஆவிநலம் இத்யாதி).

b (இன்ன படை வீடு) "வென்றான்" என்னாதே, "கொண்டான்" என்கிற பதஸ்வாரஸ்யம். c போலே என்று வாக்யம்; அலப்யலாபத்திலே த்ருஷ்டாந்தம்; யத்நத்திலன்று; நப்பின்னைப்பிராட்டி ஸம்ஶ்லேஷத்துக்கு நிமித்தமாகையாலே அலப்யலாபமிறே. d ப்ரளயாபத்ரக்ஷணத்தை அருளிச்செய்ததுக்குத் தாத்பர்யம் (ப்ரளயாபத்திலே இத்யாதி) யத்வா, "என் எண்தான் ஆனான்" என்றத்தைக் கடாக்ஷித்து பூர்வம் (ப்ரளயாபத்திலே இத்யாதி) அதவா, "கலந்து என்னாவி" என்றதுக்கு இது த்ருஷ்டாந்தமாயிருக்கிறது என்கிறார் (ப்ரளய இத்யாதி) e,f ஸ்வஸ்மிந் புகுவத்க்ருதா஽த்யாதராபித்ராதாவஸரே "கொண்டான் ஏழ்விடை உண்டான் ஏழ்வையம்" இதி வக்துர் பூர்வமாஹ (தனக்கு ஸ்நேஹிகளாய் இத்யாதிவாக்யத்வயேந) f (தான் பண்ணும் ரக்ஷணம்) இதி வாக்யம்-"உண்டான் ஏழ்வையம்" இத்யஸ்ய பூர்வாந்தரம். e (ஸ்நேஹிகளாயிருப்பார்க்கு) நப்பின்னைப் பிராட்டிக்காகவிறே விடை கொண்டது. e (ஸ்நேஹிகளாயிருப்பார்க்குச் செய்யுமதும் செய்தான்) என்றது - அவர்கள் விரோதியைப் போக்கினாப்போலே, என் விரோதியையும் போக்கினான் என்றபடி. f (விலக்கா

ரீ—செய்யுமதும் செய்தான்; f தான் பண்ணும் ரக்ஷணம் விலக்காதார்க்குச் செய்யுமதும் செய்தான். g அதுக்குமேலே—(h தண் தாமம் செய்து) i தட்பத்தையுடைத்தான தாமமுண்டு - பரமபதம்; அதில் பண்ணும் விருப்பத்தையும் என்பக்கலிலே பண்ணினன். j தத்விபூதிகளுக என்னை ஆதரித்து என்றுமாம். (என் k எண்ணதான் ஆனனே) k நான் மநோரதித்தபடியே எனக்குக் கைப்புகுந்தான் என்னுதல்; l அன்றிக்கே, m என் மநோரதத்தைத் தான் (கைக்)கொண்டான் என்னுதல். n அதாவது-o A மாக வைகுந்தம் காண்பதற்கிறே இவர் ஏகமெண்ணுவது; p B"கண்ணன் விண்ணூர் தொழவே / சரிகின்றது சங்கம்" என்று, நான் "ஸ்ரீ வைகுண்டத்தேறப் போகவேணும்" என்றும்,

---

அ—பத்தில் நமியாதபடி தரிப்பித்தாப்போலே, பிரிந்து நமியாதபடி என்னையும் குணவிஷ்காரத்தாலே தரிப்பித்தான் என்றபடி. g இப்படி பூர்வகண்டத்தைப் பூர்வஶேஷமாக்கி, உத்தரகண்டத்தை அவதரிப்பிக்கிறார் (அதுக்குமேலே என்று) h செய்து-புத்திபண்ணி; தண்தாமமாகச்செய்து-தண் தாமம் என்று புத்திபண்ணி; தண்தாம ஸத்ருஶமாக புத்திபண்ணி என்னுதல்; தண்தாமத்திலவனுக புத்திபண்ணி என்னுதல். i தட்பம் என்று - குளிர்த்தியாய், C "நலமந்தம் இல்லதோர்" என்ற பேராக்யதையைச் சொல்லுகிறது. j (தத்விபூதிகளுக) தத்ராத்யத்வேந. k, k (நான் மநோரதித்த இத்யாதி) எண்ணிலே - எண்ணின ப்ரகாரத்திலே ஆனன். அக்ரூரர் மநோரதித்தபடியே ஆனப்போலே, நான் மநோரதித்தபடியே எனக்குக் கைப்புகுந்தான் என்றபடி. m (என் மநோரதத்தை இத்யாதி) என் எண்ணைப்போலொத்த எண்ணைத் தானுடையனுனன் என்றபடி. n "என் மநோரதத்தை" என்றத்தை விவரிக்கிறார் (அதாவது இத்யாதி) o (மாக வைகுந்தம் இத்யாதி) பரமாகாஶ ஶப்தவாச்யமான ஸ்ரீ வைகுண்டத்தைக் காண்பதற்கு என் நெஞ்சானது இராப்பகலும் ஏகப்ரகாரமாக எண்ணுநின்றது. l, p "அன்றிக்கே" இத்யாதிக்கு விவரணம் (கண்ணன் இத்யாதி) திருவிருத்தம். க்ருஷ்ணனுடைய பரமவ்யோம ஶப்தவாச்யமான பரமபதத்தை நித்யாஞ்ஜலிபந்தம் பண்ணி அநுபவிக்கவேணும் என்கிற

ஜீ—தார்க்குச் செய்யுமதும் செய்தான்) என்றது - அவர்களை ப்ரளயாபத்தில் நமியாதபடி தரிப்பித்தாப்போலே, பிரிந்து நமியாதபடி என்னையும் குணவிஷ்காரத்தாலே தரிப்பித்தான் என்றபடி. g இப்படி பூர்வகண்டத்தைப் பூர்வஶேஷமாக்கி, உத்தரகண்டத்தை அவதரிப்பிக்கிறார் (அதுக்குமேலே என்று) h செய்து - புத்திபண்ணி; தண்தாமமாகச் செய்து - தண்தாமம் என்று புத்திபண்ணி; தண்தாமஸத்ருஶமாக புத்திபண்ணி என்னுதல்; தண்தாமத்திலவனுக புத்திபண்ணி என்னுதல். i தட்பம் என்று - குளிர்த்தியாய், C "நலமந்தம் இல்லதோர்" என்ற பேராக்யதையைச் சொல்லுகிறது. j தத்விபூதிகளுக - தத்ராத்யத்வேந. k (நான் மநோரதித்த இத்யாதி) எண்ணின ப்ரகாரத்திலே ஆனன்; அக்ரூரர் மநோரதித்தபடியே ஆனப்போலே, நான் மநோரதித்தபடியே எனக்குக் கைப்புகுந்தான் என்றபடி. m (என் மநோரதத்தை இத்யாதி) என் எண்ணைப்போலொத்த எண்ணைத் தானுடையனுனன் என்றபடி. n "என் மநோரதத்தை" என்றத்தை விவரிக்கிறார் (அதாவது இத்யாதி) o (மாக வைகுந்தம் இத்யாதி) பரமாகாஶஶப்தவாச்யமான ஸ்ரீ வைகுண்டத்தைக் காண்பதற்கு என் நெஞ்சானது இராப்பகலும் ஏகப்ரகாரமாக எண்ணுநின்றது. l, p "அன்றிக்கே" இத்யாதிக்கு விவரணம் (கண்ணன் இத்யாதி) க்ருஷ்ணனுடைய பரமவ்யோம ஶப்தவாச்யமான பரமபதத்தை நித்யாஞ்ஜலிபந்தம் பண்ணி அநுபவிக்கவேணும் என்கிற மெலிவாலே வளை சரியா

A 9-8-7. B திருவிருத்தம் 47. C 2-8-4. / (பா) சரிகின்றன.

8. ஆநா னாயன், மீனோ டேனமும்
தானா னானென்னில், தானா யசங்கே.

ஆ— 8. வ்யா:— (ஆனான்) தன்னுடைய திவ்யசேஷ்டிதமாத்ரமேயோ எனக்கு போக்யமாகச் செய்தருளிற்று? தன்னுடைய திவ்யாவதாரங்களுமெல்லாம், என்பக்கலுள்ள ஸங்கத்தாலே எனக்கு போக்யமாகச் செய்தருளினான் என்கிறார். 8.

ஒ— அவ:— எட்டாம் பாட்டில் — ஸர்வேஶ்வரன் என்பக்கலுண்டான ஸங்காதிஶயத்தாலே தேவமநுஷ்யாத்யநேகாவதாரங்களைப் பண்ணியருளினான் என்கிறார்.

வ்யா:— "(என்னில் தானாய சங்கே) ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து எனக்காகப் பண்ணின திருவவதாரத்துக்கு எண்ணில்லை" என்றும் சொல்லுவர். 8.

ப— 8. அவ:— அநந்தரம், ஆஶ்ரிதார்த்தமான அவதாரத்துக்கு எல்லையில்லை என்கிறார்.

ஆனான் ஆனாயன்—கோ ரக்ஷண ஸ்வபாவமான கோபஜாதியையுடைய, **தான்**—தான், (ஆபத்ரக்ஷணார்த்தமாக) **மீனோடு ஏனமும்**—மத்ஸ்யாவதாராதிரூபேண, **ஆனான்** — அவதீர்ணனானான்; **என்னில்** — என்று சொல்லுமளவில், **தானாய** — (விலக்ஷணஸ்வரூபனான) தன்னுடையவான அவதாரங்கள், **சங்கு** — சங்கு என்கிற ஸங்க்யைக்குப்போரும்.

அன்றியே, **"என்னில் தானாய சங்கு"** என்று - என்பக்கல் தான் பண்ணின ஸங்கத்தாலே, ஆனாயனான தான் மீனோடேனமும் ஆனான் என்றுமாம். அன்றியே, **"என்னில்"** என்று அஞ்சாம் வேற்றுமையாய், என் நிமித்தமாகப் பண்ணினவை அஸங்க்யாதங்கள் என்றுமாம். சங்கு - பேரிலக்கம்; ஸங்கமுமாம். 8.

ச— "அங்கே அநுபவிக்கவேணும்" என்றும் ஆசைப்பட, அவன் "திருநகரியேறப் போகவேணும், ஆழ்வாரை அநுபவிக்கவேணும்" என்று ௭ யாரியாநின்றான். 7.

அ— மெலிவாலே வளை சரியாநின்றது. "சரிகின்றன" என்றும் சொல்லுவர். ௭ (பாரியாநின்றான்) உத்யோகியாநின்றான். "ஏழ்விடை கொண்டான்; ஏழ்வையம் உண்டான்; தன் தாமம் செய்து என் எண்தான் ஆனானே" என்று அந்வயம். 7.

ஜீ— நின்றது. "சரிகின்றன" என்றும் சொல்லுவர்கள். ௭(பாரியாநின்றான்) உத்யோகியாநின்றான். "ஏழ்விடை கொண்டான்; ஏழ்வையம் உண்டான்; தன் தாமம் செய்து என் எண்தான் ஆனான்" என்று அந்வயம். 7.

இ— அவ:— எட்டாம் பாட்டில் — என்பக்கல் ஸங்கஶாதிஶயத்தாலே என்னைப் பற்ற அவன் பட்டதுக்கு ஓரளவில்லை என்கிறார்.

வ்யா:—(ஆனான் ஆனாயன்) ஆனாயன் ஆனான்; கையிலே கோலைக் கொடுத்து, 'பசு மேய்த்து வா'' என்னலாம்படி இடையனாய்ப் பிறந்த மெய்ப்பாடு. அவ்வளவேயோ? (மீனோடு ஏனமும் தான் ஆனான்) ஸர்வாதிகனான தானிறே திர்யக் ஸஜாதீயனானான். அவன் க்ரமத்திலே பிறக்கச்செய்தேயும், அநுஸந்தாநத்தில் பதற்றத்தாலே ஏககாலத்திலே இரண்டவதாரம்போலே சொல்லுகிறார். (ஆனான்) வடிவும் சொலவும் செயலும் ஜாதிக்கு அடுத்தவையாயிருக்கை. இதுக்கு ஹேது வென்? என்னில்: (என்னில் தானாய சங்கே) என்பக்கல் தனக்கு உண்டான ஸங்கஶாதிஶயத்தாலே என்னுதல்; என்னைக் குறித்துத் தான் பண்ணின அவதாரங்கள் ஶங்கம் என்கிற மஹாஸங்க்யைக்குப் போரும். என்னில் - என்னைக் குறித்து, தானாய - தான் ஆனவை, சங்கே - ஶங்கத்தளவேயன்றிறே. 8.

ஈ— அவ:— எட்டாம் பாட்டு. a என்னைச்சுட்டி அவன் பிறந்த பிறவிகளுக்கு ஒரு முடிவில்லை என்கிறார்.

வ்யா:—(ஆனான் ஆனாயன்) b இடையனாய்ப் பிறந்து, முடிசூட இராதே ஜாத்யுசிதமான கோரக்ஷணத்திலே அதிகரித்தான்; c இடையனாய்ப் பிறந்த d மெய்ப்பாடு.

அ— எட்டாம் பாட்டு. (ஆனான் ஆனாயன் இத்யாதி) a''என்னில் தானாய சங்கே'' என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (என்னைச்சுட்டி இத்யாதி).

b ''ஆயன் ஆனான்'' இத்யநபிதாய, ''ஆனாயன் ஆனான்'' - ஆக்களை ரக்ஷிக்கும் ஆயனானான் இதி வக்துர்பாவமாஹ (இடையனாய் இதி) ஆக்களுக்கு நாதன் என்றபடி. c,d (இடையனாய்ப் பிறந்த மெய்ப்பாடு இதி) ஏதஸ்மிந் வாக்யே, A ''கன்றுமேய்த்து விளையாட வல்லானை—தடம்பருகு கருமுகிலை'' இத்யத்ரோச்யமாநவத்ஸஸம்ரக்ஷணப்ரகாரா விவக்ஷிதா:— இதி வதந்தி; தே ச ப்ரகாரா: - பாநீயபாநாநபிஜ்ஞாந் வத்ஸாந், ஸ்வயம் தடாகே பாநீயம் பிபந் ததைவ பாயயதி; ஏதாத்ருஶாகாரைஸ் த்ருணநி போஜயதீத்யேவமாதய:. c,e யத்வா,

---

ஜீ— எட்டாம் பாட்டு. (ஆனான் ஆனாயன் இத்யாதி) a''என்னில் தானாய சங்கே'' என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (என்னைச்சுட்டி இத்யாதி).

b '' ஆயன் ஆனான் '' இத்யநபிதாய, '' ஆனாயன் ஆனான் '' - ஆக்களை ரக்ஷிக்கும் ஆயனானான் இதி வக்துர்பாவமாஹ (இடையனாய் இத்யாதி) ஆக்களுக்கு நாதன் என்றபடி. c,d (இடையனாய்ப் பிறந்த மெய்ப்பாடு இதி) ஏதஸ்மிந் வாக்யே, A ''கன்றுமேய்த்து விளையாட வல்லானை—தடம்பருகு கருமுகிலை'' இத்யத்ரோச்யமாநவத்ஸஸம்ரக்ஷணப்ரகாரா விவக்ஷிதா:— இதி வதந்தி; தே ச ப்ரகாரா: - பாநீயபாநாநபிஜ்ஞாந் வத்ஸாந், ஸ்வயம் தடாகே பாநீயம் பிபந் ததைவ பாயயதி; ஏதாத்ருஶாகாரைஸ் த்ருணநி போஜயதீத்யேவமாதய:. c,e யத்வா,

---

A பெரியதிருமொழி 2.5.3.

ஈ—அவ்வளவிலேதான் விட்டானோ?—(மீனோடு ஏனமும் e தான் ஆனன்)கிழே க்ருஷ்ணாவதாரத்தைச் சொன்னார்; அது * அயர்வறும் அமரர்களதிபதியாயிருந்தவோபாதியிறே இவ்வவதாரங்களைப் பற்ற; f ஸர்வாதி₄கனான f₂ தான் இவற்றோடு ஸஜாதீயனானான்; g அவன் க்ரமத்திலே பிறக்கச்செய்தே, அநுஸந்தா₄நத்தில் h பதற்றத்தாலே ஏககாலத்திலே இரண்டு அவதாரம்போலேயிருக்க அருளிச்செய்கிறார். (i ஆனன்) j வடிவும் செயலும் சொலவும் தஜ்ஜாதீயர்க்கு அடுத்தவையாயிருக்கை. k இவைதான் வித்₃யாவதாரங்கள். இதுக்கு அடி என்னென்னில்,—(என்னில் தானாய சங்கே) என்பக்கல்

அ—''தான்'' என்கிறத்தை அபகர்ஷித்து, அத்தை கோ₃பாலபா₃லன் விஷயமாக்கிக்கொண்டு அருளிச்செய்கிறார் (இடையனாய் இத்யாதி₃) d மெய்ப்பாடு - மெய்ப்பாட்டாலே. e,f ''தான்'' இத்யஸ்யார்த்த₂மாஹ (ஸர்வாதி₄கனான தான் இதி) f₂ (தான் இவற்றோடு ஸஜாதீயனானான்) என்கிறவிடத்திலே, 1. ''யஜ்ஜாதீயோ யாத்₃ருஶோ யத்ஸ்வபா₄வ: பாத₃ச்சா₂யாம் ஸம்ஶ்ரிதோ யோऽபி கோऽபி। தஜ்ஜாதீயஸ் தாத்₃ருஶஸ் தத்ஸ்வபா₄வ: ஶ்லிஷ்யத்யேநம் ஸாந்த்₃ரோ வத்ஸலத்வாத்॥'' இத்யாத்₃யநுஸந்தே₄யம். g,h ''மீனோடேனமும்'' என்று ஏககாலீநமாகச் சொல்லுவானென்? என்ன (அவன் க்ரமத்திலே இத்யாதி₃) அவதார விஷயமான அநுஸந்தா₄நத்தில் த்வராதிஶயத்தாலே ஒருகாலே அநுஸந்தி₄த்து, அது உருவெளிப்பாடு பர்யந்தமாய், அத்தாலே ஏககாலமாகவே பு₃த்₃தி₄பண்ணி, ''மீனோடு'' என்று ஏககாலமாக அருளிச்செய்கிறார் என்றபடி. h பதற்றம் - த்வரை. i,j ''ஆனன்'' என்ற மெய்ப்பாட்டுக்குத் தாத்பர்யம் (வடிவும் இத்யாதி₃) k அவதாரிகையில் ''என்னைச்சுட்டி'' (a) என்கைக்கு - இவ்வவதாரங்களால் இவர்க்கு உபகாரம் ஏதென்ன (இவைதான் இத்யாதி₃) மத்ஸ்யாவதாரே மநும் ப்ரதி உபதி₃தே₃ஶ; வராஹாவதாரே ஸ்ரீபூ₄மிநீளா: ப்ரதி உபதி₃தே₃ஶேதி பா₄வ:. வித்₃யாப்ரவர்த்தநஞ்ச சேதநவிஷயீகரணார்த்த₂ம் இதி ஹ்ருத₃யம். யத்₃வா, அவதாராந்தரங்களை எடாமல், மூன்று அவதாரங்களை எடுத்ததுக்குத் தாத்பர்யம் (இவை இத்யாதி₃) வித்₃யாப்ரதா₄ந லக்ஷணோபகாராநுஸந்தா₄நத்தாலே மூன்று அவதாரத்தையும் அநுஸந்தி₄த்தார் என்றபடி.

ஜீ—''தான்'' என்கிறத்தை அபகர்ஷித்து, அத்தை கோ₃பாலபா₃ல விஷயமாக்கிக்கொண்டு அருளிச்செய்கிறார் (இடையனாய் இத்யாதி₃) d மெய்ப்பாடு - மெய்ப்பாட்டாலே. e,f ''தான்'' இத்யஸ்யார்த்த₂மாஹ (ஸர்வாதி₄கனான தான் இதி) f₂ (தான் இவற்றோடு ஸஜாதீயனானான்) என்கிறவிடத்தில், 1. ''யஜ்ஜாதீயோ யாத்₃ருஶோ யத்ஸ்வபா₄வ: பாத₃ச்சா₂யாம் ஸம்ஶ்ரிதோ யோऽபி கோऽபி! தஜ்ஜாதீயஸ் தாத்₃ருஶஸ் தத்ஸ்வபா₄வ: ஶ்லிஷ்யத்யேநம் ஸாந்த்₃ரோ வத்ஸலத்வாத்॥'' இத்யாத்₃யநுஸந்தே₄யம். g,h ''மீனோடேனம்'' என்று ஏககாலீநமாகச் சொல்லுவானென்? என்ன (அவன் க்ரமத்திலே இத்யாதி₃) அவதார விஷயமான அநுஸந்தா₄னத்தில் த்வராதிஶயத்தாலே ஒருகாலே அநுஸந்தி₄த்து, அது உருவெளிப்பாடு பர்யந்தமாய், அத்தாலே ஏககாலமாகவே பு₃த்₃தி₄பண்ணி, ''மீனோடு'' என்று ஏககாலமாக அருளிச்செய்கிறார் என்றபடி. h பதற்றம் - த்வரை. i,j ''ஆனன்'' என்ற மெய்ப்பாட்டுக்குத் தாத்பர்யம் (வடிவும் இத்யாதி₃) k அவதாரிகையில் ''என்னைச்சுட்டி'' (a) என்கைக்கு-இவ்வவதாரங்களாலே இவர்க்கு உபகாரம் ஏதென்ன (இவைதான் இத்யாதி₃) மத்ஸ்யாவதாரே மநும் ப்ரதி உபதி₃தே₃ஶ; வராஹாவதாரே ஸ்ரீபூ₄மிநீளா: ப்ரதி உபதி₃தே₃ஶேதி பா₄வ:. வித்₃யாப்ரவர்த்தநஞ்ச சேதநவிஷயீகரணார்த்த₂ம் இதி ஹ்ருத₃யம். யத்₃வா, அவதாராந்தரங்களை எடாமல், மூன்று அவதாரங்களை எடுத்ததுக்குத் தாத்பர்யம் (இவை இத்யாதி₃) வித்₃யாப்ரதா₄ந லக்ஷணோபகாராநுஸந்தா₄நத்தாலே மூன்று அவதாரத்தையும் அநுஸந்தி₄த்தார் என்றபடி.

9. சங்கு சக்கரம், அங்கை யிற்கொண்டான்
எங்கும் தானாய, நங்கள் நாதனே.

ஆ— 9. வ்யா:— (சங்குசக்கரம்) இப்படி எனக்காக ஸர்வயோநிகளிலும் வந்து பிறந்தருளுகிறான்; தன்னுடைய திருக்கைகளில் அழகிய திருவாழியும் திருச்சங்கமும் ஏந்தி, அவ்வழகோடுகூட வந்து பிறந்தான் என்கிறார். 9.

ஒ— அவ:— ஒன்பதாம் பாட்டில் — ஆஶ்ரிதரோடு ஸம்ஶ்லேஷிக்கைக்காக எங்கும் வந்து திருவவதாரம் பண்ணும்போது தன்னுடைய ஐஶ்வரமான சிஹ்நங்களைக் கொண்டு வந்து திருவவதாரம் பண்ணியருளும் என்கிறார்.

வ்யா:— (எங்கும் என்று தொடங்கி) பலவிடத்திலும் தேவமநுஷ்யாதி ரூபேண வந்து திருவவதாரம் பண்ணியருளி எங்களை வஶீகரித்து அடிமைகொண்டவன். (எங்கும் தானாய) வ்யாப்தியாகவுமாம். 9.

ஈ—தனக்குண்டான ஸங்க்யாதிஶயத்தாலே என்னுதல்; என்னைக்குறித்து, l தான் ஆனவை-m தன் அவதாரங்கள், n சங்கே - மஹாஸங்க்யை என்னுமத்தனை. o அங்ஙனன்றிக்கே, சங்கே-மஹாஸங்க்யையளவோ? முடிவுண்டோ? 1. "ஏஹூநி" (பஹூநி) என்னுமித்தனை. 8.

அ—l,m''தான் ஆனவை''என்றதுக்கு விவரணம் (தன் அவதாரங்கள்) என்றது. n''சங்கு''-மஹாஸங்க்யாவிஶேஷம். ''ஒன்று, பத்து, நூறு'' என்று சிற்றிலக்கம் சொல்லுகிறபடியே, ''கோடி, மஹாகோடி, ஶங்கம், மஹாஶங்கம்'' என்று பேரிலக்கம் சொல்லக்கடவதிறே. அந்தப் பேரிலக்கமான ஶங்கமாகும் - ''சங்கு'' என்றது. o மூன்றும் அர்த்தத்துக்கு ஏகாரம்-ஸ்வரத்திலே. ''என்னில் தானாய சங்கத்தாலே தான் ஆனயன் ஆனான்; அவ்வளவுமன்றிக்கே, மீனோடேனமும் ஆனான்'' இதி ப்ராதமிகார்த்தாநுகுணாந்வய:. க்ருஷ்ணாவதார: பராங்குஶார்யநிமித்த: இத்யத்ர ப்ரமாணம் A ''ஆட்கொள்ளத்தோன்றிய ஆயர்தங்கோவினை'' இதி. ''தான் ஆனயன் ஆனான்; மீனோடேனமும் ஆனான்; என்னில் தானாய சங்கே'' இதி த்விதீய த்ருதீயயோர் நிர்வாஹயோரந்வய:. ''ஆனயன் ஆனான் தான் மீனோடேனமும் ஆனான்; என்னில், தானாய சங்கே'' என்று உரை அந்வயம். 8.

ஜீ—l,m''தான் ஆனவை'' என்றதுக்கு விவரணம் (தன் அவதாரங்கள்) என்றது. n சங்கு-மஹாஸங்க்யாவிஶேஷம், ''ஒன்று, பத்து, நூறு'' என்று சிற்றிலக்கம் சொல்லுகிறபடியே, ''கோடி, மஹாகோடி, ஶங்கம், மஹாஶங்கம்'' என்று பேரிலக்கமும் சொல்லக்கடவதிறே. அந்தப் பேரிலக்கமான ஶங்கமாகும் - ''சங்கு'' என்றது. o மூன்றும் அர்த்தத்துக்கு ஏகாரம் - ஸ்வரத்திலே. ''என்னில் தானாய சங்கத்தாலே தான் ஆனயன் ஆனான்; அவ்வளவுமன்றிக்கே, மீனோடேனமும் ஆனான்'' இதி ப்ராதமிகார்த்தாநுகுணாந்வய:. க்ருஷ்ணாவதார: பராங்குஶார்யநிமித்த: இத்யத்ர ப்ரமாணம் A '' ஆட்கொள்ளத்தோன்றிய ஆயர்தங்கோவினை '' இதி. ''தான் ஆனயன் ஆனான்; மீனோடேனமும் ஆனான்; என்னில் தானாய சங்கே'' இதி த்விதீயத்ருதீயயோர் நிர்வாஹயோரந்வய:. 8.

A பெரியாழ் - திரு 1-7-11

ப— 9. அவ:— அநந்தரம், அவதாரங்கள் எல்லாவிடத்திலும் அஸாதா₄ரண சிஹ்நயுக்தன் என்கிறுர்.

எங்கும்—எல்லா ப்ரதே₃ஶத்திலும், தாஞய—(அவதாரமுக₂த்தாலே) தான் ஸங்கிஹிதஞை, நங்கள்—நம்முடைய, நாதன்—நாதன், அம்—(வெறும்புறத்திலே) அழகிய, கையில்—திருக்கையிலே, சங்கு சக்கரம்—(ஆஶ்ரிதர்க்கு அநுப₄ரவ்யமான) ஶங்க₂சக்ரங்களை, கொண்டான்—கொண்டான். 9.

இ— அவ:— ஒன்பதாம் பாட்டில்—இப்படி அவதரிக்குமிடத்தில் ஐஶ்வரமான சிஹ்நங்களோடே வந்து அவதரிக்கும் என்கிறுர்.

வ்யா:— (சங்கு சக்கரம் அங்கையில் கொண்டான்) வெறும்புறத்திலே துவக்கவல்ல கையிலே தி₃வ்யாயுத₄ங்களை தா₄ரித்தான். தி₃வ்யாயுத₄ங்கள் எல்லா அவதாரங்களிலுமுண்டோ? என்னில்; எங்கும் உண்டு; ராஜாக்கள் கறுப் புடுத்துப் புறப்பட்டால், அந்தரங்க₃ர் அபேக்ஷித த₃ஶையிலே வந்து முகங்காட்டு கைக்காகப் பிரியத் திரிவர்கள்; அதுபோலே தோற்ருதேயும் நிற்பர்கள். A "கூரார் ஆழி வெண் சங்கேந்தி" என்னும் இவர்க்கு அப்படியேயிறே தோற்றுவது. (எங்கும் தாஞய) தே₃வாதி₃ஜாதிபே₄த₃ங்கள்தோறும் வந்து அவதரிக்கும். வ்யாப்தியாகவுமாம். (நங்கள் நாதனே) நம்மை எழுதிக்கொள்ளுகைக்காக. 9.

ஈ— அவ:— ஒன்பதாம் பாட்டு. a இப்படி அவதரிக்குமிடத்தில் ஐஶ்வரமான சிஹ்நங்களோடே வந்து அவதரிக்கும் என்கிறுர்.

வ்யா:— (சங்குசக்கரம் அங்கையில் கொண்டான்) b சிலரை வஶீகரிக்க நினைத்தவர்கள் கையிலே மருந்துகொண்டு திரியுமாபோலே, அவதாரங்கள்தோறும் தி₃வ்யாயுத₄ங்களோடே வந்து அவதரிக்கும். c தி₃வ்யாயுத₄ங்கள் எல்லா அவதாரங்களிலும்

அ— ஒன்பதாம் பாட்டு. (சங்கு சக்கரம் இத்யாதி₃) a "சங்கு சக்கரம் அங்கையில் கொண்டான் எங்கும் தாஞய" என்கிற பத₃ங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை (இப்படி இத்யாதி₃).

b (சிலரை வஶீகரிக்க இதி) B "ஆட்கொள்ளத்தோன்றிய ஆயர்தங்கோவினை" 1. "பரி த்ராணுய ஸாதூ₄நாம்" இத்யாதி₃. 2. "யதா₃ யதா₃ ஹி த₄ர்மஸ்ய" இத்யாதி₃. அஸ்மிந் ஶ்லோகத்₃வயே த₄ர்மஶப்₃த₃: - ப₄க₃வத்₃ருசிபர:. c தடஸ்த₂ஶங்கையை அநுவதி₃த்துப் பரிஹரிக் கிறுர் (தி₃வ்யாயுத₄ங்கள் இத்யாதி₃) d, e தர்ஹி ஸர்வேஷாம் கத₂ம் ந ப்ரகாஶந்த இத்யத்ராஹ

ஜீ— ஒன்பதாம் பாட்டு. (சங்கு சக்கரம் இத்யாதி₃) a "சங்கு சக்கரம் அங்கையில் கொண்டான் எங்கும் தாஞய" என்கிற பத₃ங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை (இப்படி இத்யாதி₃).

b (சில்ரை வஶீகரிக்க இதி) B "ஆட்கொள்ளத்தோன்றிய ஆயர்தங்கோவினை" 1. "பரி த்ராணுய ஸாதூ₄நாம்" இத்யாதி₃. 2. "யதா₃ யதா₃ ஹி த₄ர்மஸ்ய" இத்யாதி₃. அஸ்மிந் ஶ்லோகத்₃வயே த₄ர்மஶப்₃த₃: - ப₄க₃வத்₃ருசிபர:. c தடஸ்த₂ஶங்கையை அநுவதி₃க்கிறுர் (தி₃வ்யா

A 6-9 1. B பெரியாழ்-திரு 1-7-11.

10. நாதன் ஞாலங்கொள், பாதன் என்னம்மான்
ஓதம் போல்கிளர், வேத நீரனே.

ஆ— 10. வ்யா:— (நாதன்) இப்படி எனக்காக அஸங்க்₂யேயமான திருவவதாரங்களைப்பண்ணியருளின இவனுடைய இந்த நிரவதி₄கமான ஆஶ்ரித வ்யாமோஹத்தைப் பேசுமிடத்தில், கடலோதம் கிளர்ந்தாற்போலே கிளர்ந்துகொண்டு அவனைப் பேசக் கடவிய வேத₃ங்களே பேசவேண்டாவோ? என்கிறார். 10.

ஈ—உண்டோ? என்னில்,—எங்கும் உண்டு; d ராஜாக்கள் e கறுப்புடுத்துப் புறப்பட்டால், அந்தரங்க₃ர் அபேக்ஷித த₃ஶையிலே முகங்காட்டுகைக்காகப் பிரியத் திரிவர்கள்; அது போலே தோற்றுதேயும் நிற்பர்கள். fA "கூராராழி வெண் சங்கேந்தி - வாராய்" என்னும் இவர்களுக்கு அப்படியேயிறே தோற்றுவது. (சங்கு சக்கரம்) g வெறும் புறத்திலே h ஆலத்திவழிக்கவேண்டும் கையிலே தி₃வ்யாயுத₄ங்களை த₄ரித்தான். (எங்கும் i தானாய) i,j தே₃வமநுஷ்யாதி₃பே₄த₃ங்கள்தோறும் தான் வந்து அவதரித்து உளனாய். i,k அன்றிக்கே, ஒருவனைப் பிடிக்க நினைத்து ஊரை வளைவாரைப்போலே, தம்மை விஷயீகரிக்கைக்காக வ்யாபித்தபடியைச் சொல்லுதல். (நங்கள் நாதனே) l நம்மை எழுதிக்கொள்ளுகையே ப்ரயோஜநமாக. 9.

அ—(ராஜாக்கள் இத்யாதி₃) e (கறுப்புடுத்து) நீலவஸ்த்ரம் த₄ரித்து. f அவன் அப்படி மறைத்துக் கொண்டிருந்தால் "உண்டு" என்று இவர் அறிந்தபடி என்னென்ன (கூராராழி என்று தொடங்கி) ஸாத₄ாரணாகாரத்தையொழிய ஆஶ்ரிதவிரோதி₄நிரஸநத்தில் கூர்மையையுடைய திருவாழியையும், ஆஶ்ரிதர்க்கு அநுப₄ாவ்யமான பரிஶுத்₃த₄மான வர்ணத்தையுடைய பாஞ்சஜந்யத்தையும் ஏந்தி. g "அங்கையிலே சங்குசக்கரங்களையும் கொண்டான்" இதி ஶ்ருதி₃ நித₄ாய அர்த்த₂மாஹ (வெறும் புறத்திலே இதி) h ஆலத்திவழிக்க-நீராஜநையெடுக்க. j "எங்கும் தானாய" என்று - அவதாரபரமானபோது, "நங்கள் நாதனுகைக்காக எங்கும் தானாய அங்கையில் சங்குசக்கரம் கொண்டான்" என்று அந்வயம். k வ்யாப்திபரமானபோது, "சங்குசக்கரம் அங்கையில் கொண்டான், நங்கள் நாதனுகைக்காக எங்கும் தானானான்" என்று அந்வயம். l (நம்மை எழுதிக்கொள்ளுகையே ப்ரயோஜநமாக) 1. 'நாத₂ரு-யாச்ஞாயாம்" என்று தாத்பர்யம். இதுக்கு இச்சையிலே தாத்பர்யம், 2. "ஆஶிஷி நாத₂:" என்றும் உண்டாகையாலே. 9.

ஜீ—யுத₄ங்கள் இத்யாதி₃) d,e தர்ஹி ஸர்வேஷாம் கத₂ம் ந ப்ரகாஶந்த இத்யத்ராஹ (ராஜாக்கள் இத்யாதி₃) f அவன் இப்படி மறைத்துக்கொண்டிருந்தால், "உண்டு" என்று இவர் அறிந்தபடி என்னென்ன (கூராராழி இத்யாதி₃) ஸாத₄ாரணாகாரத்தையொழிய, ஆஶ்ரிதவிரோதி₄நிரஸநத்தில் கூர்மையையுடைய திருவாழியையும், ஆஶ்ரிதர்க்கு அநுப₄ாவ்யமான வர்ணத்தையுடைய பாஞ்சஜந்யத்தையும் ஏந்தி. g "அங்கையிலே சங்குசக்கரங்களையும் கொண்டான்" இதி ஶ்ருதி₃ நித₄ாய அர்த்த₂மாஹ (வெறும் புறத்திலே இத்யாதி₃) h ஆலத்திவழிக்க - நீராஜநையெடுக்க. i,j "எங்கும் தானாய" என்று - அவதாரபரமானபோது, "நங்கள் நாதனுகைக்காக எங்கும் தானாய அங்கையில் சங்குசக்கரம் கொண்டான்" என்று அந்வயம். i,k வ்யாப்திபரமானபோது, "சங்குசக்கரம் அங்கையில் கொண்டான் நங்கள் நாதனுகைக்காக எங்கும் தானானான்" என்று அந்வயம். l தானாய - தானாய் என்னுதல்; தானானான் என்னுதல். 9.

A 6-9-1.

ஒ— அவ:— பத்தாம் பாட்டில் — எம்பெருமானுடைய படி வேதைகஸமதிகம்யம் என்கிறார்.

வ்யா— (நாதன் என்று தொடங்கி) ஸர்வேஶ்வரனாய்வைத்து த்ரைவிக்ரமமான படியைக் காட்டி என்னை அடிமைகொண்டவன். (ஓதம் என்று தொடங்கி) தன் குணாநுஸந்தாநத்தாலே ஓதம்போலே கிளராநின்றுள்ள வேதங்களாலே ப்ரதிபாத்யமான நீர்மையுடையவன். 10.

ப— 10. அவ:— அநந்தரம், ஏவம்விதஸ்வபாவன் வேதைகஸமதிகம்யன் என்கிறார்.

நாதன்—நிருபாதிக ஸர்வஶேஷியாய், (அந்த ஶேஷித்வ நிர்வஹணத்துக்காக) ஞாலம்—ஸமஸ்த ஜகத்தோடும், கொள்—(தாரதம்யம் பாராமல்) செறிந்த, பாதன்-திருவடிகளையுடையனாய், என்னம்மான்-(அத்தாலே) எனக்கு அஸாதாரண ஶேஷியானவன், ஓதம்போல்—ஸமுத்ரம்போல், கிளர்—கிளர்ந்து (ஸ்தோத்ரம் பண்ணி ஸ்வஹ்ருதயத்தை வெளியிடுகிற), வேதம்—வேதங்களாலே சொல்லப்பட்ட, நீரன்—நீர்மையையுடையவன். 10.

ஈ— அவ:— பத்தாம் பாட்டில் — இவன்படியைப் பேசும்போது, கடல்கிளர்ந்தாற்போலே வேதமே பேசவேண்டாவோ? என்கிறார்.

வ்யா:— (நாதன்) ஸர்வநியந்தாவானவன். (ஞாலம்கொள் பாதன்) வஸிஷ்ட சண்டாளவிபாகரஹிதமாக எல்லார் தலைகளிலும் திருவடிகளைப் பரப்பினவன். (என்னம்மான்) இம்மேன்மையையும் நீர்மையையும் காட்டி என்னை அநந்யார்ஹனாக்கினவன். அதவா (நாதன்) முதற்பாட்டில் சொன்ன நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவன். (ஞாலம்கொள் பாதன்) இரண்டாம்பாட்டில் சொன்ன அவதார ஸௌலப்யத்தை உடையவன். (என்னம்மான்) நான் நின்ற நிலையிலே நின்று அநுபவிக்கலாம்படி, மூன்றும்பாட்டில் சொன்ன திருமலையிலே வந்து நின்றவன். (ஓதம்போல் கிளர் வேத நீரனே) இவனுடைய இப்படிகளைச் சொல்லப்புக்கால், கடல்கிளர்ந்தாற்போலே கிளராநின்றுள்ள வேதத்தாலே ப்ரதிபாதிக்கப்பட்ட நீர்மையையுடையவன். நீர்மையாகிறது - ஆர்ஜவகுணம். 10.

ஈ— அவ:— பத்தாம் பாட்டு. உ அவன் நீர்மையைப் பேசப்புக்கு, "நம்மால் பேசப்போமோ? கடல் கிளர்ந்தாற்போலே வேதமே பேசவேண்டாவோ?" என்கிறார்.

அ— பத்தாம் பாட்டு. (நாதன் இத்யாதி) உ (அவன் நீர்மையை) "நீர்" என்று - நீர்மையாய், ஆர்ஜவத்தைச் சொல்லி, வேதத்தாலே ப்ரதிபாதிக்கப்பட்ட ஆர்ஜவகுணத்தையுடையவன் என்றபடி.

ஜீ— பத்தாம் பாட்டு. (நாதன் இத்யாதி) உ (அவன் நீர்மை இத்யாதி) "நீர்" என்று நீர்மையாய், ஆர்ஜவத்தைச் சொல்லி, வேதத்தாலே ப்ரதிபாதிக்கப்பட்ட ஆர்ஜவகுணத்தையுடையவன் என்றபடி.

**11. நீர்புரை வண்ணன், சீர்சட கோபன்
நேர்த லாயிரத்து, ஓர்த லிவையே.**

ஆழ்வார் திருவடிகளே ஶரணம்.

ஆ— 11. வ்யா:— (நீர்புரை) அதிஶீதளமாய் ஸர்வபோ₄க்₃யமான திருநிறத்தை யுடையனாயிருந்த எம்பெருமானுடைய ஆஶ்ரிதவாத்ஸல்யமாகிற மஹாகு₃ணத்தை உள்ளபடியே பேசிற்று இத்திருவாய்மொழி என்கிறார். 11.

திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவடிகளே ஶரணம்.

ஈ— வ்யா:— (நாதன்) ஸர்வநியந்தாவானவன். (ஞாலம்கொள் பாதன்) வஸிஷ்ட₂ சண்டா₂ள விபா₄க₃ரஹிதமாக எல்லார் தலைகளிலும் திருவடிகளைப் பரப்பினவன். (என்னம்மான்) b இம்மேன்மையையும், நீர்மையையும் காட்டி என்னை அநந்யார்ஹமாக்கினவன். அத₂வா, (நாதன்) முதற்பாட்டில் சொன்ன ஶேஷித்வத்தையுடையவன். (ஞாலம் கொள் பாதன்) இரண்டாம் பாட்டில் சொன்ன அவதார ஸௌலப்₄யத்தையுடையவன். (என்னம்மான்) எனக்குக் கிட்டலாம்படி திருமலையிலே வந்து என்னை அடிமைகொண்டவன். c மூன்றும் பாட்டில் "கண்ணுவான்" என்றத்தை நினைக்கிறார். (ஓதம் இத்யாதி₃) d இவனுடைய e இந்நிலைமைகளைப் f பேசும்போது, g கடல் h கிளர்ந்தாற்போலே கிளராநின்றுள்ள வேத₃த்தாலே ப்ரதிபாதி₃க்கப்பட்ட நீர்மையையுடையவன். நீர்மையாவது - ஆர்ஜவகு₃ணம். 10.

அ— b "நாதன் ஞாலம்கொள் பாதன் என்னம்மான்" இதி பத₃ஸங்க₃திம் ஶ்ருதி₃ நித₃ர்யாஹ (இம்மேன்மையையும் இதி) c பூர்வவாக்யம் விவ்ருணோதி (மூன்றும் பாட்டில் இதி) d...h இப்போது, "ஓதம்போல் கிளர் வேதம்" என்று விஶேஷித்ததுக்குக் கருத்தென்? என்ன (இவனுடைய இந்நிலைமைகளை இத்யாதி₃) e இந்நிலைமைகளை - இஸ்வபா₄வங்களை. f பேசும்போது என்றது- பேசப்புக்கால் என்றபடி. g,h 1. "ஸைஷானந்த₃ஸ்ய மீமாம்ஸா ப₄வதி" 2. "ஸ்தப்₃தோ₄ஸி யுத தமாதே₃ஶமப்ராக்ஷ்ய:" 3. "ப்₃ரஹ்மவாதி₃னோ வத₃ந்தி—கிம் காரணம் ப்₃ரஹ்ம" இத்யாதி₃ ஸம்ரம்ப₄ங்களைப்பற்ற "ஓதம்போல் கிளர்" என்றது. g ஓதம்-ஸமுத்₃ரம், h கிளருகை - ஸம்ரம்பி₄க்கை. d...h "இந்நிலைமைகளைப் பேசும்போது கடல் கிளர்ந்தாற்போலே கிளரசநின்றுள்ள வேத₃ம் பேசவேண்டாவோ?" என்றபடி, d...f யத்₃வா, பேசும்போது-பேசப்புக்கால், "இந்நிலைமைகளை" என்னுமித்தனை இதி ஶேஷ: ; g,h ஶப்₃த₃ார்த்த₂ம் (கடல் இத்யாதி₃). நாதன் என்று தொடங்கி, அடைவே உரை அந்வயம். 10.

ஜீ— b கீழிரண்டு பத₃த்தையும் கூட்டிக்கொண்டு பா₄வம் (இம்மேன்மையையும் இத்யாதி₃) c பூர்வ வாக்யவிவரணம் (மூன்றும் பாட்டில் இத்யாதி₃) d...h இப்போது, "ஓதம்போல் கிளர் வேதம்" என்று விஶேஷித்ததுக்குக் கருத்தென்? என்ன (இவனுடைய இந்நிலைமைகளை இத்யாதி₃) f பேசும்போது-பேசப்புக்கால். g,h "கடல் கிளர்ந்தாற்போலே கிளராநிற்கும் வேத₃ம்: இப்படி கிளராநின்றுள்ள வேத₃த்தாலே ப்ரதிபாதி₃க்கப்பட்ட நீர்மையையுடையவன்" என்று கூட்டுவது. அத₂வா, நீர்மையுடையவன் என்னுமித்தனை ; நம்மால் பேசமுடியாது என்று வாக்யஶேஷம். e இந்நிலைமைகளை - இஸ்வபா₄வங்களை. g ஓதம் - ஸமுத்₃ரம். h கிளருகை - பொங்குகை. க்ரமேணாந்வய:. 10.

ஒ— அவ:— நிகமத்தில் — இத்திருவாய்மொழி, எல்லாத் திருவாய்மொழியிலும் ஆராய்ந்து சொல்லப்பட்டது என்கிறார்.

வ்யா:— (நீர்புரை வண்ணன் சீர்) உபாயஜ்ஞர்க்கு நினைத்தவிடத்திலே கொடுபோகலான நீரின் தன்மையையுடையவனுடைய குணத்தை. நேர்தல் - சொல்லுகை. ஓர்தல் - ஒப்பன என்னவுமாம். 11.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ப— 11. அவ:— அநந்தரம், இத்திருவாய்மொழி ஆர்ஜவகுணத்தினுடைய நிரூபணரூபம் என்று அருளிச்செய்கிறார்.

நீர் புரை—(ஒருக்கினவிடத்திலே சென்று பாயும்) நீரின் செவ்வைபோலே யிருக்கிற, **வண்ணன்**—ஸ்வபாவத்தையுடையவனுடைய, **சீர்**—ஆர்ஜவகுணத்தை, **சடகோபன்**—ஆழ்வார், **நேர்தல்**—நேர்ந்து அருளிச்செய்த, **ஆயிரத்து**—ஆயிரத்தில், **இவை**—இவை, **ஓர்தல்**—ஓர்தலை வடிவாகவுடைத்தாயிருக்கும். இது குறளடி வஞ்சித்துறை. 11.

வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர் திருவடிகளே ஶரணம்.

இ— அவ:— நிகமத்தில் — இத்திருவாய்மொழி, எல்லாத் திருவாய்மொழியிலும் ஆராய்ந்து சொல்லப்பட்டது என்கிறார்.

வ்யா:— (**நீர்புரை வண்ணன் சீர்**) நீரோடு ஒத்த ஸ்வபாவத்தையுடையவனுடைய ஆர்ஜவகுணத்தை. புரை - ஒப்பு. வண்ணம் - ஸ்வபாவம். நீரை வருந்தி மேட்டிலே ஏற்றினாற்போலே, ஸம்ஸாரிகள் விலங்கிப்போனது தனக்கு வழியாம்படி தான் செவ்வையனாகை. (**சடகோபன் நேர்தல்**) ஆழ்வார் அருளிச் செய்த. நேர்தல் - சொல்லுதல். (**ஆயிரத்து ஓர்தல் இவையே**) ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு இவை ஓர்ந்து அருளிச்செய்யப்பட்டவை. அதாகிறது - ஸம்ஸாரிகளுடைய அநார்ஜவத்தாலும் இழக்கவேண்டாதபடியான அவனுடைய ஆர்ஜவகுணத்தை அநுஸந்தித்து அருளிச்செய்கை. அன்றிக்கே, சேதநர்க்கு ஓரப்படுமவை — தந்தாம் செவ்வைக்கேட்டால் இழக்கவேண்டாதபடி அவனுடைய ஆர்ஜவகுணத்தைச் சொல்லப்பட்டவையாகையாலே, சேதநர்க்கு எப்போதும் அநுஸந்தேயம் என்கை. ஆயிரத்திலும் சடகோபன் நீர்புரை வண்ணனுடைய சீரை நேர்ந்த இவை ஓர்தல். 11.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

ஈ— நிக₃மத்தில், இத்திருவாய்மொழி, a எல்லாத்திருவாய்மொழியிலும் அவனுடைய ஆர்ஜவகு₃ணத்தை b ஆராய்ந்து சொன்ன பத்து என்கிறார்.

வ்யா:—(நீர் c புரை வண்ணன்) d ஆக, இத்திருவாய்மொழியில் சொல்லிற்று மிற்று ஸர்வேஶ்வரனுடைய ஆர்ஜவகு₃ணமாயிற்று. e நீரோடு ஒத்த ஸ்வபா₄வத்தை உடையவனுடைய e₂ ஆர்ஜவகு₃ணத்தையாயிற்று சொல்லிற்று. ஆர்ஜவகு₃ணமாவது - ஸம்ஸாரிகள் f விலங்கிப்போனது தனக்கு வழியாம்படி தான் செவ்வையனுகை. (சடகோபன் g நேர்தல்) இவைதான், இவ்வர்த்த₂த்தைக் கடக்க நின்று ஒருவன் கவிபாடுகையன்றிக்கே, இவ்வார்ஜவகு₃ணத்துக்கு இலக்கான ஆழ்வார் அருளிச் செய்தவை. (ஆயிரத்து ஓர்தல் இவையே) ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு h ஓர்ந்து அருளிச்செய்யப்பட்டவை. அதாவது:— ஸம்ஸாரிகளுடைய செவ்வைக்கேட்டை அநு ஸந்தி₄த்து அத்தால் இழக்கவேண்டாதபடி அவனுடைய ஆர்ஜவகு₃ணத்தை அநுஸந் தி₄த்து அருளிச்செய்யப்பட்டவை. அன்றிக்கே, ஸம்ஸாரிகளுக்கு i ஓரப்படுமவை என்னுதல். j "ஆயிரத்திலும் சடகோபன் நீர்புரை வண்ணனுடைய சீரை நேர்ந்த இவை ஓர்தல்" என்று அந்வயம்.

முதற்பாட்டில், நித்யவிபூ₄தியிலுள்ளாரோடு செவ்வையனாய்ப் பரிமாறும்படியை அருளிச்செய்தார்; இரண்டாம் பாட்டில், k லீலாவிபூ₄தியிலுள்ளாருடன் செவ்வை யனாய்ப் பரிமாறும்படியை அருளிச்செய்தார்; மூன்றாம் பாட்டில், இரண்டு விபூ₄தியி லுள்ளார்க்கும் முகங்கொடுக்கைக்காக, திருமலையிலே நிற்கிறபடியை அருளிச் செய்தார்; நாலாம் பாட்டில், அவ்வார்ஜவகு₃ணம் தம்மளவிலே ப₂லித்தபடியை அருளிச் செய்தார்; அஞ்சாம் பாட்டில், 'நான் அவன் கு₃ணங்களை விரும்புமாபோலே, அவனும் என் தே₃ஹத்தை விரும்பாநின்றான்' என்றார்; ஆறாம் பாட்டில், 'என்னுடைய தே₃ஹத்தினளவன்றிக்கே, என்னுடைய ஆத்மாவையும் கைக்கொண்டான்' என்றார்; ஏழாம் பாட்டில்,'அவ்வளவுமல்ல, நித்யவிபூ₄தியில் பண்ணும் ஆத₃ரத்தை என்பக்கலிலே

அ— நிக₃மம் (நீர்புரை இத்யாதி₃) a,b "எல்லாத் திருவாய்மொழியிலும் ஆராய்ந்து" என்று அத்வயம். எல்லாத் திருவாய்மொழியிற்காட்டிலும் ஆராய்ந்து சொன்ன என்றபடி. c புரை - ஒப்பு. நீருக்கு ஆர்ஜவமாவது - காட்டின வழியே போகை. d உபரி வக்ஷ்யமாணந்வயம் ஶ்ருதி₃ நித₄ாய ப₂லிதமாஹ (ஆக இத்திருவாய்மொழியில் இதி) e ஸப்₃த₃ார்த்த₂ம் (நீரோடு ஒத்த இத்யாதி₃) e₂ இவ்விடத்தில், "சீர்" என்று ஆர்ஜவகு₃ணத்தைச் சொல்லுகிறது. f (விலங்கி) நிஷேதி₄த்து. g நேர்தல் - சொல்லுதல். h (ஓர்ந்து) ஆராய்ந்து. i ஓரப்படுமவை என்றது - நித்யாநுஸந்தே₄யம் என்றபடி. j "ஓரப்படுமவை என்னுதல்" என்ற பக்ஷத்திலே அந்வயம் (ஆயிரத்திலும் சடகோபன் இத்யாதி₃) h "ஓர்ந்து அருளிச்செய்யப்பட்டவை" என்ற

ஜீ— நிக₃மம் (நீர்புரை இத்யாதி₃) a,b "எல்லாத் திருவாய்மொழியிலும் ஆராய்ந்து" என்று அந்வயம். c புரை-ஒப்பு. நீருக்கு ஆர்ஜவமாவது-காட்டின வழியே போகை. d வக்ஷ்யமாணந் வயத்தாலே ப₂லிதம் (ஆக இத்யாதி₃) e ஸப்₃த₃ார்த்த₂ம் (நீரோடு இத்யாதி₃) e₂ சீர் என்று-ஆர்ஜவ கு₃ணம். g நேர்தல்-சொல்லுதல். h ஓர்ந்து-ஆராய்ந்து. i ஓரப்படுமவை-நித்யாநுஸந்தே₄யம். j "ஓரப்படுமவை" என்ற பக்ஷத்தில் அந்வயம் (ஆயிரத்திலும் இத்யாதி₃) h "ஓர்ந்து அருளிச்

ந—பண்ணினுன்' என்றுர் ; எட்டாம் பாட்டில், '1 என்னைச்சுட்டி அவன் பிறந்த பிறவிகளுக்கு முடிவில்லை' என்றுர் ; ஒன்பதாம் பாட்டில், 'இப்படிப் பிறந்த பிறவிகள்தோறும் தன் ஐஶ்வர்யத்தோடே வந்து அவதரித்தான்' என்றுர் ; பத்தாம் பாட்டில், 'அவனுடைய ஆர்ஜவகு₃ணத்தைப் பேசும்போது வேத₃மே பேசவேணும்' என்றுர் ; நிக₃மத்தின், 'இத்திருவாய்மொழி ஸம்ஸாரிகளுக்கு எப்போதும் ஒக்க அநுஸந்தி₄க்கப்படும்' என்றுர். 11.

வடக்குத் திருவீதிப்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

அ—பக்ஷத்தில் அந்வயமாவது-'' ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு, நீர்புரை வண்ணனுடைய சீரை ஓர்ந்து நேர்ந்தவை இவை '' என்று கண்டுகொள்வது. k (உடன்) ஸஹ. ! (என்னைச் சுட்டி) என்னைக்குறித்து. 11.

ஆத்தான்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஜீ—செய்யப்பட்டவை '' என்ற பக்ஷத்திலே, ''ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு, சடகோபன் நீர்புரை வண்ணனுடைய சீரை ஓர்ந்து நேர்ந்தவை இவை '' என்று அந்வயம் கண்டுகொள்வது. !(என்னைச்சுட்டி) என்னைக்குறித்து. 11.

ராமாநுஜ ஜீயர் திருவடிகளே ஶரணம்.

த்₃ரமிடோ₃பநிஷத் ஸங்க₃தி - ஓடும்புள்

१. कौटिल्यवत्सु करणत्रितयेऽपि जन्तुष्वात्मीयमेव करणत्रितयैकरूप्यम् ।
सन्दर्श्य तानपि हरिस्स्ववशीकरोतीत्याचष्ट सान्द्रकरुणो मुनिरष्टमेन ॥ ८ ॥

1. கௌடில்யவத்ஸு கரணத்ரிதயேऽபி ஜந்துஷ்-
வாத்மீயமேவ கரணத்ரிதயைகரூப்யம் ।
ஸந்த₃ர்ஶ்ய தாநபி ஹரிஸ் ஸ்வவஶீகரோதீத்-
யாசஷ்ட ஸாந்த்₃ரகருணோ முநிரஷ்டமேந ॥ 8 ॥

அழகிய மணவாளச் சீயர் திருவடிகளே ஶரணம்.

த்₃ரமிடோ₃பநிஷத் தாத்பர்யரத்நாவளி - ஓடும்புள்

२. सूरीणां स्वैरसेव्ये स्वयमवतरति क्षुद्रदिव्यैकनेत्रे
गोपायर्थं धृताद्रौ श्रिततनुरसिके वामनीभावदृश्ये ।
सच्चित्तानन्यवृत्तौ विभवसमतनौ स्वायुधारूढहस्ते
नीचोच्चग्राह्यपादे निरुपधिमृजुतां नीरवर्णे जगाद ॥ ८ ॥

2. ஸூரீணாம் ஸ்வைரஸேவ்யே ஸ்வயமவதரதி க்ஷுத்₃ரதி₃வ்யைகநேத்ரே
கோ₃பாத்₃யர்த்த₂ம் த்₄ருதாத்₃ரௌ ஶ்ரிததநுரஸிகே வாமநீபா₄வத்₃ருஶ்யே।
ஸச்சித்தாநந்யவ்ருத்தௌ விப₄வஸமதநௌ ஸ்வாயுதா₄ரூட₄ஹஸ்தே
நீசோச்சக்₃ராஹ்யபாதே₃ நிருபதி₄ம் ருஜுதாம் நீரவர்ணே ஜகா₃த₃ ॥ 8 ॥

Released by Maaran's Dog ,Toronto , Canada

திருவாய்மொழி நூற்றந்தாதி

8. ஓடுமனஞ் செய்கையுரை யொன்றிநில்லா தாருடனே
கூடிநெடு மாலடிமை கொள்ளும்நிலை—நாடறிய
ஓர்ந்தவன்தன் செம்மை யுரைசெய்த மாறனென
ஏய்ந்துநிற்கும் வாழ்வா மிவை.

பெரிய ஜீயர் திருவடிகளே ஶரணம்.

அவ:— எட்டாம் பாட்டு. (ஓடு மனம்) இதில்—ருஜுக்களோடு குடிலரோடு வாசியற ஆர்ஜவகுணயுக்தன் என்று அநுஸந்தித்த ஆழ்வார் திவ்யஸூக்தியை அநுவதித்து அருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்: ஆஶ்ரயணம் அத்யந்த ஸரஸமாயிருந்ததேயாகிலும், ஆஶ்ரயிக்கிறவர்கள் கரணத்ரயத்தாலும் செவ்வைக் கேடான ஸம்ஸாரிகளாகையாலே பரிமாற்றத்தில் அருமை தட்டியிராதோ? என்னில்; நீரேரு மேடுகளிலே விரகாலே நீரேற்றுவாரைப்போலே, இவர்களுடைய செவ்வைக்கேடே தனக்குச் செவ்வையாம்படி இன்று ஆஶ்ரயிக்கிற இவர்களளவிலும் செவ்வையனாய்ப் பரிமாறும் ஆர்ஜவகுணயுக்தன் என்கிற ஓடும்புள்ளில் அர்த்தத்தை "ஓடுமனம் செய்கை" இத்யாதியாலே அருளிச் செய்கிறார்.

வ்யா:— (1) (ஸூரிணாம் ஸ்வைரஸேவ்யே) ஓடும்புள்ளேறி - வைநதேயர் முதலான நித்யஸூரிகளாலே யதேஷ்டஸேவ்யனுமாய்; (2) (ஸ்வயமவதரதி) வெம்மாவாய் கீண்ட செம்மா கண்ணனே-விரோதிநிரஸநஶீலனான க்ருஷ்ணனுமாய்; (3) (க்ஷாத்ரதிவ்யைகநேத்ரே) கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு - மநுஷ்யர்க்கும் வானவர்க்கும் நிர்வாஹகனாய்; (4) (கோபாத்யர்த்தம் த்ருதாத்ரௌ) வெற்பை ஒன்றெடுத்து - தன்னை ஆஶ்ரயித்த கோகோபரக்ஷணார்த்தமாக கோவர்த்தநத்தை தரித்தவனுமாய்; (5) (ஶ்ரிததநுரஸிகே) என் மெய் கலந்தானே - ஆஶ்ரிதருடைய ஶரீரத்தில் அத்யாதரயுக்தனுமாய்: (6) (வாமநீபாவத்ருஶ்யே) புலன்கொள்மாணாய் - பார்க்கிற பேர்களுடைய த்ருஷ்டிசித்தாபஹாரியான வாமநரூபத்தை யுடையனுமாய்; (7) (ஸச்சித்தாநந்யவ்ருத்தௌ) என் எண்தான் ஆனானே - ஆஶ்ரிதமநோரதாநுகூலவ்யாபாரத்தையுடையனுமாய்; (8) (விபவஸமதநௌ) ஆனான் ஆனாயன் மீனோடு ஏனமும் - தன்னுடைய விபவம்போலே அளவில்லாத மத்ஸ்யவராஹாதி ரூபங்களையுடையனுமாய்; (9) (ஸ்வாயுதாரூடஹஸ்தே) சங்கு சக்கரம் அங்கையில் கொண்டான்-அழகிய திருக்கைகளிலே அநவரதம் திருவாழி திருச்சங்குகளை தரித்துக்கொண்டிருக்குமவனாய்; (10) (நிஶ்சேஷாக்ராஹ்யபாதே) ஞாலங்கொள் பாதன் - நிம்நோந்நதவிபாகமற எல்லார் தலையிலும் பரப்பின திருவடிகளையுடையனுமாயிருக்கிற நீரவர்ணனான எம்பெருமானிடத்திலே நிருபாதிகமான ஆர்ஜவத்தை "ஓடும் புள்ளேறி" என்கிற தஶகத்திலே ஆழ்வார் உபபாதித்தருளினார் என்கிறார். 8.

வேதாந்த தேஶிகன் திருவடிகளே ஶரணம்.

Released by Maaran's Dog ,Toronto , Canada

திருவாய்மொழி முதற்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி
இவையும் ப்ரவேசம்

ஆ— (இவையும் அவையும்) இப்படி எம்பெருமான் என்னோடு ஸம்ஶ்லேஷித்தருளினான் என்கிறார்.

ஒ— ஒன்பதாம் திருவாய்மொழியில் — தன்னுடைய விபூதிஶ்ரவணத்தாலே ஸஞ்ஜாத பக்திகனாய், ஏவம்விதனான தன்னை ஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கவேணும் — என்ற அர்ஜுநனுக்கு அதுக்கீடான திவ்யசக்ஷுஸ்ஸைக் கொடுத்தருளி, அதிவிஸ்மயகரமான வைஶ்வரூப்யத்தைக் காட்டி அவனை உஜ்ஜீவிப்பித்தருளினாற்போலே, ஸர்வேஶ்வரனாய், ஶ்ரிய:பதியாய், பரமரஸிகனாய், ஆழ்வார் பக்தியிலே துவக்குண்டு அவரோடு ஏகரஸனான எம்பெருமான், கீழில் திருவாய்மொழியில் சொன்ன ஆர்ஜவகுணாநுஸந்தாநத்தாலே பிறந்த பக்த்யாரோக்யத்தையுடைய ஆழ்வாருக்கு, மஹிஷீ பரிஜநாதிரூபத்தாலே பல வகைகளாலும் தனக்கு போக்தாக்களானவர்களுக்கு நிரதிஶயபோக்யமான தன்னுடைய படிகளைக் காட்டி, அவர்கள் எல்லாரோடுங்கூட ஸம்ஶ்லேஷிக்கும்

தி.நூ— வ்யா:— (ஓடுமனம் செய்கையுரை ஒன்றி நில்லாதாருடனே கூடி) சஞ்சலமாய் A நின்றவா நில்லா நெஞ்சும், அதின் வழியைப் பின்செல்லும் வாக்காயங்களும், / ஒருமடைப்பட்டு நடக்கையன்றிக்கே, செவ்வைகெட நடக்கும் குடிலரோடு கூடிக் கலந்து. (நெடுமால் அடிமைகொள்ளும் நிலை) ஸர்வஸ்மாத்பரனானவன் அடிமைகொள்ளும் ஆர்ஜவஸ்வபாவத்தை. (நாடறிய ஓர்ந்து) நாட்டார் அறியும்படி, ஆராய்ந்து. (அவன் தன் செம்மை) 1. "தேந தே தமநுவ்ரதா:" 2. "ராமோ ராஜ்யமுபாஸித்வா" என்னும்படியான அவனுடைய ஆர்ஜவத்தை. (உரைசெய்த) அருளிச்செய்த. அதாவது - "ஓடும்புள்ளேறி, சூடும் தண்டுழாய், நீடுநின்றவை, ஆடும் அம்மானே" (1) என்று - நித்யஸூரிகள்திறத்தில் பரிமாறும் ஆர்ஜவத்தையும், "அம்மானாய்" (2) என்றும், "கண்ணவான்" (3) என்றும், "நீர்புரை வண்ணன்" (11) என்னுமளவும் நித்யஸம்ஸாரிகளோடே செவ்வையனாய்ப் பரிமாறும் ஆர்ஜவத்தையும் அருளிச்செய்தார் என்கை. இப்படி உரைசெய்த (மாறன் என) ஆர்ஜவகுணத்தை அருளிச்செய்த ஆழ்வார் என்று அநுஸந்திக்க. (ஏய்ந்து நிற்கும் வாழ்வாம் இவை) ஸ்வரூபாநுரூபமான ஸம்பத்தாயுள்ளவையெல்லாம் பொருந்தி B "சென்றொன்றி நின்றதிரு" என்னும்படி நிலைநிற்கும். 8.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே ஶரணம்.

திருவாய்மொழி முதற்பத்தில்
எட்டாம் திருவாய்மொழி வ்யாக்யானங்கள் முற்றுப்பெற்றன.

A பெரியதிருமொழி 1-1-4. B நான்-திருவ-61. / (பா) ஒருமைப்பட்டிருக்கையன்றிக்கே.

ஒ—ஸம்ஶ்லேஷத்தை, அநாதி₃காலம் தாம் இழந்த இழவெல்லாம் தீரும்படி ஸர்வேந்த்₃ரியங்களாலும், ஸர்வகா₃த்ரங்களாலும் யதா₂மநோரத₂ம் தமக்கு ஸாத்மிக்கும்படி தம்மோடே ஸம்ஶ்லேஷிக்க, அத்தை அநுப₄வித்து ப்ரீதராகிறார்.

ப— ஒன்பதாம் திருவாய்மொழியில் — இப்படி ஆர்ஜவகு₃ணத்தையுடைய ஸர்வேஶ்வரன், "பொய் கலவாது என்மெய் கலந்தான்" (8-5) என்றும், "என் எண் தான் ஆனான்" (8-7) என்றும், கீழ் இவர் சொன்ன க்ரமத்திலே தன்னுடைய கு₃ண விக்₃ரஹ மஹிஷீ பரிஜந விபூ₄தி சேஷ்டிதங்களோடே கூட இவரோடே பரிபூர்ணமாக ஸம்ஶ்லேஷித்து அநுப₄விப்பிக்கப் பாரித்து, "இவர் வெள்ளக்கேடாய் உடைகுலையப்படிற் செய்வதென்?" என்று பார்த்து, ஸாத்மிக்க ஸாத்மிக்க பு₄ஜிப்பிப்பானாகை; இவர் பரிஸரத்திலே வர்த்திப்பது, இவருக்கு அந்திகஸ்த₂னாவது, கூடநிற்பது, இவர் ஶரீரத்தில் ஒரு பக்கத்திலேயாவது, ஹ்ருத₃யப்ரதே₃ஶத்திலேயாவது, தோள்களிலே சேர்வது, நாவிலேநிற்பது, கண்ணுக்குள்ளேயாவது, நெற்றியிலேயாவது, உச்சியிலேயாவதாகக்கொண்டு, க்ரமத்திலே போ₄க₃ம் தலைமண்டையிடும்படி ஸாத்மிக்க ஸாத்மிக்க ஸம்ஶ்லேஷித்தபடியை அருளிச்செய்கிறார்.

ஆ— ஒன்பதாம் திருவாய்மொழியில் — விபூ₄திஶ்ரவணத்தாலே ஸஞ்ஜாதப₄க்திகனாய், தன்னைக் காணவேணும் என்ற அர்ஜுநனுக்கு தி₃வ்யசக்ஷுஸ்ஸைக் கொடுத்து வைஶ்வரூப்யத்தைக் காட்டி அநுப₄விப்பித்தருளினாற்போலே, ஸர்வேஶ்வரனாய், ஶ்ரிய:பதியாய், பரமரஸிகனாய், கீழ்ச்சொன்ன ஆர்ஜவகு₃ணாநுஸந்தா₄னத்தாலே பெருவிடாய்ப்பட்ட ஆழ்வார்ப₄க்தியிலே துவக்குண்டு அவரோடு ஏகரஸனானவன், மஹிஷீ பரிஜநாதி₃ரூபத்தாலே பல வகைகளாலும் தனக்கு போ₄க்தாக்களானவர்களுக்கு நிரதிஶயபோ₄க்₃யனானாற்போலே, அநாதி₃காலம் இவர் இழந்த இழவெல்லாம் தீரும்படியும், ஸாத்மிக்கும்படியுமாக ஸர்வேந்த்₃ரியங்களாலும் ஸர்வகா₃த்ரங்களாலும் ஸம்ஶ்லேஷிக்க, அத்தை அநுப₄வித்து ப்ரீதராகிறார்.

ஈ— a கீழில் திருவாய்மொழியிலே அவனுடைய ஆர்ஜவகு₃ணாநுஸந்தா₄நம் பண்ணினார்; b இப்படி அநுஸந்தி₄த்தார் விஷயத்தில் c ஸர்வேஶ்வரன் இருக்கும்படியை அருளிச்

அ— இவையும் ப்ரவேஶம். a,b வ்ருத்தாநுவாத₃பூர்வகமாக இத்திருவாய்மொழிக்கு ஸங்க₃தி அருளிச்செய்கிறார் (கீழில் திருவாய்மொழியிலே இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) c (ஸர்வேஶ்வரன் இருக்கும்படி) என்றது - க்ரமேண ஸர்வாங்க₃ ஸம்ஶ்லேஷம் பண்ணும்படி என்கை. ஸாத்ம்ய போ₄க₃ப்ரத₃த்வமாஹ இத்யர்த்த₂:. ஏதேந-வ்ருத்தவர்த்திஷ்யமாண த₃ஶகஸங்க₃திருக்தா ப₄வதி. d...k அநந்தரம் ப்ரமேயோபந்யாஸம் குர்வந் "சூழலுளான்"(1) "அருகலிலான்"(2) இத்யாதி₃ க்ரமஸ்ய ஹேதுமாஹ ("ஸர்வேஶ்வரனாய்" இத்யாரப்₄ய "விடாயைப் பிறப்பித்துத் தன்னை

ஜீ— இவையும் ப்ரவேஶ:. a,b வ்ருத்தாநுவாத₃ பூர்வகமாக ஸங்க₃தி (கீழில் இத்யாதி₃) c (ஸர்வேஶ்வரன் இருக்கும்படியை அருளிச்செய்கிறார்) ஸாத்ம்யபோ₄க₃ப்ரத₃த்வம் அருளிச்செய்

ஈ-செய்கிறார் இதில். d ஸர்வேஶ்வரனாய், d_2 ஶ்ரிய:பதியாய், d_3 பரமரஸிகனாயிருக்கிறவன், ஆழ்வார்ப4க்தியிலே d_4 துவக்குண்டு e இவரோடே ஏகரஸனாயிருந்தான்; f ஆழ்வாரா கிறார்—கீழில் ஆர்ஜவகு3ணாநுஸந்தா4நத்தாலே அவன்பக்கலிலே g பெரிய விடாயையுடைய ராஞர்; "g_2 இது நமக்கு நல்ல வாய்ப்பாயிருந்தது" என்று பார்த்து, h அர்ஜுனன் h_3 விபூ4திஶ்ரவணத்தாலே i "விபூ4திமானானவனைக் காணவேணும்" என்று i_2 அபேக்ஷிக்க,

அ—அநுப4விப்பிக்கிறான்" இத்யந்தேந) d "இவையும் அவையும் உவையும்" (1) இத்யாதி3யைப் பற்ற (ஸர்வேஶ்வரனாய்) என்றது. d,f இருதலைக் காமமுண்டானால் போ4க3ம் இனிதாயிருக்குமென்று திருவுள்ளம்பற்றி, ஸர்வேஶ்வரனுக்கு ஆழ்வாரிடத்திலும், ஆழ்வாருக்கு ஸர்வேஶ்வரனிடத்தி லும் உண்டான அபி4நிவேஶத்தை அருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனாய் இத்யாதி3 வாக்ய த்3வயத்தாலே) d_2 "திருவின் மணாளன்" (1) என்றத்தைப்பற்ற (ஶ்ரிய:பதியாய்) என்றது. d_3 "சுவையன்" (1) என்றத்தைப்பற்ற (பரமரஸிகனாய்) என்றது. d_4 துவக்குண்டு-ஸம்ப3த்4ய. e (இவரோடே ஏகரஸனாயிருந்தான் இதி) "என்னுடைச் சூழலுளான்" (1) "நாளனைந்தொன்றும் அகலான்" (7) இத்யாதெ3ள ஹ்ருத3யம், d...f "ஸர்வேஶ்வரனாய்" இத்யாதி3 வாக்யத்துக்கு "ஆழ்வாராகிறார்" என்று தொடங்கி விவரணம். g (பெரிய விடாயையுடையராஞர்) என்றது அர்த்தா2த் ஸித்3த4ம்; "ஆஞர்" என்ற அநந்தரம் - ஒருவர் என்று அத்4யாஹாரம். h இத் திருவாய்மொழியில் பண்ணுகிற ஸர்வாங்க3 ஸம்ஶ்லேஷத்தை அடியிலே பண்ணாதே, இங்கே பண்ணுகைக்கு ஹேதுவை ஸநித3ர்ஶநமாக அருளிச்செய்கிறார் (அர்ஜுநன் இத்யாதி3) i, i_2 (விபூ4திமானனவனைக் காணவேணும் என்று அபேக்ஷிக்க) என்றவிடத்திலே, 1. "ஏவமேதத்3 யதா2த்த2 த்வமாத்மாநம் பரமேஶ்வர। த்3ரஷ்டுமிச்சா2மி தே ருபமைஶ்வரம் புருஷோத்தம॥" என்கிற ஶ்லோகம் அநுஸந்தே4யம்.

j (விடாயைப் பிறப்பித்து இதி) ப4க்திருபாபந்நம் ஜ்ஞாநம் த3ர்ஶநஸமாநாகாரம் க்ருத்வா தத3நுகு3ணத்வராதிஶயம் ச ஜநயித்வா இத்யர்த்த2:. "அமலங்களாக விழிக்கும்" (9) இத்யத்ர

ஜீ-கிறார் என்றபடி. d...k விஸ்தரஸங்க3தி (ஸர்வேஶ்வரனாய் இத்யாதி3) d, d_2, d_3 "இவையும் அவை யும்" (1) இத்யாதி3யையும், "திருவின் மணாளன்" (1) "சுவையன்" (1) இத்யாதி3யையும் பற்ற (ஸர்வேஶ்வரனாய் இத்யாதி3 விஶேஷண த்ரயமும்) d_4 துவக்குண்டு-ஈடுபட்டு. g_2 (இது) அத்யோந்ய ப்ராவண்யமுண்டான இது நல்ல வாய்ப்பாயிருந்தது என்றபடி. h இதில் பண்ணுகிற ஸர்வாங்க3 ஸம்ஶ்லேஷத்தை அடியிலே பண்ணாமைக்கு அடியை ஸத்3ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார். (அர்ஜுநன் இத்யாதி3) i_2 "அபேக்ஷிக்க" என்கிறவிடத்திலே, 1. "ஏவமேதத்3 யதா2த்த2 த்வமாத்மாநம் பரமேஶ்வர। த்3ரஷ்டுமிச்சா2மி தே ருபமைஶ்வரம் புருஷோத்தம॥" என்ற கீ3தாவசநம் அநுஸந்தே4யம். கீ3தாஸ்வேகாத3ஶே, 2. "ந து மாம் ஶக்ஷ்யஸே த்3ரஷ்டும் அநேநைவ ஸ்வசக்ஷுஷா। தி3வ்யம் த3தா3மி தே சக்ஷு: பஶ்ய மே யோக3மைஶ்வரம்॥".

ப— 8. அவ:— அநந்தரம், தர்ஶநீய விக்ரஹத்தோடே 1. "चक्षुषि तिष्ठन्" (சக்ஷுஷி திஷ்டந்) என்கிறபடியே என் கண்ணுக்குள்ளேயானான் என்கிறார்.

நாவினுள் நின்று—நாவிடத்தில் நின்றும், மலரும்—பரவும், ஞானம்—ஜ்ஞாநஸாதநமான, கலைகளுக்கெல்லாம்—வித்யாஸ்தாநங்களடைய, ஆவியும்—உயிரான அர்த்தமும், ஆக்கையும்—உடம்பான ஶப்தமும், தானே—தானிட்ட வழக்காய், அழிப்போடு அளிப்பவன் தானே-அவற்றினுடைய உத்பத்தி விநாஶங்களும் தானிட்டவழக்கானவனாய், பூவியல்—பூமாருத, நால் தடந்தோளன்—நாலு பெரிய தோள்களை உடையனாய், (தோள்களிலே) பொரு—ஆஶ்ரித விரோதிகளைப் போக்குகைக்கு, படை—ஆயுதமான, ஆழி—திருவாழியையும், சங்கு—திருச்சங்கையும், ஏந்தும்—ஏந்துமவனாய், காவி—நெய்தல்போலே, நல்—நன்றான, மேனி—திருநிறத்தையும், கமலம்—கமலம்போன்ற, கண்ணன்—கண்களையும் உடையவன், என் கண்ணினுளான்—(இவ்வழகோடே) என் கண்ணுக்குள்ளே ஆனான். பூவியல் என்று - பூவின் ஸ்வபாவமான மார்தவத்தைச் சொல்லவுமாம். 8.

இ— அவ:— எட்டாம் பாட்டில் — அது ஸாத்மித்தவாறே என் கண்ணுக்கு விஷயமானான் என்கிறார்.

வ்யா:— (நாவினுள் நின்று இத்யாதி) ஜிஹ்வாக்ரத்தில் விகஸியாநின்றுள்ள ஜ்ஞாநஸாதநமான வித்யாஸ்தலங்களுக்கெல்லாம். (ஆவியும் ஆக்கையும் தானே) ஆவியென்று - ஆத்மா; ஆக்கையென்று - ஶரீரம்; அர்த்தத்தையும் ஶப்தத்தையும் சொல்லுகிறது. ஆக, ஶப்தார்த்த ஸம்பந்தநியமம் அவனிட்ட வழக்கு என்றது. (அழிப்போடு அளிப்பவன் தானே) வித்யைகளை ப்ரவர்த்திப்பித்து அழியாமே காக்கை - அளிக்கையாகிறது. அழிக்கையாகிறது - லேகக தோஷாதிகளாலே ஸ்வரூபம் அந்யதாபவித்தால், அவற்றை ஸம்ஹரிக்கை. / (பூவியல் நால்தடந்தோளன்) பூவை இயல்வாக உடைத்தாய், நாலாய், சுற்றுடைத்தான தோளையுடையவன். (பூவியல்) பூவாலே அலங்க்ருதமான தோள் என்னுதல், பூவையொழியச் செல்லாத ஸௌகுமார்யத்தைச் சொல்லுதல். (பொரு படை ஆழிசங்கேந்தும்) பணைத்த கல்பகதரு பரப்புமாறப் பூத்தாற்போலேயாயிற்று திவ்யாயுதங்களிருப்பது. பொரு படை - யுத்தஸாதநங்களானவை. (காவி நன்மேனி) காவி - நெய்தல். காவி உபமாநமாகப் போராதபடியான நன்றான திருமேனி. (கமலக்கண்ணன்) புண்டரீகாக்ஷனான ஸர்வேஶ்வரன். (என் கண்ணினுளானே) என் கண்ணுக்குள்ளே புகுந்தான் என்னுதல்; கண்ணுக்கு விஷயமானான் என்னுதல். 8.

/ க்ரமாவிவக்ஷயா வா, "அழிப்போடு" இதி த்ருதீயார்த்தம் அப்ராதாந்யமவலம்ப்ய வா, "அளிப்போடு அழிப்பவன்" இதி பாடாந்தரேண வா வ்யுத்க்ரம வ்யாக்யாநம் — என்பர்.

ஈ— அவ:— எட்டாம் பாட்டு. a ஸகலவித்3யாவேத்3யனான ஸர்வேஶ்வரன், b ப்ரமாணங்களாலே காணக்கடவ வடிவை என் கண்ணுக்கு விஷயமாக்கினான் என்கிறார்.

வ்யா:— (நாவினுள் இத்யாதி3) ஜிஹ்வாக்3ரத்திலே விகஸியாநின்றுள்ள ஜ்ஞாந ஸாத4நமான வித்3யாவிஶேஷங்களுக்கெல்லாம். (ஆவியும் ஆக்கையும் தானே) ஆவியென்கிறது - அர்த்த2த்தை. ஆக்கையென்கிறது - ஶப்3த3த்தை. c "இவ்வர்த்த2த்தை இஶ்ஶப்3த3ம் காட்டக்கடவது" என்று நியமித்துவிட்டான் அவனாயிற்று. c2 ஆக, ஶப்3தா3ர்த்த2ஸம்ப3ந்த4ம் அவனிட்ட வழக்காயிற்று. (அழிப்போடு அளிப்பவன் தானே) d மந்த3மதிகளான சேதநருடைய ப்ரதிபத்தி தோ3ஷங்களாலும், லேக2கதோ3ஷங்களாலும், பாட2பே4த3ங்களாலும் e இவை உருமாயுமளவிலே f ஸம்ஹரித்தும், அபேக்ஷித

அ— எட்டாம் பாட்டு. (நாவினுள் இத்யாதி3) a ஸகலவித்3யாவேத்3யனான என்றது - "கலைகளுக்கெல்லாம் ஆவியும் ஆக்கையும் தானே" என்றத்தைப்பற்ற. இஸ்ஸாமாநாதி4கரண்யத்துக்கு நிப3ந்த4நம் ப்ரதிபாத்3ய ப்ரதிபாத3கபா4வம். ஆவியோடே கூடின ஆக்கையினாலே ப்ரதிபாத்3யன் என்றபடி. b (ப்ரமாணங்களாலே) 1. "ஆதி3த்யவர்ணம்" 2. "கப்யாஸம் புண்ட3ரீகமேவமக்ஷிணீ" இத்யாதி3களாலே.

c நிர்வாஹகத்வேந ஸாமாநாதி4கரண்யம் இத்யபி4ப்ராயேணாஹ (இவ்வர்த்த2த்தை இதி) இத3ம் வாக்யம், தத்தச்ச2ப்3த3விஶேஷ அர்த்த2விஶேஷபரம். ஆக, ஶப்3தா3ர்த்த2 ஸம்ப3ந்த4ம் இதி வாக்யம் - ஶப்3த3த்வாவச்சி2ந்ந ஶப்3தா3ர்த்த2த்வாவச்சி2ந்நபரம். பதா3ர்த்தா2பி4தா4ந வேளாயாம் ஶப்3தா3ர்த்த2 ஸம்ப3ந்த4 நிர்வாஹகத்வாபி4தா4நாத், அவதாரிகாயாம் ஸகல வித்3யாவேத்3யத்வாபி4தா4நாச்ச, "ஞானக்கலைகளுக்கெல்லாம் ஆவியும் ஆக்கையும் தானே" இத்யஸ்ய அர்த்த2த்3வயம் இதி த்3ரஷ்டவ்யம். த்3விதீய பக்ஷத்திலே, ஞானக்கலைகளுக்கு அபேக்ஷிதமான ஆவியும் ஆக்கையும் அவனிட்ட வழக்கு என்றபடி. ஏகாரார்த்த2மாகவுமாம். d ஞானக்கலைகளை அழிப்பானென்? என்ன (மந்த3மதிகளான இத்யாதி3) இப்படி இத்3தோ3ஷங்களாலே உருமாய்ந்த இவற்றை யதா2வாக ஸ்ருஷ்டிக்கைக்காக ஸம்ஹரிக்கும் என்றபடி. ஆக, "ஞானக்கலைகள்" என்கிறதுக்கு - "அழிப்போடு" என்கிறத்தோடு அந்வயம் கூடுமிறே. e (இவை) என்றது - வித்3யாவிஶேஷங்களை. f ஸம்ஹரிக்கிறது கலியுகா3ந்தத்திலே;

ஜீ— எட்டாம் பாட்டு. (நாவினுள் இத்யாதி3) a ஸகலவித்3யாவேத்3யனான என்றது - "கலைகளுக்கெல்லாம் ஆவியும் ஆக்கையும் தானே" என்றத்தைப்பற்ற. இஸ்ஸாமாநாதி4கரண்யத்துக்கு நிப3ந்த4நம் ப்ரதிபாத்3ய ப்ரதிபாத3கபா4வம். ஆவியோடே கூடின ஆக்கையினாலே ப்ரதிபாத்3யன் என்றபடி. b (ப்ரமாணங்களாலே) 1. "ஆதி3த்யவர்ணம்" 2. "யதா2 கப்யாஸம் புண்ட3ரீகமேவமக்ஷிணீ" இத்யாதி3களாலே.

c "ஆவியும் ஆக்கையும் தானே" என்ற ஸாமாநாதி4கரண்யம் நிர்வாஹ்ய நிர்வாஹக பா4வ நிப3ந்த4நமாக அர்த்தா2ந்தரம் (இவ்வர்த்த2த்தை இத்யாதி3) இந்தப்பக்ஷத்தில், ஞானக்கலைகளுக்கு அபேக்ஷிதமான ஆவியும் ஆக்கையும் அவனிட்ட வழக்கு என்றபடி. c2 ப3லிதம் (ஆக இத்யாதி3) ஏகாரார்த்த2மாதல். d ஞானக்கலைகளை அழிப்பானென்? என்ன (மந்த3மதிகளான இத்யாதி3) இத்3தோ3ஷாதி3களாலே உருமாய்ந்த இவற்றை யதா2வாக ஸ்ருஷ்டிக்கைக்காக ஸம்ஹரிக்கும் என்றபடி. e (இவை) என்றது, வித்3யாவிஶேஷங்களை.

ff-ஸமயத்திலே g ஸ்ருஷ்டித்தும் போருகிறன் தானே. h ''அல்லாத ஸ்ருஷ்டிஸம்ஹாரங் களைச் சொல்லுகிறது'' என்பாரும் உண்டு.

i (பூவியல் இத்யாதி) j பூவாலல்லது செல்லாதபடி ஸௌகுமாரமாய், கல்பகதரு பணைத்தாற்போலே, நாலாய்ச் சுற்றுடைத்தாயிருக்கிற திருத்தோள்களை உடையவன். k பூவியல் - பூவாலே அலங்க்ருதமான தோள் என்னுதல் ; l பூவையொழியச் செல்லாத ஸௌகுமார்யத்தை உடையவன் என்னுதல். (பொரு படை) m பணைத்துப் பூத்த கல்பக தருபோலேயாயிற்று — யுத்தத்துக்குப் பரிகரமான திவ்யாயுதங்களை தரித்தால் இருக்கும்படி: n பொரு படை - யுத்தஸாதநங்களானவை. (o காவி நன்மேனி) p அவ்

அ—g ஸ்ருஷ்டிக்கிறது க்ருதாதியிலே என்றபடி. h (அல்லாத ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை) என்றது- ப்ரபஞ்சத்தினுடைய ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை என்றபடி.

i ''பூவியல் நால்தடம்'' இதி புஜவிசேஷணம்; j,k தத்ர ச அர்த்தத்வயம் - இயற்றப்படுவதாய் - நடத்தப்படுவதாய் - தரிக்கப்படுவதாய் இதி ப்ரதம: ; பூவாலே இயற்றப்பட்ட இதி த்விதீய:; l புஷ்பவத்விசேஷணம் இதி த்ருதீய:. தடம் - பெருமை. j யத்வா, (பூவாலல்லது) பூவாலே இயலாநின்ற என்றபடி; இயலுகை - செல்லுகை. k (பூவாலே அலங்க்ருதமான) பூவானது இயலாநின்ற என்றபடி. l (பூவையொழிய) இந்தப் பக்ஷத்தில், ''பூவியல்'' என்கிறது- கமலக்கண்ணனுக்கு விசேஷணம். யத்வா, முந்தின அர்த்தவிவரணம் (பூவையொழிய இத்யாதி) m ''ஏந்தும்'' என்றதுக்குத் தாத்பர்யம் (பணைத்துப் பூத்த இத்யாதி) யத்வா, பூவியல், பொருபடை ஆழிசங்கேந்தும், நால்தடந்தோள் இத்யந்வயம்; ஸர்வேஸ்வரன் திருக் கைகளிலே இருக்கும்போது பூவினுடைய ஸ்வபாவத்தை உடையவைகளாய், யுத்தஸமயத் திலே தத்பரிகரமாயிருக்கிற திவ்யாயுதங்களை தரிக்குமவைகளாய், நாலாய், பெரியவைகளா யிருக்கிற தோள்களையுடையவன் இத்யர்த்தஞ்ச ஸ்ம்ருதி நிதர்சநாயாஹ (பணைத்து இதி) 1. ''திவ்யாஸ்த்ரபுஷ்பிதசதுர்புஜமத்யுதாரம் ரங்காஸ்பதம் மம ஸமாஸ்ரயமாஸ்ரயாணி ||'' A ''கற்பகக்காவன நற்பல தோளற்கு'' இத்யாதிகம் அநுஸந்தேயம். n ''பொருபடை'' என்றதுக்கு அர்த்தம் (யுத்தஸாதநங்களானவை) என்று. p ஆயுதங்களைச்சொன்ன அநந்தரம் திருமேனியைச் சொன்னதுக்குத் தாத்பர்யம் (அவ்வாயுதங்களாலே இத்யாதி) o காவி-நெய்தல்; நீலோத்பலமித்யர்த்த:. q நீலோத்பலஸத்ருஸவிக்ரஹ இதி வக்துமுத்யம்ய த்ருஷ்டாந்த தார்ஷ்டாந்திகயோ: ஸ்வரூபம் பராம்ருஸ்ய, புநர்தார்ஷ்டாந்திகமேவ விசேஷயதீத்யபிப்ரா

ஜீ—f ஸம்ஹரிக்கிறது கலியுகாந்தத்திலே; g ஸ்ருஷ்டிக்கிறது க்ருதயுகாதியிலே என்றபடி. h (அல்லாத ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை) ஜகத்ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை.

i (பூவியல்) இயல்வு - ஸ்வபாவம். j பூவின் ஸ்வபாவமான ஸௌகுமார்யத்தையுடைய என்று முந்தின அர்த்தம்; பூவாலல்லது செல்லாத என்றது - ஸௌகுமார்ய உபபாதநம்; செல்லாத - தரியாத. k த்விதீயார்த்தத்தில், இயல்வு - அலங்காரமாய், பூவாலே அலங்க்ருத மான தோள் என்றபடி. l ப்ரதமார்த்தவிவரணம் (பூவையொழிய இத்யாதி) m ''ஏந்தும்'' என்றதுக்கு பாவம் (பணைத்து இத்யாதி) தடம் - பெருமை. n ''பொருபடை'' என்றதுக்கு அர்த்தம் (யுத்தஸாதநங்களானவை) என்று. p ஆயுதாநந்தரம் திருமேனியைச் சொன்னதுக்கு பாவம் (அவ்வாயுத இத்யாதி) o காவி - நெய்தல். q ''நல்'' என்கிற விசேஷணத்துக்கு

A 6-6-6.

9. கமலக்கண் ணனென்கண்ணி னுள்ளான் காண்ப னவன்கண்க ளாலே
அமலங்க ளாக விழிக்கும் ஐம்புல னுமவன் மூர்த்தி
கமலத் தயன்நம்பி தன்னைக் கண்ணுத லானொடும் தோற்றி
அமலத் தெய்வத்தோ டுலகு மாக்கியென் னெற்றியு ளானே.

ஈ—வாயுதங்களாலே விரோதியைப்போக்கி அநுபவிக்கும் வடிவழகு. (நன்மேனி) q காவி - வடிவழகுக்கு உபமாநமாக நேர்நில்லாமையாலே, "நன்மேனி" என்கிறார். (கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளானே) r இவர் கண்வட்டமொழியப் புறம்பே போனால் s கண்வட்டக்கள்ளனுமே. t பெருவெள்ளத்திலே ஒரு u சுழிபோலே திருக்கண்கள். (v என் கண்ணினுள்ளானே) w ப்ராக்ருத விஷயங்களை அநுபவித்துப்போந்த என் கண்ணுக்குத் தன்னை விஷயமாக்கினான். 8.

அ–யேனாஹ (காவி வடிவழகுக்கு இதி) • 1. "சந்த்ரகாந்தாநநம்" இதிவத். r,s "கண்ணினுள்ளானே" இத்யவதாரணம் ஶ்ருதிநிதாய, அந்யத்ர ந கச்சதீத்யத்ர ஹேதும் சாடுக்த்யா தர்ஶயதி (இவர் கண்வட்டமொழிய இத்யாதி) கண்வட்டம் – சக்ஷுர்விஷயதேஶம். இதாநீமகச்சத் சேத் பஶ்சாத் பராங்குஶார்ய சக்ஷுர்விஷயதேஶே ஸமாகமநாவஸரே 2. "ஹ்ரீரேஷா ஹி மமாதுலா" இதி சோரவத் அதிலஜ்ஜிதோ பவேதிதி ஸ்வபாவார்த்த:. s கண்வட்டக் கள்ளனாவது - ஸ்நேஹித்தவன் சொல்லை மறுத்தால் அவன் கண்முன்னே வர பயப்படுமவன். சாடுவுக்கு - டங்கஶாலையிலே க்ருத்ரிமப்பணம் போட்டவன். t விக்ரஹஸௌந்தர்யமபிதாய, தது பரி லோசநஸௌந்தர்யாபிதாநப்ரஸக்தமாஹ (பெருவெள்ளத்திலே இதி) u சுழி-ஆவர்த்தம். விக்ரஹஸௌந்தர்யமேவ ஸ்வஸ்மிந் நிமக்நாந் கரோதி; தச்ச அபாரம்; தத்ர கஶ்சித் ஆவர்த்தஶ்சேத் கிமுதேதி பாவ:. 3. "ராம: கமலபத்ராக்ஷ:" இதிவத். ராம: – ஸர்வாங்க ஸுந்தர இத்யர்த்த:. v,w என்னின் தாத்பர்யம் (ப்ராக்ருத இத்யாதி) 'பொருபடையாழி சங்கேந்தும் பூவியல் நால்தடந்தோளன்" என்று அந்வயம். "நாவினுள்" என்று தொடங்கி, அடைவே உரை அந்வயம். 8.

ஜீ—பாவம் (காவி வடிவழகு இத்யாதி) காவியில் விலக்ஷணமான மேனி என்றபடி. 1. சந்த்ர காந்தாநநம்" இதிவத். சந்த்ரசத் காந்தாநநம். r,s "கண்ணினுள்ளானே" என்கிற அவதாரணார்த்தம் (இவர் கண்வட்டம் இத்யாதி) கண்வட்டம்-சக்ஷுர்விஷய ப்ரதேஶம். s கண்வட்டக் கள்ளனாவது - ஸ்நேஹித்தவனுக்கு ஒன்று வேண்டியிருக்க, செய்யாவிட்டால் அவன் கண்முன்னே வர பயப்படுமாபோலே, 2. "ஹ்ரீரேஷா ஹி மமாதுலா" என்கிறபடியே த்ருஷ்டிவிஷயமாக பயப்படுகையென்று ஸ்வபாவார்த்தம். சாடுவுக்கு, கண்வட்டக்கள்ளன் - டங்கஶாலையிலே க்ருத்ரிமப்பணம் அடிக்கிறவன். கண்வட்டம் - டங்கஶாலை. t திருமேனியைச்சொன்ன அநந்தரம் திருக்கண்களைச் சொன்னதுக்கு பாவம் (பெருவெள்ளத்திலே இத்யாதி) v,w "என்" என்றதுக்கு பாவம் (ப்ராக்ருத இத்யாதி) "நாவினுள் நின்று மலரும்" என்று தொடங்கி, "அளிப்பவன் தானே, பொருபடையாழி சங்கேந்தும் பூவியல் நால்தடந்தோளன் காவிநன்மேனி" இத்யாரப்ய அந்வய:. 8.

* வால்மீகி பகவான் 1. 'சந்த்ரகாந்தாநநம்' என்று 'சந்த்ரனைப்போலே இனிய முகத்தையுடையவன்' என்று சொன்னபிறகு, அதைத் தானே அழித்து 1. 'அதிவ ப்ரியதர்ஶநம்' என்று சொன்னதிலே நோக்கு.

ஆ— 9. வ்யா:— (கமலக்கண்ணன்) ப்₃ரஹ்மாதி₃, ஸ்த₂ாவராந்தமான ஸகல ஜக₃த்தையும் படைத்தருளின கமலக்கண்ணன், என் கண்ணினுள்ளே புகுந்தருளினன்; நானும் அவனை என் கண்களால் காணப்பெற்றேன்; அவனும் தன்னுடைய ஶீதளமான அழகிய திருக்கண்களாலே என்னுடைய ஸமஸ்த ஸந்தாபங்களும் போம்படி என்னைக் குளிரப் பார்த்தருளாநின்றான்; இப்படி மற்றுமுள்ள ஶ்ரோத்ராதி₃ ஸகல கரணங்களாலும் அவனையே பு₄ஜிக்கப்பெற்றேன். நிரவதி₄கமான நிர்வ்ருதி எனக்கு ஸாத்மித்தவாறே, பின்னை என் நெற்றியுள் நின்றருளினன் என்கிறார். 9.

ஒ— அவ:— ஒன்பதாம் பாட்டில் — ஸர்வஸ்ரஷ்டாவான எம்பெருமான், என் நெற்றியிலே வந்து நின்றான் என்கிறார்.

வ்யா:— (காண்பன் என்று தொடங்கி) நானும் அவனைக் காணாநின்றேன்; தன்னைக் காணவல்லேனும்படி நிர்த்தே₃ாஷனாக என்னை நோக்கியருளாநின்றான்; அவனுடைய திருவழகைக்கண்டு, என் இந்த்₃ரியங்களும் அவனுக்கு ஶரீரவத்₃விதே₄யமாயிற்றன. (கமலத்தயன் என்று தொடங்கி) கமலாஸநனாய், ப்ரத₄ாநனான ப்₃ரஹ்மாவை லலாடநேத்ரனான ருத்₃ரனோடுங்கூடத் தோன்றுவித்து, ஸத்வப்ரசுரரான தே₃வர்களோடுங்கூட லோகங்களையெல்லாம் உண்டாக்குமவன். 9.

ப— 9. அவ:— அநந்தரம், என்கண்களிலே நின்று ப்ரகாஶியாநிற்கச்செய்தே, ஸகலஜக₃த்ஸ்ரஷ்டாவானவன் என்னுடைய லலாடமத்₄யத்திலே ஆனான் என்கிறார்.

கமலக்கண்ணன் — கமலக்கண்ணனானவன், **என் கண்ணினுள்ளான்** — என் கண்ணுக்கு விஷயமாகாநிற்கும்; (அத்தாலே 1. "न चक्षुषा पश्यति" (ந சக்ஷுஷா பஶ்யதி) என்கிற நிலை தவிர்ந்து) **காண்பன்** — நானும் அவனைக் காணாநின்றேன்; (அதுக்கடி—) **அவன்** — அக்கமலக்கண்ணன், **கண்களாலே** — தன் கண்களாலே, **அமலங்களாக** — அஜ்ஞாநாதி₃மலம் போம்படி, **விழிக்கும்** — பார்த்தருளாநிற்கும். (அத்தாலே—) **ஐம்புலனும்**—சக்ஷுரிந்த்₃ரியமும் இந்த்₃ரியாந்தரங்களோடு வாசியற, **அவன் மூர்த்தி**—அவனுக்கு ப்ரகாரதயா ஶேஷமாயிற்று; (இப்படிச் செய்தவன் ஆரென்னில்;) **கமலத்து** — கமலஸம்ப₄வனானையாலே, **அயன்** — அஜனென்று பேராய், நம்பி தன்னை—ஸ்ருஷ்ட்யாத்₃யுபயுக்த ஜ்ஞாநாதி₃பூர்ணனான ப்₃ரஹ்மாவை, **கண்ணுதலானொடும்**—லலாடநேத்ரத்வத்தாலே வ்யக்தஶக்திகனான ருத்₃ரனோடே, **தோற்றி**—தோற்றுவித்து, (அவர்கள் முதலாக) **அமலம்**—ஸத்வோத்தரைகளான, **தெய்வத்தோடு**—தே₃வதைகளோடே, **உலகம்**—லோகங்களையும், **ஆக்கி**—ஸ்ருஷ்டிக்கும் ஸ்வப₄ாவனானவன், (இந்நிலை குலையாதே) **என்**—என் அவயவைகதே₃ஶமான, **நெற்றியுளான்**—நெற்றியிலே ஆனான்.

உலகமாக்கி என்று - பேர். கண்ணுதலானொடும் என்று - ருத்₃ரனுடைய அப்ரத₄ாநத்வம் தோற்றுகிறது. 9.

இ— அவ:— ஒன்பதாம் பாட்டில்—ஸ்வஸங்கல்பைகதேஶத்திலே ஸர்வத்தையும் உண்டாக்கினவன், என்னுடைய ஶரீரைகதேஶத்தைப்பற்றித் தான் உளனாகநின்றான் என்கிறார்.

வ்யா:— (கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான்) புண்டரீகாக்ஷனான ஸர்வேஶ்வரன் என் கண்ணுக்கு விஷயமானான்; 1. **"न मांसचक्षुरभिवीक्षते तम्"** (ந மாம்ஸசக்ஷுரபிவீக்ஷதே தம்) 2. **"न चक्षुषा पश्यति"** (ந சக்ஷுஷா பஶ்யதி) என்கிற மர்யாதை குலைந்தது. (காண்பன்) நானும் அவனைக் காணாநின்றேன். காண்பன் என்கிறவிடம் வர்த்தமாநம். நீர் காணவல்லீராயிற்று எத்தாலே? என்னில் (அவன் கண்களாலே அமலங்களாக விழிக்கும்) அவன் திருக்கண்களாலே, நிர்தோஷனாம்படியும், காணவல்லேனாம்படியும் விஶேஷகடாக்ஷத்தைப் பண்ணினான். விஷயப்ரவணமான இந்த்ரியங்கள் செய்ததென்? என்னில்; (ஐம்புலனும் இத்யாதி) அவையும் அவனழகைக் கண்டு அவனுக்கு ஶரீரவத் விதேயம் ஆயிற்றின. அவனைக் காண்பதற்குமுன்பு அவிதேயமானவை, அவனைக் கண்டவாறே விதேயம் ஆயிற்றின. (கமலத்து அயன் இத்யாதி) கமலோத்பந்நனாகையாலே அஜனாய், ஜ்ஞாநாதி பரிபூர்ணனாய், ப்ரதாநனானவனை, லலாடநேத்ரனோடே கூடத் தோற்றுவித்து. (அமலத்தெய்வத்தோடு உலகம் ஆக்கி) ஸத்வப்ரசுரரான தேவர்களோடே ஸர்வலோகங்களையும் உண்டாக்கும் ஸ்வபாவன். (என் நெற்றியுளானே) தன்னையொழிந்த ஸகலாத்மாக்களும் தன்னைப் பற்றி உண்டாம்படியிருக்கிறவன், என் ஶரீரத்தில் ஏகதேஶத்தைப்பற்றி வர்த்தியாநின்றான். 9.

ஈ— ஒன்பதாம் பாட்டு. கண்ணில் நின்ற நிலை ஸாத்மித்தவாறே, என் a நெற்றியிலே வந்து நில்லாநின்றான் என்கிறார்.

வ்யா:—(b கமலக்கண்ணன் என் கண்ணினுள்ளான்) புண்டரீகாக்ஷனானவன் என் கண்ணுக்கு விஷயமானான். c 3. **"न चक्षुषा गृह्यते"** (ந சக்ஷுஷா க்ருஹ்யதே) என்கிற மர்யாதை குலைந்தது. அவன் அவ்வடிவை உம்முடைய கண்ணுக்கு விஷய

அ— ஒன்பதாம் பாட்டு. (கமலக்கண்ணன் இத்யாதி) a நெற்றியிலே - லலாடத்திலே. b,c இத்தால் தாத்பர்யம் (ந சக்ஷுஷா இத்யாதி) d (அமலங்களாக) ததத்ய ததபாவ தந்விரோதிந: - நஞர்த்தா: ; அத்ர ததபாவார்த்த: நஞ் ; e அமலங்களாலே - மலாபாவங்களாலே, ஆக - காணவல்லேனாம்படி இதி ஶப்தார்த்தம் ஹ்ருதி நிதாயாஹ (என் தோஷமெல்லாம் கழிந்து தான் காணவல்லேனாம்படி) இதி. ப்ரதியோகி பஹு

ஈ— ஒன்பதாம் பாட்டு. (கமலக்கண்ணன்) இத்யாதி. b,c இத்தால் பலித்த தாத்பர்யம் (ந சக்ஷுஷா இத்யாதி) b அவன் கண்களாலே அமலங்களாக விழிக்கும்—அக்கமலக்கண்ணன் தன் கண்களாலே அஜ்ஞாநாதி தோஷங்களெல்லாம் போம்படியாகக் கடாக்ஷியாநிற்கும் இதி

ஈ—மாக்கினுனுகில், நீர் பின்னைச்செய்ததென்? என்னில் (c₂ காண்பன்) நானும் கண்டு அநுப₄வியாநின்றேன். இவ்விலக்ஷண விஷயத்தை நீர் கண்டு அநுப₄விக்கவல்லீ ரானபடி எங்ஙனே ? என்ன (d அவன் இத்யாதி₃) அவன் தன் திருக்கண்களாலே, e என் தோ₃ஷமெல்லாம் கழிந்து நான் காணவல்லேனும்படி குளிரக் f கடாக்ஷியா நின்ருன்; ஆனுலும் இந்த்₃ரியங்கள் என்று சில உண்டே காட்சிக்கு ப்ரதிப₃ந்த₄கங்கள், அவை செய்ததென்? என்ன (ஐம்புலனும் அவன் மூர்த்தி) காட்சிக்கு g ப்ரதிப₃ந்த₄கங்க ளான ஶ்ரோத்ராதி₃களும் அவனிட்ட வழக்காம்படி அவனுக்கு ஶரீரவத்₃விதே₄யமாய் அங்கே h படையற்றன.

i (கமலத்தயன் இத்யாதி₃) திருநாபீ₄கமலத்திலே அவ்யவதா₄நேந பிறந்து, j எல்லாரிலும் விலஜாதீயமான ஜந்மத்தையுடையனுய், k தனக்கு இவ்வருகுள்ள

அ—த்₃வாத் அப₃ாவப₃ஹூ₃த்₃வம். 1. "பீதாம்ப₃ரம் வரத₃ ஶீதளத்₃ருஷ்டிபாதம்" இத்யாதி₃. "இவர்க்கும் தன்னை அநுப₄விக்கைக்கீடான விடாயைப் பிறப்பித்து" (ப 908 |) இதி வாக்யஸ்ய இத₃ம் பீ₃ஜமித்யுக்தம். f,c₂ (கடாக்ஷியாநின்ருன்) ஆகையாலே, "காண்பன்" என்று அந்வயம். "அமலங்களாக விழிக்கும் அவன் கண்களாலே காண்பன்" என்றுமாம். g (ப்ரதிப₃ந்த₄கங்கள்) விஷயாகர்ஷண முக₂த்தாலே. h (படையற்றன) படையறுகையாவது - யுத்₃த₄ ஸமாப்தமாகை. அநுகூலவிஷயத்தில் போகாதபடி ப்ரதிகூல விஷயங்களிலே கொண்டுபோம் இந்த்₃ரியங்கள், அவனுடைய ஸௌந்த₃ர்யாதி₃களைக் கண்டவாறே வஶீக்ருதங்களாயிற்று என்றபடி. யத்₃வா, (படையற்றன) பரிகரமாயிற்றது என்றபடி. படை - பரிகரம். யத்₃வா, ஒருவனேடே கூடி எதிர்த்து, அவன் கிட்டினவாறே எதிரியோடே கூடுகை - படையறுகை; படையற்றன - அங்கே ஸம்ஶ்லேஷித்தது என்றபடி.

i இப்படி அமலங்களாக விழிக்கக் கூடுமோ ? என்ன; ஸங்கல்பத்தாலே ஸகல ஜக₃த் ஸ்ருஷ்டியைப் பண்ணக்கடவ ஸர்வேஶ்வரனுக்குக் கூடாதது உண்டோ ? என்று அவனுடைய காரணத்வத்தை அருளிச்செய்துகொண்டு, இப்படி ஸர்வாதி₄கனுயிருக்கிறவன் ப்ரயோஜந நிரபேக்ஷமாக என் நெற்றியிலே இருக்கிருன் என்று அருளிச்செய்கிருர் "கமலத்தயன்" என்று தொடங்கி. கமலத்திலே பிறக்கையாலே - "அஜன்" என்று பேராகிறது. j அஜ ஶப்₃தா₃ர்த்த₂மாஹ (எல்லாரிலும் விலஜாதீயமான ஜந்மத்தையுடையனுய்) இதி. k "நம்பி"

ஜீ—ஶப்₃தா₃ர்த்த₂:. f,c₂ (கடாக்ஷியாநின்ருன்) ஆகையாலே "காண்பன்" என்று அந்வயம். g விஷயப்ராவண்ய ஹேதுவாகையாலே இந்த்₃ரியங்களை ப்ரதிப₃ந்த₄கங்கள் என்கிறது. h படை யற்றன - பரிகரமாயிற்றின. படை - பரிகரம். அவனுக்கு ஶேஷமாயிற்றன என்றபடி.

i இப்படி அமலங்களாக விழிக்கக்கூடுமோ ? என்ன; ஸங்கல்பத்தாலே ஸகல ஜக₃த் ஸ்ருஷ்டியைப் பண்ணவல்ல ஸர்வேஶ்வரனுக்குக் கூடாதது உண்டோ ? என்று அவனுடைய காரணத்வத்தை அருளிச்செய்துகொண்டு, இப்படி ஸர்வாதி₄கனுயிருக்கிறவன் ப்ரயோஜந நிரபேக்ஷமாக என் நெற்றியிலே இருக்கிருன் என்கிருர் "கமலத்தயன்" என்று தொடங்கி என்று மேலுக்கு ஸங்க₃தி கண்டுகொள்வது. j அஜஶப்₃தா₃ர்த்த₂ம் (எல்லாரிலும்) இத்யாதி₃. கமலத்திலே பிறக்கையாலே அஜனென்று பேராகிறது என்றபடி. k "நம்பி" என்றதின்

10\. நெற்றியுள் நின்றென்னை யாளும் நிரைமலர்ப் பாதங்கள் சூடி
கற்றைத் துழாய்முடிக் கோலக் கண்ண பிரானைத் தொழுவார்
ஒற்றைப் பிறையணிந் தானும் நான்முக னுமிந் திரனும்
மற்றை யமரு மெல்லாம் வந்தென துச்சியு ளானே.

ஆ— 10. வ்யா:—(நெற்றியுள்) ப்ரஹ்மேசாநாதி ஸகலதேவதைகளும், நெற்றியுள் நின்று என்னை அடிமைகொண்டருளுகிற இந்தத் திருவடிமலர்களைச் சூடிக்கொண்டு, கற்றைத்துழாய் முடிக்கோலக் கண்ணபிரானைத் தொழுவார்; அவனே ஸர்வேச்வரனாய், அவாப்த ஸமஸ்தகாமனான எம்பெருமான்; என் நெற்றியுள் நின்றருளின நிலை எனக்கு ஸாத்மித்தவாறே, பின்னை என் உச்சியுள்ளே வந்து புகுந்தருளினான் என்கிறார். 10.

ஈ—வற்றை உண்டாக்குமிடத்தில் ஸர்வேச்வரனைக் l கேள்விகொள்ள வேண்டாதபடி நிரபேக்ஷனான சதுர்முகனை m லலாடநேத்ரனான ருத்ரனோடே n உண்டாக்கி, அவ்வளவில் பர்யவஸியாதே, ஸத்வப்ரசுரரான தேவதைகளோடே லோகங்களை உண்டாக்கினவன். o "நெய்யுண்ணி" என்னுமாபோலே, "ஆக்கி" என்றது - ஆக்கும் ஸ்வபாவனென்றபடி. (p என் நெற்றியுளானே) q கர்மாநுகுணமாக ஜகத்தை ஸ்ருஷ்டித்து விட்டான்; r ப்ரயோஜந நிரபேக்ஷமாக என் நெற்றியிலே புகுந்து நின்றான். 9.

அ—என்றதின் தாத்பர்யம் (தனக்கு இத்யாதி) l கேள்விகொள்ள-வினவிக்கொள்ள. m "கண்ணுதலானொடும் - நுதற்கண்ணனொடும்" என்று அந்வயித்து (லலாடநேத்ரன்) இத்யாதி. n தோற்றி - தோற்றுவித்து என்று விவக்ஷித்து (உண்டாக்கி என்றது) o (நெய்யுண்ணி இதி) "ஆக்கி" இதி - க்ருத்வேதிவத் ந பவதி; "லோககாரீ" இதிவத், ப்ரதமைகவசநாந்த சப்தஇத்யர்த்த:. l,p,q "கமலத்தயன்" இத்யாதிஸ்ருஜ்யதாரதம்யம், "என்" இதி ஸ்வஸ்வரூப பராமர்சம், அஸ்மச்சப்தஞ்ச ஹ்ருதி நிதாயாஹ (கர்மாநுகுணமாக இதி) விஷமஸ்ருஷ்டி சொல்லுகையாலே - கர்மநிபந்தநத்வம் ஸித்தமென்று கருத்து. r (ப்ரயோஜந நிரபேக்ஷமாக) "என்" என்று-தேஹாஷபஹான்யமும், ஆகிஞ்சந்யமும் ஸித்தமாகையாலே, நிர்ஹேதுகத்வம் ஸித்தம்; ஆகிலும், அவனுக்கு ஒரு ப்ரயோஜநமுண்டாகில் விஷயீகரிக்கலாயிற்றிறே; அதுவுமில்லை, ப்ரயோஜநம் சொல்லாமையாலே என்று கருத்து; அங்கு ஸநிபந்தநமாகச் செய்தான், இங்கு நிர்நிபந்தநமாகச் செய்தான் என்றபடி. p,r யத்வா, அவதாரணத்துக்கு அர்த்தம் (ப்ரயோஜந நிரபேக்ஷமாக இத்யாதி) அதாவது - ப்ரயோஜநார்த்தமாகில், அது கைப்புகுந்தவாறே அவ்வருகே போகவேண்டியிருக்கும்; இங்கு அதில்லாமையாலே அவ்வருகே போக்கில்லை என்கை. கமலக்கண்ணன் என்று தொடங்கி, அடைவே உரை அந்வயம். 9.

ஜீ—தாத்பர்யம் (தனக்கு) இத்யாதி. l கேள்விகொள்ளவேண்டாதபடி - கேட்கவேண்டாதபடி. m "நுதற்கண்ணனொடும்" என்று அந்வயித்து அருளிச்செய்கிறார் (லலாடநேத்ர இத்யாதி) n தோற்றி-தோற்றுவித்து என்று விவக்ஷித்து (உண்டாக்கி) என்றது. o (நெய்யுண்ணி இத்யாதி) "ஆக்கி" என்கிறது-ல்யப்பன்று, ப்ரதமைகவசநாந்த சப்தம் என்றபடி. p,q,r அவதாரணார்த்தம் (கர்மாநுகுணமாக இத்யாதி) விஷமஸ்ருஷ்டி சொல்லுகையாலே - கர்ம நிபந்தநத்வம் ஸித்தமென்று கருத்து. r (ப்ரயோஜந நிரபேக்ஷமாக) அவ்வருகு போக்கில்லாமையாலே, ப்ரயோஜந நிரபேக்ஷத்வம் ஸித்தம் என்றபடி, க்ரமேணாந்வய:. 9.

ஒ— அவ:— பத்தாம் பாட்டில் — ப்₃ரஹ்மருத்₃ராதி₃களுக்கு அற அரியனுயுள்ள எம்பெருமான், தன் திருவடிகளை அவர்கள் கொண்டாடி ஏத்தாநிற்கச்செய்தே அத்தை அநாத₃ரித்து, தான் வந்து என் உச்சியுள்ளே புகுந்தான் என்கிறுர்.

வ்யா:— (நெற்றியுள் நின்று என்று தொடங்கி) நெற்றியுள்ளே நிற்கிற, என்னை ஆளுகிற, ஒழுங்கான மலர்கள்போலே இருக்கிற திருவடிகளை ஆத₃ரித்துத் திருக்குழலில் செவ்வியாலே சாத்தியருளின திருத்துழாய் தழைக்கும்படியான திருமுடியின் அழகையுடைய க்ருஷ்ணனைத் தொழுவார். **10.**

ப— 10. அவ:— அநந்தரம், ப்₃ரஹ்மாதி₃களுக்கும் ஆஶ்ரயணீயனுனவன் என்னுடைய உத்தமாங்க₃த்திலே ஆனுன் என்கிறுர்.

நெற்றியுள் நின்று — அபி₄முக₂மாய் நின்று, **என்னை** — என்னை, **ஆளும்**— அடிமைகொள்வதாய், **நிரை மலர்** — ஆஶ்ரிதரிட்ட பூநிரையை உடைத்தான, **பாதங்கள்**—திருவடிகளை, **சூடி** — (தங்கள் தலையிலே) சூடி, **கற்றை** — செறிந்த **துழாய்**— திருத்துழாயாகிற, **முடிக்கோலம்**—திருமுடி அலங்காரத்தையுடையனுய், **கண்ணபிரானை** — (ஆஶ்ரிதபவ்யனுய்) உபகரிக்கும் க்ருஷ்ணனை, **தொழுவார்** — (அஞ்ஜலிப₃ந்த₄ாதி₃முக₂த்தாலே) ஆஶ்ரயிப்பார், **ஒற்றைப் பிறை**—ஏககலாரூபமான பிறையை, **அணிந்தானும்**—ஶிரோபூ₄ஷணமாகவுடைய ருத்₃ரனும், **நான்முகனும்**— சதுர்முக₂னும், **இந்திரனும்** — இந்₃ரனும், **மற்றை** — மற்றுமுள்ள, **அமரரும் எல்லாம்** — தே₃வர்கள் எல்லாரும், (இப்படி அவர்களாலே தொழப்பட்டவன்,) **வந்து**—(அந்த நெற்றியுள் நின்றும்) வந்து, **என் உச்சியுளான்**—என் தலையின்மேலே ஆனுன். **10.**

இ— அவ:— பத்தாம் பாட்டில் — ப்₃ரஹ்மாதி₃கள் தன் பக்கலிலே மேல்விழா நிற்க, அவர்களை அநாத₃ரித்து என்பக்கலிலே தான் மேல்விழாநின்ருன் என்கிறுர்.

வ்யா:— **(நெற்றியுள் நின்று என்னை ஆளும்)** என் நெற்றியிலே நின்று என்னை ஆளுகிற. **(நிரைமலர்ப்பாதங்கள்)** மலரொழுங்குபோலே இருக்கிற திருவடிகளை. **(சூடி)** ஶிரஸா வஹித்து. **(கற்றைத்துழாய்)** திருக்குழலின் ஸ்பர்ஶத்தாலே தழையாநிற்கிற திருத்துழாய். **(முடிக்கோலம்)** கோலம் - அழகு. ஒப்பனையழகையுடைய திருமுடி. **(கண்ணபிரானை)** உபகாரஶீலனுன க்ருஷ்ணனை. **(தொழுவார்)** ஸர்வேஶ்வரன் ஆழ்வாரையல்லது அறியானுயிருக்கையாலே, நெற்றியுள்நின்று திருமுடிக்குப் போம்போது நடுவேயாயிற்று ப்₃ரஹ்மாதி₃கள் தொழுவது. ராஜாக்கள் அந்த:புரத்தில் ஒருகட்டில் நின்றும் ஒருகட்டுக்குப் போம்போது, நடுவே வந்து கார்யத்துக்குக் கடவார் முகங்காட்டுமாபோலே, **(ஒற்றை இத்யாதி₃)** ஒருகலாமாத்ரமான சந்த்₃ரனை ஒப்பனையாகவுடைய ருத்₃ரனும்.

இ—சதுர்முகனும், இந்த்ரனும், மற்றுமுண்டான ஸர்வதேவதைகளும், அவர்கள் தங்கள் செல்லாமையாலே தொழாநிற்க, அவர்களை அநாதரித்து, தான் என்னை யொழியச் செல்லாதானாய் வந்து என் உச்சியிலே புகுந்தான். 10.

ஈ— அவ:— பத்தாம் பாட்டு. a ப்ரஹ்மாதிகள் தன்னைப் பெறுகைக்கு அவஸர ப்ரதீக்ஷராய்த் a_2 தடுமாறும்படி இருக்கிறவன் தான் a_3 என்னைப் பெறுகைக்கு அவஸரம் பார்த்து a_4 வந்து என் உச்சியுளானான் என்கிறார்.

வ்யா:—(நெற்றி இத்யாதி) நெற்றியுள்நின்று என்னை அடிமைகொள்ளுகிற. (நிரை மலர்ப்பாதங்கள் சூடி) மலரை b நிரைத்தாற்போலே இருக்கிற திருவடிகளை ஶிரஸா வஹித்து. (c கற்றைத்துழாய் இத்யாதி) d ஒரு வாடல் மாலையைக் கொண்டு வந்து திருமுடியிலே வைத்தாலும், திருக்குழலின் ஸ்பர்ஶத்தாலே செவ்விபெற்றுத் தழையாநிற்கும். e A "தழைக்கும் துழாய்" என்னுமாபோலே. f செவ்விபெற்றுத் தழைக்கிற திருத்துழாயோடே கூடின திருவபிஷேகத்தை உடையனாய், தர்ஶநீயமான வடிவையுமுடைய உபகாரஶீலனான க்ருஷ்ணனை— g நிரைமலர்ப்பாதங்கள் சூடித்தொழு வார். (h ஒற்றைப்பிறை அணிந்தானும்) i ஒரு கலாமாத்ரமான சந்த்ரனை ஜடையிலே தரித்து ஸுகப்ரதாநனாயிருக்கிற ருத்ரனும், அவனுக்கு ஜநகனான சதுர்முகனும்,

அ— பத்தாம் பாட்டு. (நெற்றியுள் இத்யாதி) a "ப்ரஹ்மாதிகள் தொழும்படியிருக்குமவன் உச்சியுளான்" என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்யாநின்றுகொண்டு, இப்பாட்டுக்கு ஸங்கதி அருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாதிகள் இத்யாதி) b (நிரைத்தாற்போலே) அடைவுபட நிறுத்தினாற்போலே என்றபடி. c, d (ஒரு வாடல் மாலையை) கற்றையாகாநிற்கிற துழாய் என்ற படி; கற்றை - தழைக்கிற. பறிக்கப்பட்ட துழாயாகிலும், ஸ்பர்ஶவிஶேஷத்தாலே தழையா நிற்கக் குறையில்லையிறே. e ஸம்வாதம் (தழைக்கும்) இத்யாதி. f ஶப்தார்த்தம் (செவ்வி பெற்று இத்யாதி) g த்விதீயாயா அந்வயம் தர்ஶயதி (நிரைமலர்ப்பாதங்கள் சூடித் தொழுவார் இதி) h, i ஒற்றைப்பிறை-ஏககலாமாத்ர சந்த்ரன். j, k (மெய்க்காட்டுக்கொண்டிருக்கிற) "இதி-பரமைஶ்வர்யே". மெய்க்காட்டு - எண்ணிக்கை.

ஜீ— பத்தாம் பாட்டு. (நெற்றியுள் இத்யாதி) a "ப்ரஹ்மாதிகள் தொழும்படியிருக்குமவன் உச்சியுளான்" என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்யாநின்றுகொண்டு, இப்பாட்டுக்கு ஸங்கதி (ப்ரஹ்மாதிகள் இத்யாதி) a_3 "வந்து" என்றத்தைப்பற்ற (என்னைப்பெறுகைக்கு அவஸரம் பார்த்து) என்றது. a_2 "தொழுவார்" என்று - அவர்கள் தடுமாற்றம். a_4 "வந்து" என்று - இவன் தடுமாற்றம். b (நிரைத்தாற்போலே) அடைவுபட நிறுத்தினாற்போலே. c (கற்றைத்துழாய்) கற்றை-தழைக்கிற. பறிக்கப்பட்ட துழாயாகிலும், ஸ்பர்ஶவிஶேஷத்தாலே தழையாநிற்கக் குறையில்லையிறே. e ஸம்வாதம் (தழைக்கும் இத்யாதி) f ஶப்தார்த்தம் (செவ்விபெற்று இத்யாதி) g "கண்ணபிரானை" என்கிற த்விதீயாவிபக்திக்கு அந்வயம் காட்டுகிறார் (நிரைமலர்ப்பாதங்கள் சூடித் தொழுவார்) என்று. h, i ஒற்றைப்பிறை-ஏககலாமாத்ர சந்த்ரன். j மெய்க்காட்டு - எண்ணிக்கை.

A பெரிய திருவந்தாதி-39.

Released by Maaran's Dog ,Toronto , Canada

11. உச்சியுள் ளேநிற்கும் தேவ தேவற்குக் கண்ண பிராற்கு
இச்சையுள் செல்ல வுணர்த்தி வண்குரு கூர்ச்சட கோபன்
இச்சொன்ன வாயிரத் துள்ளி வையுமோர் பத்துஎம்பி ராற்கு
நிச்சலும் விண்ணப்பம் செய்ய நீள்கழல் சென்னி பொருமே.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம்.

ஆ— 11. வ்யா:—(உச்சியுள்ளே) இப்படி உச்சியுள்ளே நிற்கையாலே ஸர்வேஶ்வரனானவனுக்கு இப்படிச் சொன்ன இத்திருவாய்மொழியை எம்பெருமானுக்கு நிச்சலும் விண்ணப்பஞ்செய்ய, நீள் கழல் சென்னி பொரும் என்கிறார். 11.

திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவடிகளே ஶரணம்.

ஒ— அவ:— நிக3மத்தில்—இத்திருவாய்மொழியை, எம்பெருமானுக்கு விண்ணப்பஞ் செய்ய, எம்பெருமான் திருவடிகள் அவன்தலையிலே நாடோறும் சேரும் என்கிறார்.

ஈ-தே3வர்களை j மெய்க்காட்டுக் கொண்டிருக்கிற k இந்த்3ரனும், மற்றுமுண்டான தே3வர்களுமெல்லாம், l இப்படி அவர்கள் தடுமாறுநிற்க m தன்னைப்பெறுகைக்கு, அதெல்லாம் தான் என்னைப்பெறுகைக்குப் பட்டு வந்து, என் உச்சியுளானாகாநிற்கிறான். n ராஜாக்கள் அந்த:புரத்தில், o ஒருகட்டில் நின்றும் மற்றைக்கட்டேறப்போகாநிற்க, நடுவே அந்தரங்கர் முகங்காட்டித் தம் காரியங்கொண்டு போமாபோலே இவர் திருநெற்றியில் நின்றும் திருமுடியேறப் போகாநின்றால், ப்3ரஹ்மாதி3கள் நடுவே முகங்காட்டித் தங்கள் காரியங்கொண்டு போமித்தனை. 10.

அ— l "நெற்றியுள் நின்று என்னை ஆளும் கற்றைத்துழாய் முடிக்கோலக் கண்ணபிரானை, ஒற்றைப்பிறை அணிந்தானும் நான்முகனும் இந்திரனும் மற்றை அமரரும் எல்லாம், நிரை மலர்ப்பாதங்கள் சூடித் தொழுவாராய் - தொழக்கடவர்களாய் நிற்க, தான் அவர்களுக்கு முகங்கொடாமல் மதே3கபரனாய் வந்து எனது உச்சியுளான் ஆனான்" இத்யந்வயம் ஹ்ருதி3 நித4ாய பூ4ாவமாஹ (இப்படி அவர்கள் தடுமாறுநிற்க இதி) l, m "தன்னைப்பெறுகைக்கு இப்படி அவர்கள் தடுமாறுநிற்க" என்று அந்வயிப்பது. n உக்த ஏவாந்வயே, தொழுவார் - தொழுகிறார்கள்; அந்தத் தொழுகிற ஸமயத்திலே வந்து எனது உச்சியுளான் ஆனான் இத்யாக3மந க்ரியாயா:, ப்3ரஹ்மாதீ3நாம் பூ4ஜ3வத் ஸந்த3ர்ஶநஸ்ய ச ஏககாலீநத்வம் ஹ்ருதி3 நித4ாய பூ4ாவசந்தரமாஹ (ராஜாக்கள் இதி) o ஒரு கட்டு - ஒரு கக்ஷ்யை. "என்னையாளும் நிரைமலர் என்று தொடங்கி, மற்றை அமரரும் எல்லாம் நெற்றியுள்நின்று வந்து எனது உச்சியுளான்" என்று அந்வயம். 10.

ஜீ— l "நெற்றியுள் நின்று என்னையாளும் கற்றைத்துழாய் முடிக்கோலக் கண்ணபிரானை, ஒற்றைப்பிறை தொடங்கி, அமரருமெல்லாம் நிரைமலர்ப்பாதங்கள் சூடித் தொழாநிற்கச்செய்தே, வந்தெனது உச்சியுளான்" என்று அந்வயித்து பூ4ாவம் (இப்படி இவர்கள் இத்யாதி3) l, m "தன்னைப்பெறுகைக்கு இப்படி அவர்கள் தடுமாறுநிற்க" என்று அந்வயிப்பது. n ஸத்3ருஷ்டாந்த விவரணம் (ராஜாக்கள் இத்யாதி3) கீழ்ச்சொன்னதே அந்வயம். 10.

Released by Maaran's Dog ,Toronto , Canada

ஒ— வ்யா:—(உச்சியுள்ளே நிற்கும் தேவதேவற்கு) தே₃வதே₃வனாய் வைத்து என் உச்சியுள்ளே நின்றவனுக்கு; என் உச்சியுள்ளே நிற்கையாலே அயர்வறும் அமரர்கள் அதிபதியானான் என்றுமாம். (கண்ணபிராற்கு) உள்ளத்திலே படும்படி அமைத்து. 11.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ப— 11. அவ:— அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் ப₂லமாக நித்யமான ப₄க₃வத்ப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

உச்சியுள்ளே நிற்கும் — (இப்படியே) உச்சியிலே நிற்குமவனாய், தேவ தேவற்கு — தே₃வதே₃வனுமாய், கண்ணபிராற்கு — கண்ணபிரானுமான பரத்வ ஸௌலப்₄யங்களை உடையவனுக்கு, இச்சை — (தம்பக்கல் அவன்பண்ணின) அபி₄நிவேஶம், உள் — (தம்முடைய) உள்ளே, செல்ல — நடக்க, உணர்த்தி — (அத்தை அவனுக்கு) அறிவித்து, வண்குருகூர்ச் சடகோபன் — ஆழ்வார், இச் சொன்ன ஆயிரத்துள் — அருளிச்செய்த இந்த ஆயிரத்துள் (அவனுடைய ஸம்ஶ்லேஷ க்ரமஸூசகமான), இவை — இந்த, ஓர் — அத்₃விதீயமாயுள்ள, பத்து— பத்தையும், எம்பிராற்கு—எம்பெருமானுக்கு, விண்ணப்பஞ்செய்ய, விண்ணப்பஞ் செய்ய, நீள்—ஆஶ்ரிதரிருந்தவிடத்தளவும் வருவதான, கழல்—அவன் திருவடிகள், சென்னி — இவர்கள் தலையிலே, நிச்சலும் — நிச்சலும், பொருும் — பொருந்தும். இத்திருவாய்மொழி அறுசீராசிரிய விருத்தம். 11.

வாதி₃கேஸரி அழகியமணவாளச்சீயர் திருவடிகளே ஶரணம்.

இ— அவ:— நிக₃மத்தில் — இத்திருவாய்மொழியை விண்ணப்பஞ்செய்ய, நாள் தோறும் திருவடிகள் தலையிலே சேரும் என்கிறார்.

வ்யா:— (உச்சியுள்ளே நிற்கும் தேவதேவற்கு) A "அமரர் சென்னிப்பூவினை" என்கிறபடியே தே₃வர்களுக்கு ஶிரோபூ₄ஷணமாய் வைத்து, "இனி ஒரு க₃ந்தவ்ய பூ₄மியில்லை" என்று என் உச்சியுள்ளே வர்த்தியாநின்றான். என் உச்சியுள்ளே நிற்கையாலே அயர்வறும் அமரர்கள் அதிபதியானான் என்றுமாம். (கண்ணபிராற்கு) எனக்கு க்ருஷ்ணனாய் வந்து உபகரித்தவனுக்கு. (இச்சை உள் செல்ல உணர்த்தி) தன்பக்கலிலே அவன் பண்ணின அபி₄நிவேஶத்தைத் தாமறிந்த படியைத் திருவுள்ளத்திலே பட அறிவித்து. (இச்சொன்ன ஆயிரம்) இப்ப₄ாவ வ்ருத்தியோடே சொன்ன ஆயிரம். (எம்பிராற்கு) இப்படி ஸாத்மிக்க ஸாத்மிக்கவும், இழவு மறக்கவும் அநுப₄விப்பித்த உபகாரகற்கு. (விண்ணப்பஞ்செய்ய நிச்சலும் நீள்கழல் சென்னி பொரும்) ஒருகால் விண்ணப்பஞ்செய்ய, என்றுமொக்கத் திருவடிகள் தலையிலே சேரும். நீள்கழல் - ஆஶாலேஶமுடையார் இருந்தவிடம் எல்லையாக வளரும் திருவடிகள். பொரு என்று - ஒப்பாய், சேரும் என்றபடி. "உச்சியுள்ளே நிற்கும்" என்று இவர் பெற்றதுவே பேறுகக்கடவது. 11.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

A திருக்குறுந்தாண்டகம்-6.

ஈ— அவ:— நிகமத்தில்—a இத்திருவாய்மொழியை எம்பெருமானுக்கு விண்ணப்பஞ் செய்ய, அவர்கள் தலையிலே எம்பெருமான் திருவடிகள் நாடோறும் சேரும் என்கிறார்.

வ்யா:— b இனி எங்கே போவதாக இருந்தான்? என்னில் (உச்சியுள்ளே நிற்கும்) c அமரர் சென்னிப்பூவான தான், என் சென்னிக்கு அவ்வருகு கந்தவ்ய பூமியில்லை என்று என் உச்சியுள்ளே வர்த்தியாநின்றான்; c என் உச்சியுள்ளே நிற்கையாலே தேவதேவனானான் என்றுமாம். (உள்ளே நிற்கும்) d இனி அவ்வருகு போக்கில்லை. (தேவதேவற்கு) e அயர்வறும் அமரர்களதிபதியாயிருக்கிற இருப்பையும் நினைக்கிறிலன். (e கண்ணபிராற்கு) உபகாரசீலனான க்ருஷ்ணனுக்கு, (f இச்சை உள் செல்ல உணர்த்தி) g ஸர்வேஶ்வரனுக்குத் தம் பக்கலுண்டான h இச்சையைத்

அ— நிகமம் (உச்சியுள்ளே நிற்கும் இத்யாதி) a "ஒருகால் விண்ணப்பஞ்செய்ய, நிச்சலும் நீள் கழல் சென்னி பொரும்" என்று அந்வயித்து அருளிச்செய்கிறார் (இத்திருவாய்மொழியை இத்யாதி)

b "உச்சியுள்ளே" என்கிற அவதாரணத்தையும், "நிற்கும்" என்கிற வர்த்தமாநத்தையும் கடாக்ஷித்துக் கீழோடு இதுக்கு ஸங்கதி அருளிச்செய்கிறார். (இனி எங்கே இத்யாதி) c,c "தேவ தேவன்" என்றத்தை-பூர்வபாவியாகவும், அபரபாவியாகவும் அருளிச்செய்கிறார் (அமரர் இத்யாதி) A "மூவரில் முதல்வனாய ஒருவனை" இத்யாதி. d அவதாரணார்த்தத்தை விவரிக்கிறார் (இனி அவ்வருகு இத்யாதி) e "அமரர் சென்னிப்பூவான" என்ற வாக்யவிவரணம் (அயர்வறும் இத்யாதி) யத்வா, அபரபாவியாகச் சொன்னத்தைவிவரிக்கிறார் (அயர்வறும் இத்யாதி) மூன்றும் தாத்பர்யமாதல். முந்தின யோஜனையாலே, தேவதேவனாயிருக்க உச்சியுள்ளேயானான் - தேவ தேவனாகையாலே அவர்களுக்குக் காட்சி கொடுக்க வேண்டியிருக்க, அவர்களை ஒரு சரக்காக்காமல் இங்கேதானே ப்ரதிஷ்டிதனாகாநின்றான் என்றபடி. இரண்டாம் யோஜனையில், நித்யஸூரி களுக்கு நிர்வாஹகனாகையாலே தேவதேவனானானாக நினைத்திருக்கிறிலன், அது இவர் உச்சி யுள்ளானாகையாலே என்று நினைத்திருக்கிறான். e, f "கண்ணபிராற்கு" இத்யத்ர-ஸர்வ விஷயோபகார உச்யதே; "எம்பிரானுக்கு" இத்யத்ர ஸ்வவிஷயோபகார உச்யதே; அதோ ந பௌநருக்த்யம். f, g (ஸர்வேஶ்வரனுக்கு இத்யாதி) உள் - தம்முடைய அறிவு; செல்லுகை - அவன் திருவுள்ளத்திலே செல்லுகை. யத்வா (இச்சை உள் செல்ல) பகவதிச்சயா பகவத் த்ருதயகதா யதா பவதி, ததேதி ஶப்தார்த்த:. h (இச்சையைத் தாம் அறிந்தபடி) என்றது-

ஜீ— நிகமம் (உச்சியுள்ளே இத்யாதி) a "விண்ணப்பஞ்செய்ய நிச்சலும் நீள்கழல் சென்னி பொரும்" என்று அந்வயித்து அவதாரிகை (இத்திருவாய்மொழியை இத்யாதி)

b "உச்சியுள்ளே" என்கிற அவதாரணத்தையும், "நிற்கும்" என்கிற வர்த்தமாநத்தையும் கடாக்ஷித்து பாவம் (இனி எங்கே இத்யாதி) c, c "தேவதேவன்" என்றத்தைப் பூர்வபாவி யாகவும், அபரபாவியாகவும் அருளிச்செய்கிறார் (அமரர் சென்னி இத்யாதி வாக்யத்வயத்தாலே) d அவதாரணார்த்த விவரணம் (இனி அவ்வருகு போக்கில்லை) என்று. e "அமரர் சென்னி" இத்யாதியின் விவரணம் (அயர்வறும் இத்யாதி) மூன்றும் தாத்பர்யமாதல். h (இச்சையைத் தாம் அறிந்தபடியை) தாம் க்ருதஜ்ஞரானபடியை. f உள்செல்ல-அவன் திருவுள்ளத்திலே படும்படி; இச்சை - அபிநிவேஶம். யத்வா, உள் - தம்முடைய அறிவு, செல்ல - அவன் திருவுள்ளத்திலே

A திருக்குறுந்தாண்டகம்-6.

ஈ—தாம் அறிந்தபடியை அவன் திருவுள்ளத்திலே படும்படி உணர்த்தி. (i வண்குருகூர்ச் சடகோபன்) j ஸர்வேஶ்வரனுக்கு அறிவித்தவளவேயன்றிக்கே, ஸம்ஸாரிகளும் அறியும்படி பண்ணின உதா3ரரான ஆழ்வார். (k இச்சொன்ன) l இப்ப4ாவவ்ருத்தியாலே சொன்ன ஆயிரத்திலும் இவையும் ஓர் பத்து. (l2 எம்பிராற்கு இத்யாதி3) எம்பிராற்கு விண்ணப்பஞ்செய்ய, நிச்சலும் நீள்கழல் சென்னி பொரும் - m தனக்குப் பாங்கான ஸமயத்திலே ஒருகால் விண்ணப்பஞ்செய்ய, நாள்தோறும் ஆஶாலேஶமுடையார் இருந்தவிடத்திலே செல்ல வளரும் திருவடிகள் சென்னியோடே சேரும். எம்பிரான் என்றது - இப்படி ஸாத்மிக்க ஸாத்மிக்கவும், n இழவு மறக்கவும், அநுப4விப்பித்த உபகாரகன் என்றபடி. o ஆழ்வார் க்ரமத்திலே ''உச்சியுளானே'' என்ற பேறு, இது கற்றார்க்கு முதலடியிலே உண்டாம். p ''பொரு'' என்று - ஒப்பாய், ஒப்பாவது - சேருகையாய், சேரும் என்றபடி. q ''உச்சியுள்ளே நிற்கும்'' என்று - இவர் பெற்றதுவே பேறாகக் கடவது.

அ—தாம் க்ருதஜ்ஞரானபடியை என்றபடி. i, j வண்மை ஏதென்ன (ஸர்வேஸ்வரனுக்கு இத்யாதி3) k, l இச்சொன்ன-இப்படிச் சொன்ன இதி ஶப்3த3ார்த்த2ம் ஶ்ருதி3 நித4ாயாஹ (இப்ப4ாவவ்ருத்தியாலே சொன்ன இதி) (இப்ப4ாவவ்ருத்தியாலே இதி) ''என்னுடைச் சூழலுளானே'' இத்யாரப்4ய உக்தயா தா3ர்ஶநஸமாநாகாரயா ப4ாவவ்ருத்த்யா இத்யர்த்த2:. m (தனக்கு இத்யாதி3) ''நிச்சலும் விண்ணப்பஞ்செய்ய'' என்றால், கழல் சென்னி சேருகைக்குக் காலமின்றிக்கேயொழியுமென்று கருத்து. n (இழவு மறக்கவும்) இழந்த நாளையில் இழவை அநுஸந்தி4த்து அநுஶோகிக்கில், துல்யாயவ்யயமாகையால் உபகாரமின்றிக்கேயொழியுமே; அத்ர. A ''பழுதே பல பகலும் போயின என்றஞ்சி அழுதேன்'' இதிப்ரகாரேண பூர்வாவஸ்த2ா ஸ்மரணஜது3:க்க2க3ந்த4ரஹிதம் இதி வா; B ''அஞ்சிறைய மடநாராய்'' இத்யாதி3 த3ஶாகோக்த விஶ்லேஷஸ்மரணஜது3:க்க2க3ந்த4ரஹிதம் இதி வா. o (ஆழ்வார் க்ரமத்திலே) ப4க3வத்3விஷயீகாராத3ப்யாசார்யாபி4மாநஸ்யாதி4க்யம் ஸூச்யதே. p ''பொரும்'' என்றால் - ''சேரும்'' என்னலாமோ? என்ன (பொரு என்று இத்யாதி3) q ஶிஷ்யாசார்யயோ: ப2லபே4த3ரஹிதம் ஏகமேவ

ஜீ—செல்ல; அவனுடைய இச்சா2விஷயமான தம்முடைய அறிவு என்றாய், இச்சை2யைத் தாம் அறிந்தபடியை அவன் திருவுள்ளத்திலே படும்படி அறிவித்த என்றபடி. j வண்மை ஏதென்ன (ஸர்வேஸ்வரனுக்கு அறிவித்த இத்யாதி3) k இச்சொன்ன-இப்படிச்சொன்ன. m (தனக்கு இத்யாதி3) ''நிச்சலும் விண்ணப்பஞ்செய்ய'' என்றால், ''கழல் சென்னி பொரும்'' என்கைக்குக் காலமின்றிக்கேயொழியுமென்று கருத்து. n (இழவு மறக்கவும்) பூர்வாவஸ்த2ா ஸ்மரணஜ து3:க்க2க3ந்த4ரஹிதமாகவும். ஒ.l2 ''கண்ணபிரான்'' என்கிறவிடத்திலே - ஸர்வவிஷய உபகாரஞ்சொல்லுகிறது; ''எம்பிராற்கு'' என்கிறவிடத்தில்-தம்முடைய விஷயமான உபகாரஞ்சொல்லுகிறது; அதோ ந பௌநருக்த்யம். o இத்தால் இது கற்றவர்களுக்கு வ்யாவ்ருத்தி (ஆழ்வார் இத்யாதி3) ப4க3வத்3விஷயீகாரத்திலும் ஆசார்யாபி4மாநத்துக்கு ஆதி4க்யமுண்டு என்றபடி. p ''பொரும்'' என்றால்- ''சேரும்'' என்னலாமோ? என்ன (பொரு என்று இத்யாதி3) q இது கற்றார்க்குப் ப2லபே4த3மில்லை, இவர்க்குள்ள ப2லமே ப2லம் என்கிறார் (உச்சியுள்ளே இத்யாதி3) r நிக3மத்தில், திரியவும்

A முதல் திருவ-16. B 1.4.

ஈ— முதற்பாட்டில், என்னுடைய பர்யந்தத்திலே வந்து நின்றான் என்றார்; இரண்டாம் பாட்டில், அது ஸாத்மித்தவாறே அருகே நின்றான் என்றார்; மூன்றாம் பாட்டில், தம்முடனே கூட நின்றான் என்றார்; நாலாம் பாட்டில், ஒக்கலையிலே வந்திருந்தான் என்றார்; அஞ்சாம் பாட்டில், நெஞ்சிலே வந்து புகுந்தான் என்றார்; ஆறாம் பாட்டில், தோளிலே வந்திருந்தான் என்றார்; ஏழாம் பாட்டில், நாவிலே வந்து புகுந்தான் என்றார். எட்டாம் பாட்டில், கண்ணுள்ளே நின்றான் என்றார்; ஒன்பதாம் பாட்டில், நெற்றியிலே நின்றான் என்றார்; பத்தாம் பாட்டில், திருமுடியிலே நின்றான் என்றார்; நிகமத்தில், ፣ ஆக, இத்தால் - தம்முடனே ஸாத்மிக்கும்படி கலக்கையாலே, அவனை ஶிரஸா வஹித்தார்; பலஞ்சொல்லித் தலைக்கட்டினார். 11.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

அ—பலம் ஜாதமித்யபிப்ராயேணாஹ (உச்சியுள்ளே இதி) ፣ (ஆக இத்தால்) இதி வாக்யஸ்ய, ''உச்சியுள்ளே நிற்கும்'' இத்யநுவாதே ஹ்ருதயம், ரஸோக்திஶ்ச. ''உச்சியுள்ளே நிற்கும் என்று தொடங்கி, எம்பிராற்கு விண்ணப்பஞ்செய்ய நீள்கழல் நிச்சலும் சென்னி பொரும்'' இத்யந்வய:. 11.

ஆத்தான்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஜீ—''உச்சியுள்ளே நிற்கும்'' என்றதுக்குத் தாத்பர்யாந்தரம் (ஆக இத்தால் தம்முடனே இத்யாதி) ''உச்சியுள்ளே இத்யாரப்ய, எம்பிராற்கு விண்ணப்பஞ்செய்ய நீள்கழல் நிச்சலும் சென்னி பொரும்'' இத்யந்வய:. 11.

ராமாநுஜ ஜீயர் திருவடிகளே ஶரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி - இவையும்

१. आत्मार्जवानुभवकौतुकिनोऽस्य शौरिरात्मोपभोगरुचिमभ्यधिकां ददानः ।
देव्यादिवद्रसयिता क्रमतोऽखिलाङ्गान्याशिश्रयत्तदवदन्नवमे शठारिः ॥ ९ ॥

1. ஆத்மார்ஜவாநுபவகௌதுகிநோऽஸ்ய ஶௌரி:
ஆத்மோபபோகருசிமப்யதிகாம் ததாந: ।
தேவ்யாதிவத்ரஸயிதா க்ரமதோऽகிலாங்காந்-
யாஶிஶ்ரயத் தததவதந்நவமே ஶடாரி: ॥ 9 ॥

அழகிய மணவாளச் சீயர் திருவடிகளே ஶரணம்.

த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்நாவளி - இவையும்

२. पर्यन्तेऽङ्के च दृष्टं स्वविरहविमुखं डिम्भवत्पार्श्वलीनं
चित्ते क्लृप्तप्रवेशं भुजशिखरगतं तालुसिंहासनस्थम् ।
चक्षुर्मध्ये निविष्टं स्थितमलिकतटे मस्तके तस्थिवांसम्
प्रत्याहारोक्तरीत्या विभुमनुबुभुजे सात्म्यभोगप्रदानात् ॥ ९ ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி

**9. இவையறிந்தோர் தம்மளவி லீசனுவந் தாற்ற
அவயவங்கள் தோறு மணையும்—சுவையதனைப்
பெற்றுஆர்வத் தால்மாறன் பேசினசொல் பேசமால்
பொற்றுள்நம் சென்னி பொரும்.**

பெரிய ஜீயர் திருவடிகளே ஶரணம்.

அவ:— ஒன்பதாம் பாட்டு. (இவை அறிந்தோர் தம்மளவில்) இதில் — எம்பெருமானுடைய ஸாத்ம்யபோ₄க₃ ப்ரத₃த்வத்தை அருளிச்செய்த பாசுரத்தை அநுவதி₃த்து அருளிச்செய்கிறார். எங்ஙனேயென்னில்: இத்தலையில் செவ்வைக் கேடு தனக்குச் செவ்வையாம்படி இவர்களுக்குப் பாங்காகத் தன்னை அமைத்துப் பரிமாறும் ஆர்ஜவகு₃ணயுக்தனேயாகிலும், தன் நினைவறிந்து செவ்வியராய்ப் பரிமாறும் திருவடி திருவனந்தாழ்வான் தொடக்கமான நித்யாஶ்ரிதரோடே உகப் போடே கலக்குமாபோலே இன்று ஆஶ்ரயிக்கிறவர்களோடு உகப்புடனே கலந்து பரிமாறக்கூடுமோ? என்னில்; அவர்கள் எல்லாரோடும் ஓரோ ப்ரகாரத்தாலே பரிமாறுகிறவன், அவர்கள் எல்லாரோடும் பரிமாறுகிற பரிமாற்றம் எல்லா வற்றையும் இவர் ஒருவருடனே ஸர்வேந்த்₃ரியங்களாலும் ஸர்வகா₃த்ரங்களாலும் பொறுக்கப்பொறுக்கப் பரிமாறும் என்கிற "இவையும் அவை"யில் அர்த்த₂த்தை "இவை அறிந்தோர் தம்மளவில்" இத்யாதி₃யாலே அருளிச்செய்கிறார்.

பர்யந்தே ஽ங்கே ச த்₃ருஷ்டம் ஸ்வவிரஹவிமுக₂ம் டி₃ம்ப₄வத் பார்ஶ்வலீநம்
சித்தே க்லுப்தப்ரவேஶம் பு₄ஜஶிக₂ரக₃தம் தாலுஸிம்ஹாஸநஸ்த₂ம் ।
சக்ஷுர்மத்₄யே நிவிஷ்டம் ஸ்தி₂தமலிகதடே மஸ்தகே தஸ்தி₂வாம்ஸம்
ப்ரத்யாஹாரோக்தரீத்யா விபு₄மநுபு₃பு₄ஜே ஸாத்ம்யபோ₄க₃ப்ரத₃ாநாத் ॥ 9 ॥

வ்யா:— (1) (பர்யந்தே த்₃ருஷ்டம்) என்னுடைச் சூழலுளானே - சுற்றடிகொண்டு தோற்றியும்; (2) (அங்கே ச த்₃ருஷ்டம்) அவன் என் அருகலிலானே - ஸமீபத்திலே வந்து தோற்றியும்; (3) (ஸ்வவிரஹ விமுக₂ம்) ஒழிவிலன் என்னோடுடனே-விட்டுப்பிரியமாட்டாதேயும்; (4) (டி₃ம்ப₄வத் பார்ஶ்வலீநம்) கண்ணன் என் ஒக்கலையானே - குழந்தையைப்போலே ஒக்கலை யிலே வந்திருந்தும்; (5) (சித்தே க்லுப்த ப்ரவேஶம்) மாயன் என் நெஞ்சினுளானே - மநஸ்ஸிலே வந்து ப்ரவேஶித்தும்; (6) (பு₄ஜஶிக₂ரக₃தம்) என்னுடைத் தோளிணையானே - தோளிணைமேலே ஏறியும்; (7) (தாலுஸிம்ஹாஸநஸ்த₂ம்) என்னுடை நாவினுளானே - ஜிஹ்வாஸிம்ஹாஸநத்திலேயிருந்தும்; (8) (சக்ஷுர்மத்₄யே நிவிஷ்டம்) கமலக்கண்ணன் என் கண்ணினுளானே - கண்ணினுள்ளேயிருந்தும்; (9) (ஸ்தி₂தமலிகதடே) என் நெற்றியுளானே - நெற்றியிலே நின்றும்; (10) (மஸ்தகே தஸ்தி₂வாம்ஸம்) எனது உச்சியுளானே - ஶிரஸ்ஸிலே யிருந்தும் இப்படி அநுப₄விப்பிக்கிற எம்பெருமானை "இவையும் அவையும்" என்கிற த₃ஶகத் திலே ஆழ்வார், பூ₄க்த்யங்க₃மான ப்ரத்யாஹாரத்தில் உக்தக்ரமத்தாலே ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுப₄வித்தருளினார் என்கிறார். 9.

வேதா₃ந்த தே₃ஶிகர் திருவடிகளே ஶரணம்.

திருவாய்மொழி முதற்பத்து பத்தாம் திருவாய்மொழி
பொருமாநீள் ப்ரவேசம்

ஆ— (பொருமாநீள் படை) இப்படி எம்பெருமான் தம்மோடே கலந்த கலவியால் தமக்குப் பிறந்த நிரவதிகமான நிர்வ்ருதியாலே அக்கலவியைப் பேசுகிருர்.

ஒ— பத்தாம் திருவாய்மொழியில் — புத்த்யாதி பதார்த்தங்களுக்கெல்லாம் தானே காரணமாகையாலே, ஜ்ஞாந விஶேஷாத்வேஷமென்ன, கருணையென்ன, நிரதிஶய பக்தியென்ன, இவற்றையெல்லாம் நிரதிஶயமாக எம்பெருமான் தமக்குப் பிறப்பித்துத் தம்மோடே நிரவதிக ஸம்ஶ்லேஷத்தைப் பண்ணினபடியைக் கண்டு "அத்வேஷாதிகளுடையாரோடு,தம்மோடு ஸம்ஶ்லேஷித்தாற்போலே ஸம்ஶ்லேஷிக்கும்" என்றும், "தான் நினைத்தார்க்கு அவ்வளவுகளைப் பிறப்பிப்பான் தானே" என்றும் அநுஸந்தித்து நிர்வ்ருதராகிருர்.

தி.நா— வ்யா:— (இவை அறிந்தோர்தம்மளவில்) இந்த ஆர்ஜவகுணத்தை அறிந்தவர்கள் விஷயத்திலே. (ஈசன் உவந்து ஆற்ற அவயவங்கள்தோறும் அணையும் சுவையதனைப் பெற்று) ஸர்வேஶ்வரன் ஹ்ருஷ்டனாய் ஸாத்மிக்க ஸாத்மிக்க ஸர்வாவயவங்களிலும் ஸம்ஶ்லேஷிக்கும் ரஸந்தன்னைப் பெற்று; பொறுக்கப்பொறுக்க உறுப்புத்தோறும் செறிப்புத் தீரக் கலக்குமதான பெருப்பேற்றைப் பெற்று; அதாவது—1. "ஸ ராமோ வாநரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாங்க்ஷதே" என்னும்படியான, "என்னுடைச் சூழலுளானே" (1) "அருகலிலானே" (2) "ஒழிவிலன் என்னோடுடனே" (3) "கண்ணன் என் ஒக்கலையானே" (4) "மாயன் என் நெஞ்சினுளானே" (5) "என்னுடைத் தோளிணையானே" (6) "என்னுடை நாவினுளானே" (7) "கமலக்கண்ணன் என் கண்ணினுளானே" (8) "என் நெற்றியுளானே" (9) "என் உச்சியுளானே" (10) என்று தலைக்கு மேலே ஏறினபடியை அடியொற்றினபடி. அணையும் சுவையாவது - அருகலில் அறுசுவை*. "பிராட்டி, திருவடி, திருவனந்தாழ்வான் தொடக்கமானாரோட்டைக் கலவியில் ரஸங்களெல்லாம் ஏகவிஷயத்தில் உண்டாம்படி கலந்து" என்றத்தை நினைக்கிறது. (ஆர்வத்தால் மாறன் பேசின சொல் பேச) இப்படி பெரும்பேறு பெற்று, அத்தால் உண்டான அபிநிவேஶத்தாலே ஆழ்வார் அருளிச்செய்த திவ்யஸூக்தியை, கேவலம் வாக்காலே வசிக்க. (மால் பொற்றாள் நம் சென்னி பொரும்) ஆஶ்ரித வ்யாமுக்தனான ஸர்வேஶ்வரனுடைய ஸ்ப்ருஹணீயமான சரணங்கள் நம்முடைய சென்னித்திடரிலே சேரும். பொரும் என்று- ஒப்பாய், அத்தால் - சேரும் என்றபடி. A "நிச்சலும் விண்ணப்பஞ்செய்ய நீள் கழல் சென்னி பொரும்" என்றத்தை அருளிச்செய்தபடி. 9.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே ஶரணம்.

திருவாய்மொழி முதற்பத்தில்

ஒன்பதாம் திருவாய்மொழி வ்யாக்யானங்கள் முற்றுப்பெற்றன.

---

* அருகலில் அறுசுவை—"அருகலில்" (8) பாசுரத்தின் பன்னீராயிரப்படியுரையில் விவரிக்கப்பட்டுள்ளது. A 1-9-11.

ப— பத்தாம் திருவாய்மொழியில் — "இப்படி ஸர்வப்ரகார ஸம்ஶ்லேஷம் பண்ணுகைக்கு அடி - அவனுடைய நிர்ஹேதுக மஹோபகாரகத்வமிறே" என்று அநுஸந்தி₄த்து, அதுக்கு உபபாத₃கமாக, அவன் தன் வடிவைத் தம்முடைய கண்ணுக்கு இலக்காக்கினபடியையும், க்ஷணமாத்ரத்திலும் ஸுலப₄னென்னுமிடத்தையும், அவனுடைய அநுப₄ாவ்ய ஸ்வப₄ாவத்வத்தையும், நிரந்தராநுப₄ாவ்யதையையும், அர்த்தி₂த்வமும் வேண்டாத அதிஶயிதோபகாரகத்வத்தையும், அதுக்கடியான ப₃ந்த₄ விஶேஷத்தையும், இதுக்குப் படிமாவான ஸூரிபே₄ாக்₃யதையையும், உபகாரகத்வோபயுக்தமான பூர்ணதையையும், இவ்வுபகார க்ரமம் மறக்க அரிது என்னுமிடத்தையும், மறவாமைக்கு அவன் பண்ணின யத்ந விஶேஷத்தையும் அருளிச்செய்து, அவனுடைய மஹோபகாரகத்வத்தை அநுப₄வித்துக் களிக்கிறார்.

இ— பத்தாம் திருவாய்மொழியில் — கீழ்பெற்ற பேற்றை அநுஸந்தி₄த்து, "இக்கனத்த பேறு நமக்கு எத்தாலே வந்தது" என்று இதுக்கு அடியை ஆராய்ந்தவாறே, 1. "बुद्धिर्ज्ञानमसम्मोहः क्षमा सत्यं दमश्शमः। सुखं दुःखं भवोऽभावो भयञ्चाभयमेव च॥ अहिंसा समता तुष्टिस्तपो दानं यशोऽयशः। भवन्ति भावा भूतानां मत्त एव पृथग्विधाः॥" (பு₃த்₃தி₄ர்ஜ்ஞாநமஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் த₃மஶ்ஶம:। ஸுக₂ம் து₃:க்க₂ம் ப₄வோऽப₄ாவோ ப₄யஞ்சாऽப₄யமேவ ச॥ அஹிம்ஸா ஸமதா துஷ்டிஸ்தபோ தா₃நம் யஶோऽயஶ:। ப₄வந்தி ப₄ாவா பூ₄தாநாம் மத்த ஏவ ப்ருத₂க்₃விதா₄:॥) என்கிறபடியே பு₃த்₃த்₄யாதி₃ ஸகல பதா₃ர்த்த₂ங்களுக்கும் தானே காரணமாகையாலே, அத்₃வேஷமென்ன, பரிக₃ணனையென்ன, பரமப₄க்தியென்ன இவ்வளவுகளை நிர்ஹேதுக க்ருபையாலே தமக்குப் பிறப்பித்துத் தம்மோடு கலந்தபடியைக் கண்டு, அத்₃வேஷாதி₃களுடையாரோடும், தம்மோடு கலந்தாற்போலே கலக்கும் ஸ்வப₄ாவனென்றும், அவர்களுக்கு அவ்வளவுகளைப் பிறப்பிப்பான் அவனே என்றும் அநுஸந்தி₄த்து நிர்வ்ருதராகிறார். முன்புள்ளார், "கீழ் பெற்ற பேற்றை அநுஸந்தி₄த்து நிர்வ்ருதராகிறார்" என்னுமளவேயாயிற்று நிர்வஹிப்பது; ப₄ட்டர், தம்முடைய வைப₄வமெல்லாம் காட்டும் திருவாய்மொழியாயிற்று இது.

நீ— அவ:— a "கீழில் திருவாய்மொழியில் பிறந்த ஸர்வாங்க₃ ஸம்ஶ்லேஷத்தை அநுஸந்தி₄த்து b நிர்வ்ருதராகிறார்" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி.

அ— பொருமாநீள் ப்ரவேஶம். a "கருமாணிக்கம் என் கண்ணுளதாகுமே" என்ற பத₃த்தை நிதா₃நமாக விவக்ஷித்துக் கீழ்த் திருவாய்மொழியோடு இதுக்கு ஸங்க₃தி அருளிச்செய்கிறார் (கீழில் திருவாய்மொழியில் இத்யாதி₃)

ஜீ— பொருமாநீள் படை ப்ரவேஶம்—b "கருமாணிக்கம் என் கண்ணுளதாகுமே" என்ற பத₃த்தை நிதா₃நமாக விவக்ஷித்துக் கீழோடே இத்திருவாய்மொழிக்கு ஸங்க₃தி (நிர்வ்ருதராகிறார் என்று

ஈ—/(அதாவது) நிர்வ்ருதி என்று ஸுக$_2$மாய், ஸுகி$_2$க்கிருர் என்றபடி. c கீழ்ப்பிறந்த ஸர்வாங்க$_3$ஸம்ம்ஶ்லேஷத்தை c$_2$ அநுஸந்தி$_4$த்து d ப$_4$ட்டர் அருளிச்செய்வதோர் d$_2$ஏற்றமுண்டு. அதாவது—"உச்சியுள்ளே நிற்கும்" என்றிறே கீழ் நின்றது, பேற்றில் இனி இதுக்கு அவ்வருகு ஏற்றமாகச் செய்துகொடுக்கலாவதொன்றுமில்லை; e இனி இதினுடைய அவிச்சே$_2$த$_3$த்தைப் பண்ணிக்கொடுக்கையே உள்ளது; e$_2$ 'பேறு கனத்திருந்தது; இது வந்த வழி என்ன்' என்று ஆராய்ந்தார், f இப்பேற்றின் கனத்துக்கீடாயிருப்பதொரு நன்மை தம்தலையில் இன்றிக்கேயிருந்தது; g இத்தலையிலும் ஏதேனும் உண்டாகப் பார்த்

அ— c நிர்வாஹாந்தரத்தில் விசேஷம் அருளிச்செய்கிருர் (கீழ்ப்பிறந்த இத்யாதி$_3$) c$_2$ அநுஸந்தி$_4$த்து - ஆராய்ந்து பார்த்து என்றபடி. அதாவது-"இவ்வாழ்வார் கீழில் திருவாய்மொழியிலே ஸர்வாங்க$_3$ ஸம்ம்ஶ்லேஷத்தை அநுப$_4$விக்கும்போது, அதுக்கு ஹேதுவாக ஒன்றைச் சொன்னதுண்டோ?" என்று ஆராய்ந்து பார்த்து, அது காணுமையாலே ப$_4$ட்டர் இங்ஙனே யோஜித்தார் என்று கருத்து. a,b,c,c$_2$ "கீழில் திருவாய்மொழியில்" என்று தொடங்கி "அநுஸந்தி$_4$த்து" என்னுமளவும் பாட$_2$மில்லாதபோது, "அநுஸந்தி$_4$த்து நிர்வ்ருதராகிருர்" என்று கீழோடே யோஜிக்கவுமாம். d$_2$ (ஓரேற்றமுண்டு) அதாவது - நிர்ஹேதுகத்வாநுஸந்த$_4$ாந பூர்வகமாக நிர்வ்ருதராகிருர் என்று. e அஸ்தி ஹி பரமபத$_3$ப்ராபணமித்யத்ராஹ (இனி இதினுடைய இதி) இதினுடைய-ஸர்வாங்க$_3$ ஸம்ம்ஶ்லேஷத்தினுடைய. f "இப்பேற்றின் கனத்துக்கு ஈடாயிருப்பதொரு" இதி வாக்யஸ்ய - "நித்யஸூரிகள் பேற்றை" (ப 970 t) இதி வாக்யேந ஸங்க$_3$தி:; மத்$_4$யக$_3$தம் ஸர்வம் வாக்யம் ப்ரஸக்தாஶங்காபரிஹாரபரம்.

தத$_2$ாஹி-g நநு, த்$_3$ருஷ்டம் கார்யம் காரணகல்பநாயாலம்; அகாரணகார்யோத்பத்த்ய ப$_4$ாவாத்; தஸ்மாத்$_3$த்$_4$ராமாநுமாநவத் ஸர்வமுக்திப்ரஸங்க$_3$ரூபதர்க்கஸஹக்ருத ஏதாத்$_3$ருஶாநுப$_4$வ ஏவ ஸாத$_4$நஸத்$_3$ப$_4$ாவே ப்ரமாணமித்யாஶங்காம் ப்ரத$_2$மம் அப்$_4$யுபக$_3$மேந பரிஹரதி

ஜீ—இத்யாதி$_3$) c (கீழ்ப்பிறந்த ஸர்வாங்க$_3$ ஸம்ம்ஶ்லேஷத்தை அநுஸந்தி$_4$த்து) என்ற வாக்யம்-ப்ரவேஶத்தின் ஆதி$_3$யிலே அநுஸந்தே$_4$யம். d,d$_2$ ப$_4$ட்டர் அருளிச்செய்வதோரேற்றமாவது — நிர்ஹேதுகத்வாநுஸந்த$_4$ாந பூர்வகமாக நிர்வ்ருதராகிருர் என்று. c,b "கீழில் திருவாய்மொழியில் பிறந்த ஸர்வாங்க$_3$ ஸம்ம்ஶ்லேஷத்தை அநுஸந்தி$_4$த்து நிர்வ்ருதராகிருர்" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்குப்படி. நிர்வ்ருதி என்று - ஸுக$_2$மாய், ஸுகி$_2$க்கிருர் என்றபடி. c,d,d$_2$ "கீழ்ப்பிறந்த ஸர்வாங்க$_3$ ஸம்ம்ஶ்லேஷத்தை அநுஸந்தி$_4$த்து ப$_4$ட்டர் அருளிச்செய்வதோரேற்றமுண்டு" என்று இங்ஙனே பாட$_2$பே$_4$த$_3$முண்டு. இப்போது யத$_2$ாக்ரமமே அநுஸந்தே$_4$யம். முன்பின்னுக வாக்யம் அநுஸந்தி$_4$க்கவேண்டியதில்லை. c$_2$ அநுஸந்தி$_4$த்து - ஆராய்ந்து பார்த்து. அதாவது-"கீழ்ப்பிறந்த ஸர்வாங்க$_3$ ஸம்ம்ஶ்லேஷத்துக்கு ஹேதுவாக ஒன்றைச் சொன்னதுண்டோ?" என்று ஆராய்ந்து பார்த்து, காணுமையாலே ப$_4$ட்டர் இங்ஙனே யோஜித்தார் என்று கருத்து; e இல்லை என்கிறதென்? நித்யவிபூ$_4$தியிலே கொண்டுபோய் அநுப$_4$விப்பிக்கிறது ஏற்றமன்ருே? என்ன; அன்று என்கிருர் (இனி இதினுடைய இத்யாதி$_3$) e$_2$ ஆகையாலே பேறு கனத்திருந்தது என்று கூட்டுவது. e இதினுடைய - ஸர்வாங்க$_3$ ஸம்ம்ஶ்லேஷத்தினுடைய. f (இப்பேற்றின் கனத்துக்கீடாயிருப்பது) இத்யாதி$_3$ வாக்யத்துக்கு - "நித்யஸூரிகள் பேற்றை" (ப 970 t) இத்யாதி$_3$ வாக்யத்தோடே ஸங்க$_3$தி. நடுவுள்ளதெல்லாம் ப்ரஸக்தாஶங்காபரிஹாரபரம்.

( ) இவ்வடைப்பிலுள்ளது சில ப்ரதிகளிலேயே. இதற்கு முன்னுள்ள வாக்யத்தில் "கீழில் திருவாய்மொழியில்... அநுஸந்தி$_4$த்து" என்னும் பகுதியும், "நிர்வ்ருதி என்று ஸுக$_2$மாய், ஸுகி$_2$க்கிருர் என்றபடி" என்னும் மேல் வாக்யமும் ஜீயர் அரும்பதவுரைக்குப் பாட$_2$மில்லை.

ஜீ—தாலும், அத்3வேஷமாதல், ஆபி4முக்2யமாதலிறே உள்ளது; h அத்தை ஸாத4நமாகச் சொல்லப் போராதே; i இத்தலையிலே பரமப4க்தி பர்யந்தமாகப் பிறந்தாலும் பேற்றின் கனத்துக்கு இத்தை ஒரு ஸாத4நமாகச் சொல்லப் போராதே; j ஒருவன் ஓர் எலுமிச்சம் பழம்கொடுத்து ராஜ்யத்தைப்பெற்றால் அது k விலையாயிராதே; l ஸர்வேஶ்வரன் அடியாக வரும் பேற்றுக்கு m இத்தலையால் ஓரடி நிரூபிக்கலாயிராதே; nA "வரவாறென்றில்லை o யால் வாழ்வினிதால்" என்னும்படியிறேயிருப்பது.

p இவனை முதலிலே ஸ்ருஷ்டிக்கிறபோது "இவன் q தீய வழியைத் தப்பி நல்ல வழி போகவேணும்" என்று உபகரணங்களைக் கொடுத்துவிடுகையாலே, இவன்தலையால்

அ—(இத்தலையிலும் ஏதேனும் இதி) h அஸ்து; கோ தோ3ஷ இத்யத்ராஹ (அத்தை ஸாத4நமாக இதி) i அத்3வேஷாபி4மூக்2யே ஸாத4நத்வேந வக்தும் ந யுஜ்யதே இத்யேதத் கைமுத்ய ந்யாயேநோபபாத3யதி (இத்தலையிலே இதி) B நலம் அருளினனே என்ன (இத்தலையிலே இத்யாதி3) என்னவுமாம். j உக்தமர்த்த2ம் த்3ருஷ்டாந்தேநோபபாத3யதி (ஒருவன் இதி) k விலை-ஸத்3ருஶம் என்றபடி. l,m அத2 பரோக்தாநுமாநஸ்ய பா3தி4தவிஷயத்வம் வத3ந் அநப்4யுபக3மேந பரிஹரதி (ஸர்வேஶ்வரன் அடியாக இதி) m (இத்தலையால் ஓரடி இதி) சேதநேநாநுஷ்டி2தம் ஸாத4நமித்யர்த்த2:. l,m யத்3வா, ஹேத்வந்தரம் அருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரன் என்று) இது - ஸாவதா4ரணம்; கர்மமடியாக அன்றிக்கே என்றபடி — அத2வா, கார்யத்தைக்கொண்டு ஏதத்ஸத்3ருஶமான காரணத்தைக் கல்பித்தாலோ? என்ன (ஸர்வேஶ்வரன் இத்யாதி3) அன்றிக்கே, கீழ் ஸத்3ருஶஸாத4நமில்லை என்று அருளிச்செய்து, ப2லத்தினுடைய அநந்ய ஸாத்4யத்வத்தை அருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரன் இத்யாதி3) என்னுதல். n அவன் செய்த நிர்ஹேதுக விஷயீகாரத்தை அநுஸந்தி4த்து ஆஶ்சர்யப்பட்டுக்கொண்டிருக்கிறதே இவனுக்கு உள்ளதென்கிறார் (வரவாறு இத்யாதி3) பெரியதிருவந்தாதி. C "வெறிதேயருள்செய்வர்" இத்யேதச்சாஸ்த்ர விவக்ஷிதம். o ஆல் - ஆஶ்சர்யத்திலே.

p ஸத்3ருஶஸாத4நமில்லாவிட்டாலும் எலுமிச்சம்பழம்போலேதான் ஸ்வதந்த்ரமாக இவை ப்ரஸாத3ந ஹேதுவானாலோ? என்ன (இவனை இத்யாதி3) யத்3வா, கர்மநிப3ந்த4நதாப்4யுப க3மேந அருளிச்செய்கிறார் (இவனை இத்யாதி3) q (தீய வழியைத்தப்பி) ஸம்ஸாரத்தில் தப்பி. r கரணகளேப3ர ப்ரதா3நமாத்ரமன்றிக்கே, உபரிதநகார்யங்களும் அவனே செய்வான் என்கிறார்

ஜீ— g ஸர்வமுக்தி ப்ரஸங்க3 பரிஹாரார்த்த2மாக இவனிடத்திலும் சில உண்டாகவேண்டாவோ? என்ன (இத்தலையிலும் இத்யாதி3) h அஸ்து; கோ தோ3ஷ இத்யத்ராஹ (அத்தை ஸாத4நமாக இத்யாதி3) i அத்3வேஷாபி4முக்2யங்களுக்கு ஸாத4நத்வராஹித்யத்தை கிம்புநர்ந்யாயத்தாலே ஸாதி4க்கிறார் (இத்தலையிலே பரமப4க்தி இத்யாதி3) j பரமப4க்த்யாதி3கள் ஸாத4நமன்று என்கைக்கு த்3ருஷ்டாந்தம் (ஒருவன் இத்யாதி3) k விலை-ஸத்3ருஶம். l,m கார்யத்தைக்கொண்டு ஏதத்ஸத்3ருஶகாரணத்தைக் கல்பித்தாலோ? என்ன (ஸர்வேஶ்வரன் இத்யாதி3) m (இத்தலையால் ஓரடி) சேதநனால் அநுஷ்டி2தமான ஸாத4நம். n நிர்ஹேதுகத்வத்துக்கு ப்ரமாணம் (வரவாறு இத்யாதி3) o ஆல் - ஆஶ்சர்யத்திலே.

p கீழ், ஸாத4நத்வத்தை அநப்4யுபக3ம்ய அருளிச்செய்து, அப்4யுபக3ம்ய அருளிச்செய்கிறார் (இவனை முதலிலே இத்யாதி3) r பரிஹாராந்தரம் (இனி பு3த்3த்4யாதி3 இத்யாதி3) இனி - கிஞ்ச.

A பெரியதிருவ-53. B 1-1-1. C 8-7-8.

ஸ்ரீ-பிறந்த நன்மைக்கும் அடி அவனுயிருக்குமே; r இனி பு3த்3த்4யாதி3 ஸகலபதா3ர்த்த2ங்களுக்கும் நிர்வாஹகனுகையாலே, அத்3வேஷம் தொடக்கமாக, s பரிக3ணனை நடுவாக,

அ—(இனி இத்யாதி3) அன்றிக்கே—கீழே. இவனிடத்திலுண்டான நன்மைக்கு ஹேது-காரணகனே பா3ரத்3வாரா ஈஸ்வரனே என்றூர்; கிஞ்ச 1. "யோ பு3த்3தி4மந்தரே ஸஞ்சரந் யஸ்ய பு3த்3தி4ஸ் ஸரீரம்" என்றும், 2. "பு3த்3தி4ர் ஜ்ஞாநமஸம்மோஹ:" என்றும் இத்யாதி3யைப்போலே பு3த்3த்4யாதி3களெல்லாம் அவனிட்ட வழக்காகையாலும் ஈஸ்வரனே ஹேது என்கிறூர் (இனி இத்யாதி3யாலே)என்னுதல். 3."ஈஸ்வரஸ் ஸர்வபூ4தாநாம்"இத்யாத்3யநுஸந்தே4யம். s பரிக3ணனையென்றது-"எண்ணிலும் வரும்" (2) என்றத்தைப்பற்ற. p,r யத்3வா. சேதநக3த ஸர்வாதிஸய ஹேதுபூ4தகரணகளேபா3ரப்ரதா3த்ருத்வாத், அநந்தரம் சேதநாந்தர்யாமிதயா பு3த்3த்4யாதி3 ஸகல பதா3ர்த்த2 நிர்வாஹகத்வாச்ச ஸர்வேஸ்வர ஏவ ஹேதுரிதி உபாத்தப்ரமாணுநுக்3ராஹகம் உபபத்தித்3வயமாஹ (இவனை முதலிலே இத்யாதி3 வாக்யத்3வயேந) A "நாடாத மலர் நாடி" இத்யாதி3. 4. "விசித்ரா தே3ஹஸம்பத்தி:" இத்யாதி3. r (இனி இதி) கிஞ்ச இத்யர்த்த2:.

ஜீ—1."யோ பு3த்3தி4மந்தரே ஸஞ்சரந்" 3."ஈஸ்வரஸ் ஸர்வபூ4தாநாம்" இத்யாத்3யநுஸந்தே4யம். கீ3தாஸு த3ஸமே — 2. "பு3த்3தி4ர்ஜ்ஞாநமஸம்மோஹ: க்ஷமா ஸத்யம் த3மஸ்ஸம:। ஸுக2ம் து3:க2ம் ப4வோऽபா4வோ ப4யஞ்சாப4யமேவ ச॥ அஹிம்ஸா ஸமதா துஷ்டிஸ்தபோ தா3நம் யஸோऽயஸ:। ப4வந்தி பா4வா பூ4தாநாம் மத்த ஏவ ப்ருத2க்3விதா4:॥" s பரிக3ணனையென்றது-"எண்ணிலும் வரும்" (2) என்றத்தைப்பற்ற.

k,k₂ பதச்சேர்த்திக்கு பாவம்(அவ்வடிவழகை இத்யாதி) k,l,m,n ஸப்தார்த்தம்(ஆக்கரான இத்யாதி) ஆக்கரான-ஸுக்ருதாநுகுணமாக ஸ்ருஷ்டரான. m உம்பர்-மேல். g₂,k "திருமூர்த்தி" என்றதுக்கு-வடிவழகிலும். "ஆதியஞ்சோதி" என்றதுக்கு-மேன்மையிலும் நோக்கு. இது, நிகமத்திலும், சாற்றுப்பாட்டிலும் வ்யக்தம். n "ஆதி" என்றதின் அர்த்தம் (ஸத்தாதிகளுக்கும் இத்யாதி) o,o₂,p உபகாரமாஹ (அவர்கள் இத்யாதி) p படி-திருமேனியும், ப்ரகாரமும். q "என்சொல்லி" என்றதுக்குப் பூர்வோக்தமான விஶேஷணங்களிலே நோக்காக அருளிச்செய்கிறார் (அபூர்ணனென்று இத்யாதி) "தென்குறுங்குடி நின்ற நம்பியை, அச்செம்பொனே" இத்யாரப்ய அந்வய:. 9.

A தமிழ்நிகண்டு.

10. மறப்பும் ஞானமும் நானொன் றுணர்ந்திலன்
மறக்கு மென்றுசெந் தாமரைக் கண்ணொடு
மறப்பற வென்னுள்ளே மன்னினான் றன்னை
மறப்ப னோவினி யானென் மணியையே?

ஆ— 10. வ்யா:— (மறப்பும்) வருந்தியாகிலும் அவன்பக்கலில்நின்றும் நெஞ்சை வ்யாவ்ருத்திப்பித்து, அவனை மறந்திருந்தாலோ? என்னில்; இப்படி தன் அழகை எனக்குக் காட்டியருளி "ஒருநாள் தன்னைக் காட்டிப்போகில், ஜ்ஞாநாஜ்ஞாநங்களிரண்டுக்கும் ஆச்ரயமல்லாமையாலே அசித்கல்பனான இவன் நம்மை மறக்கும்" என்று பார்த்தருளி, தன்னை நான் மறவாமைக்காக, அசேதநத்தைச் சேதநமாக்கவல்ல தன்னுடைய அழகிய திருக்கண்களோடேகூட என்னுள்ளே புகுந்து, எனக்குப் பரமஸுலபனாய்க் கொண்டு, "இனிப் பேரேன்" என்று இருந்தருளினான்; இவனை நான் "மறப்பேன்" என்று வருந்தினால் மறக்கமுடியுமோ? என்கிறார். 10.

ஒ— அவ:— பத்தாம் பாட்டில் — வருந்தியாகிலும் அவனை மறந்தாலோ? என்னில், அழகிய திருக்கண்களாலே நோக்கிக்கொண்டு ஒருநாளும் மறக்கவொண்ணாதபடி என்னுள்ளே நிரந்தரமாக வர்த்திக்கிறவனை, நான் மறக்கும்படி எங்ஙனே? என்கிறார்.

வ்யா:— (மறப்பும் ஞானமும் நானொன்று உணர்ந்திலன்) ஜ்ஞாநமென்று ஒன்றென்றும், மறப்பென்று ஒன்றென்றும் அறிந்திலேன்; அஸத்கல்பன். (மறக்கு மென்று தொடங்கி) ஏவம்விதனான எனக்கு அறிவைப் பிறப்பித்து, "இவன் நம்மை மறக்கும்" என்று பார்த்து. (என் மணியை) தன்னுடைய திருவழகை எனக்கு போக்யமாம்படி தந்தவனை. 10.

ப— 10. அவ:— அநந்தரம், மறவாதபடி அவனே யத்நம் பண்ணுநிற்க, மறக்க விரகுண்டோ? என்கிறார்.

மறப்பும் — மறப்பென்றும், **ஞானமும்** — அறிவென்றும், **ஒன்று** — ஒன்றை, **உணர்ந்திலன்**— அறிந்திலேனாயிருக்க, (தன் விஷயத்தில் அறிவை உண்டாக்கி) **மறக்கும்** — "இத்தை இவன் மறக்கும்", **என்று** — என்று நினைத்து, (கடாக்ஷிக்கைக்கு அடியான) **செம்**—சிவந்த, **தாமரை** — தாமரைபோன்ற, **கண்ணொடு** — கண்ணோடே, **மறப்பற**—மறப்புப் புகுராதபடி, **என்னுள்ளே**—என் நெஞ்சுக்குள்ளே, **மன்னினான்தன்னை** — நிரந்தரவாஸம் பண்ணி, **என் மணியை** — நீலரத்நம்போலே முடிந்தாளலாம்படி எனக்கு ஸுலபனானவனை, **இனி** — இனி, **யான்** — நான், **மறப்பனோ** — மறக்கும்படியென்? 10.

இ— அவ:— பத்தாம் பாட்டில் — அவன் மறவாமைக்கு க்ருஷி பண்ணுகிற்க, என்னாலே மறக்கப்போமோ? என்கிறார்.

இ— வ்யா:— (மறப்பும் ஞானமும் நான் ஒன்று உணர்ந்திலன்) மறப்பென்றும் ஞானமென்றும் ஒன்றும் அறிந்திலேன் நான். ஒரு சேதநனாய், நினைத்தேனோ மறக்கைக்கு? நினைவு நான் அடியாக வரிலன்றோ மறப்பும் நான் அடியாக வருவது; அசித்கல்பன். (மறக்குமென்று) அறிவுக்கு அடைவின்றிக்கேயிருக்கிற என் பக்கலிலே அறிவைப் பிறப்பித்து, "மறக்கக்கூடும்" என்று பார்த்து, அழகிய திருக்கண்களாலே குளிர நோக்கிக்கொண்டு, ஒரு நாளும் மறக்க வொண்ணாதபடி என்னுள்ளே ஸ்தாவரப்ரதிஷ்டையாயிருந்தவனை. புறம்பொரு அந்யபரதை தோற்ற இருக்கிறிலன். (மறப்பனோ இனி) மறவாமைக்குப் பரிஹாரம் அவன் கையிலே உண்டாயிருக்க, இனி மறக்க உபாயமுண்டோ? கீழ் அநாதி காலம் நினைக்க விரகில்லாதாப்போலேயிறே, மேலுள்ள காலம் மறக்க விரகில் லாதபடியும். (யான்) அநாதிகாலம் விஸ்மரித்துப்போந்த நான். (என் மணியையே) பெருவிலையனாய், முடிந்தாளலாம்படி கைப்புகுந்து, புகரையுடைத்தான நீலமணிபோலேயிருக்கிற தன்னை, எனக்கு அநுபவயோக்யமாம்படி பண்ணி வைததபின்பு, நான் அவனை அநாதரிப்பனோ? 10.

ஈ— அவ:— பத்தாம் பாட்டு. a ஆனாலும் வருந்தியாகிலும் மறந்தாலோ? என்ன; நெஞ்சில் இருளை அறுத்துக்கொண்டு நிரந்தரவாஸம் பண்ணுகிறவனை மறக்க விரகுண்டோ? என்கிறார்.

வ்யா:—(b மறப்பும் ஞானமும் நான் ஒன்று உணர்ந்திலன்) b நான் சேதநனாய் நினைத்தேனாகிலன்றோ மறப்பது? c நினைத்தேன் நானானவன்றிறே மறக்க இடமுள்ளது. d ஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயமாமதிறே அஜ்ஞாநத்துக்கும் ஆஶ்ரயமாவது; e அசித்கல்பனாய்க் கிடீர் நானிருந்தது! (மறக்கும் இத்யாதி) f இப்படியிருக்கிற நான் நினைத்தேனாகவும்

அ— பத்தாம் பாட்டு. (மறப்பும் இத்யாதி) a புநஶ்ச "இனி மறப்பனோ" இத்யபிதாநாநுகுணம் அவதாரிகாமாஹ (ஆனாலும் வருந்தியாகிலும் இதி) b "எனக்கு மறப்புண்டாகிலும், ஜ்ஞாநமுண்டாகிலும் நான் உணர்ந்தவனல்லேன்" என்று ஶப்தார்த்தம். b, d இதுக்கு இரண்டு படியாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (நான் இத்யாதி) c பூர்வவாக்யத்தை விவரிக்கிறார் (நினைத்தேன் இத்யாதி) d தாத்பர்யாந்தரம் (ஜ்ஞாநத்துக்கு இத்யாதி) e அத்தை விவரிக்கிறார் (அசித்கல்பனாய்) என்று. b, c முந்தின தாத்பர்யத்தில்—நினைக்கையில் ஸ்வாதந்த்ர்யமில்லாமை யாலே மறக்கையிலும் ஸ்வாதந்த்ர்யமில்லை என்றபடி. d, e இரண்டாம் தாத்பர்யத்தில்—அசித் கல்பனாய்க்கிடந்த என்னை இப்படி விஷயீகரித்தபின்பு நான் மறப்பனோ? என்று தாத்பர்யம். d இங்கு ஜ்ஞானமென்கிறது - 1. "ஸா வித்யா" இதி ந்யாயத்தாலே பகவத்விஷயத்தை. b, c அதில் ஸ்வாதந்த்ர்யமில்லை என்றது-முந்துற. d, e பின்பு அந்த ஜ்ஞாநந்தானே இல்லையென்கிறது.

ஜீ— பத்தாம் பாட்டு. (மறப்பும் இத்யாதி) a புநஶ்ச "மறப்பனோ இனி" என்றதுக்கு அநுகுணமாக அவதாரிகை (ஆனாலும் இத்யாதி) b மறப்பும் ஞானமும் நானொன்று உணர்ந்திலன் - "மறப்பென்றும் ஞானமென்றும் நானொன்றை அறிந்திலன்" என்று ஶப்தார்த்தம். "நான் மறப்பென்றும் ஒன்றை அறியேன்; ஞானமென்றும் ஒன்றை அறியேன்" என்று

ஈ—g நினைவையும் என்தலையிலே ஏறிட்டு, "பிறந்த ஜ்ஞானத்துக்கு விச்சேதமும் வர வொண்ணாது" என்று பார்த்து, h அழகிய திருக்கண்களாலே குளிர நோக்கிக்கொண்டு, தன்னைப்பற்றி எனக்கு வரும் விஸ்ம்ருதி போம்படி என் ஹ்ருதயத்திலே நித்ய வாஸம் பண்ணுகிறவனை. (மன்னினான்) i "புறம்பே அந்யபரதையுண்டு" என்று தோற்ற இருக்கிறிலன். j (மறப்பனோ இனி யான் என் மணியையே) k பெருநிலையனான

அ—b, b அதவா, "ஞானம் நானென்று உணர்ந்திலன்" என்றால் அமையாதோ? "மறப்பும் ஞானமும் நானொன்று உணர்ந்திலன்" என்கிறதென்? என்ன (நான் சேதநனாய் இத்யாதி) அதாவது - இப்போது புகுவத்விஷய ஜ்ஞாநமில்லாவிட்டாலும், காலம் அநாதியாகையாலே, முன்பொரு காலத்திலே காதாசித்கஸ்ம்ருதியுண்டாய், மறக்கவும் கூடுமிறே; அதுவுமில்லை என்றபடி. c ஆனால் காதாசித்கஸ்ம்ருதியில்லை என்னாதே, "மறப்பில்லை" என்கிறதென்? என்ன (நினைத்தேன் நானானவன்றிறே இத்யாதி) அதாவது - "மறப்பில்லை" என்றபோதே, தத்பூர்வபாவியான ஸ்ம்ருதியுமில்லை என்று கருத்து. 1. "ஸ்ம்ருதேஸ்து பூர்வபாவிந்யா விரஹே விஸ்ம்ருதி: குத:। ந ஹி பிண்டாதிவிரஹே ஜாயதே கலஶாதிகம் ॥" என்னக் கடவதிறே. c,d கீழ் வாக்யவிவரணம் (ஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயமாமதிறே இத்யாதி) ஜ்ஞாநமாவது-ஸ்ம்ருதி. அஜ்ஞாநமாவது-விஸ்ம்ருதி. e எல்லாவற்றாலும் பலிதம் (அசித்கல்பனாய் இத்யாதி)

f,g,h "ஜ்ஞாநத்திலும் மறப்பிலும் ஸ்வாதந்த்ர்யமில்லை" என்றாரே; ஆனபின்பு "மறக்கும்" என்னக்கூடுமோ? என்ன (இப்படியிருக்கிற இத்யாதி) g (நினைவையும்) என்கையாலே-மறப்பை யும் என்றபடி. இந்த வாக்யம் பூர்வதாத்பர்யஶேஷம். h செம்-அழகு. i மன்னுகையாவதேது? என்ன (புறம்பு இத்யாதி) j...t "மறப்பனோ இனி" என்று தொடங்கி வ்யாக்யாநமெல்லாம் த்விதீய தாத்பர்யஶேஷம். j,k தாத்பர்யார்த்தம் (பெருநிலையனான் இத்யாதி) பெருநிலையனை-

---

ஜீ—நிஷ்க்ருஷ்டார்த்தம். b, b "ஞானம் நானொன்று உணர்ந்திலன்" என்றபோதே - விஸ்ம்ருதி ராஹித்யமும் ஸித்தமாயிருக்க, "மறப்பும் நானொன்று உணர்ந்திலன்" என்கிறதென்? என்ன (நான் சேதநனாய் இத்யாதி) அதாவது - இப்போது புகுவத்விஷய ஜ்ஞாநமில்லையாகிலும், காலம் அநாதியாகையாலே முன்பு காதாசித்கஸ்ம்ருதியுண்டாய், தத்ப்ரஶம்ஶம் வரக்கூடு மிறே; அது இல்லை என்கைக்காக விஶேஷிக்கிறது என்றபடி. c ஆனால், காதாசித்க ஸ்ம்ருதியுமில்லையென்னாதே, "மறப்பில்லை" என்கிறதென்? என்ன (நினைத்தேன் இத்யாதி) அதாவது - "மறப்பில்லை" என்றபோதே - தத்பூர்வபாவியான ஸ்ம்ருதியுமில்லை என்று கருத்து. 1. "ஸ்ம்ருதேஸ்து பூர்வபாவிந்யா விரஹே விஸ்ம்ருதி: குத:। ந ஹி பிண்டாதி விரஹே ஜாயதே கலஶாதிகம் ॥" என்னக்கடவதிறே. c,d கீழ் வாக்யவிவரணம் (ஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயமாமதிறே இத்யாதி) ஜ்ஞாநமாவது - ஸ்ம்ருதி. அஜ்ஞானமாவது-விஸ்ம்ருதி. e எல்லா வற்றாலும் பலிதம் (அசித்கல்பனாய் இத்யாதி)

f,g,h "ஜ்ஞாநத்திலும் மறப்பிலும் ஸ்வாதந்த்ர்யமில்லை" என்றாரே; ஆனபின்பு "மறக்கும்" என்னக்கூடுமோ? என்ன (இப்படியிருக்கிற இத்யாதி) g (நினைவையும்) என்கையாலே-மறப்பையும் என்றபடி. இந்த வாக்யம் / பூர்வதாத்பர்ய ஶேஷம். h செம்-அழகு. i மன்னுகை யாவதேது? என்ன (புறம்பு இத்யாதி) j...t "மறப்பனோ இனி" என்று தொடங்கி வ்யாக்யாந மெல்லாம் / த்விதீய தாத்பர்யஶேஷம். j,k தாத்பர்யார்த்தம் (பெருநிலையனை இத்யாதி)

/ அடையவளைந்தானில் சொன்ன பூர்வத்விதீய தாத்பர்யங்களை நினைக்கிறது.

11. மணியை வானவர் கண்ணனைத் தன்னதோ
ரணியைத் தென்குரு கூர்ச்சட கோபன்சொல்
பணிசெ யாயிரத் துள்ளிவை பத்துடன்
தணிவி லர்கற்ப ரேல்கல்வி வாயுமே.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம்.

ஈ-ரத்நம் கைப்புகுந்தால் அத்தை முடிந்து அநுப4வியாதே உதறுவர்களோ? (மறப்பனோ இனி) l மறவாமைக்குப் m பரிகரம் அவன் கையிலே உண்டாயிருக்க, இனி மறக்க உபாயமுண்டோ? n கீழ் அநாதி3காலம் நினைக்க விரகில்லாதாப்போலேயிறே மேலுள்ள காலமும் மறக்க விரகில்லாதபடியும். (o யான்) p அநாதி3காலம் q A''மறந்தேன் உன்னை முன்னம்'' என்கிறபடியே விஸ்மரித்துப் போந்த நான். (r என் மணியையே) s பெரு விலையனாய் முடிந்தாளலாம்படி கைப்புகுந்து புகரையுடைத்தான நீலமணிபோலே யிருக்கிற தன்னை t எனக்கு அநுப4வயோக்3யமாம்படி பண்ணிவைத்த பின்பு, நான் அவனை அநாத3ரிப்பனோ? 10.

அ—அநர்க்4மான. l,m''இனி'' என்றதுக்கு அர்த்த2ம் (மறவாமைக்கு இத்யாதி3) m பரிகரம் - செந்தாமரைக்கண். ''பரிஹாரம்'' என்று பாட2மானபோது—''மணி'' என்கிற பத3த்தில் சாடுவிலே தாத்பர்யம்; ''மணிமந்த்ரௌஷத4ாதி3கள்'' என்னக்கடவதிறே. n கீழ்வாக்ய விவரணம் (கீழ் அநாதி3காலம் இத்யாதி3) o,p''யான்'' என்றதுக்கு அர்த்த2ம் (அநாதி3காலம் இத்யாதி3) ப்ரத2ம தாத்பர்யத்தில்—''யான்'' - பரதந்த்ரனான நான், ''மறப்பனோ'' - மறக்க ஸ்வதந்த்ரனோ? என்றபடி. q பெரியதிருமொழி (மறந்தேன் உன்னை முன்னம்) யாதொரு விஷயம் விடாதே நினைக்கவடுக்கும், அப்படியான உன்னை அநாதி3காலம் மறந்துபோந்தேனென்னுதல்; மூத்துற முன்னம் மறந்துபோந்தேனென்னுதல். r,s ஶப்3தா3ர்த்த2ம் (பெருவிலையனாய் இத்யாதி3) மணிக்கு ஶ்லாக்4யதையும், முடிந்தாளலாம்படியான ஸௌலப்4யமுமுண்டிறே. t ''என்மணி'' என்கையாலே (எனக்கு அநுப4வயோக்3யமாம்படி) என்றது. ''மறப்பும் ஞானமும் என்று தொடங்கி, மன்னிறுன்தன்னை என் மணியை, இனி யான் மறப்பனோ?'' என்று உரை அந்வயம். 10.

ஜீ—பெருவிலையனான-அநர்க்4மான. l,m''இனி'' என்றதுக்கு அர்த்த2ம் (மறவாமைக்கு இத்யாதி3) m பரிகரம் - செந்தாமரைக்கண். ''பரிஹாரம்'' என்று பாட2மானபோது - ''மணி'' என்கிற பத3த்தில் சாடுவிலே தாத்பர்யம்; ''மணிமந்த்ரௌஷத4ாதி3கள்'' என்னக்கடவதிறே. n கீழ் வாக்ய விவரணம் (கீழ் அநாதி3காலம் இத்யாதி3) o,p ''யான்'' என்றதுக்கு அர்த்த2ம் (அநாதி3காலம் இத்யாதி3) ப்ரத2ம தாத்பர்யத்தில்—''யான்'' - பரதந்த்ரனான நான், ''மறப்பனோ''-மறக்க ஸ்வதந்த்ரனோ? என்றபடி. q (மறந்தேன் உன்னை முன்னம்) யாதொரு விஷயம் விடாதே நினைக்கவடுக்கும், அப்படியான உன்னை அநாதி3காலம் மறந்துபோந்தேனென்னுதல்; மூத்துற முன்னம் மறந்துபோந்தேனென்னுதல். r,s ஶப்3தா3ர்த்த2ம் (பெருவிலையனாய் இத்யாதி3) மணிக்கு ஶ்லாக்4யதையும், முடிந்தாளலாம்படியான ஸௌலப்4யமுமுண்டிறே. t ''என் மணி'' என்கையாலே (எனக்கு அநுப4வயோக்3யமாம்படி) என்றது. 10.

A பெரியதிருமொழி 6-2-2.

ஆ— 11. வ்யா:—(மணியை) வானவர் கண்ணனுயிருந்துவைத்து எனக்கு எளியனும், தனக்குத் தானே பூஷணமாயிருந்த எம்பெருமானுக்கு ஶேஷவ்ருத்திருபமாகச் சொன்ன இத்திருவாய்மொழியைக் கற்று ஆராதிருக்குமவர்களுக்கு அக்கல்விதானே வாயும் என்கிறுர். 11.

திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவடிகளே ஶரணம்.

ஒ— அவ:— நிகமத்தில் — இப்பத்தும் கற்பார் நிரதிஶயபுருஷார்த்தமான பகவத்கைங்கர்யத்தைப் பெறுவர் என்கிறுர். இக்கல்விதானே அமையும் என்றுமாம்.

வ்யா:— (மணியை என்று தொடங்கி) தனக்குத் தானே பூஷணமாய் அயர்வறும் அமரர்கள் அதிபதியாய், ஆஶ்ரயிப்பார்க்கு எளியனுயிருந்துள்ளவனே. (தென்குருகூர் என்று தொடங்கி) ஆழ்வார்க்கு அத்யந்த விதேயமாய்ச் சொற்கள் பணிசெய்த ஆயிரத்து இப்பத்தையும்; எம்பெருமானுக்குச் சொல்லாலே ஆழ்வார் பணிசெய்த ஆயிரம் என்றுமாம். (உடன் என்று தொடங்கி) ஸாபிப்ராயமாக ஶ்ரத்தாநரா்க் கற்பாராகில் கல்வி வாய்க்கும். 11.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ப— 11. அவ:— இத்திருவாய்மொழிக்குப் பலம் - இதினுடைய கல்வியே கைங்கர்யம் என்று அருளிச்செய்கிறுர்.

மணியை—(உஜ்ஜ்வலமான) மாணிக்கம்போன்ற வடிவையுடையனும், (அந்த வடிவாலே) வானவர் — பரமபதவாஸிகளுக்கு, கண்ணனே—நிர்வாஹகனுய், (அவ் வழகுக்கு ஒப்பில்லாமையாலே) தன்னதோர் அணியை—தனக்குத் தான் அலங்கார மாம்படி அத்விதீயனுனவனே, தென் — கட்டளைப்பட்ட, குருகூர் — திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் — ஆழ்வார், சொல் — சொல்லாலே, பணிசெய் — பணிசெய்த, ஆயிரத்துள்—ஆயிரத்துள், இவை பத்து—இவை பத்தையும், உடன்— அபிப்ராயத்தோடே உடன்பட்டு, தணிவிலர்—ஆறுதலற்று, கற்பரேல்—(அபிநிவேஶத்தோடே ஓர் ஆசார்யமுகத்தாலே) அப்யஸிப்பார்களாகில், கல்வி — அந்தக் கல்வி, வாயும்—கைங்கர்யரூப பலத்தோடே சேரும்.

"சொற்பணிசெய்" என்றது - சொல் எடுத்துக் கைகீட்டின என்றுமாம்; அன்றியே, "சடகோபன் சொல்" என்று கூட்டி, "பணிசெய் ஆயிரம்" என்றது- கைங்கர்ய ரூபமான ஆயிரம் என்றுமாம். இது கலிவிருத்தம். 11.

வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர் திருவடிகளே ஶரணம்.

இ— அவ:— நிகமத்தில் — இப்பத்தும் கற்பார் நிரதிஶய புருஷார்த்தமான கைங்கர்யத்தைப் பெறுவர் என்கிறுர்.

ஈ— வ்யா:— (**மணியை**) தமக்கு முடிந்தாளலாம்படி ஸுலபனானபடியைச் சொல்லுகிறார். (**வானவர் கண்ணனை**) நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனான மேன்மையையுடையவனை. (**தன்னதோரணியை**) தனக்குத் தானே ஆபரணமான அழகையுடையவனை. "தென்குறுங்குடிநின்ற" (9) என்கிறவிடம் ஸௌலப்யம். "உம்பர் வானவராதியஞ்சோதியை" (9) என்கிறவிடம் மேன்மை. "செம்பொனே திகழும் திருமூர்த்தி" (9) என்கிறவிடம் அழகு. ஸௌலப்யமும் மதிப்பும் அழகும் கூடின பசுங்கூட்டு பகவத்தத்வம். (**சொற்பணிசெய் ஆயிரம்**) A "மிடைந்த சொல்" என்கிறபடியே, சொற்கள் பணிசெய்த ஆயிரம் என்னுதல்; சொல்லாலே பணிசெய்த ஆயிரமென்று-வாசிகமான அடிமையைச் சொல்லுதல். (**உடன் கற்பரேல்**) ஸாபிப்ராயமாகக் கற்பராகில். (**தணிவிலர் கற்பரேல்**) தணிவாகிறது - ஆறுதல். ஶ்ரத்தாதராய்க் கற்பராகில். (**கல்வி வாயுமே**) கல்வி தானே ப்ரயோஜநம் என்னுதல்; கல்வியின் பலமான கைங்கர்யஸித்தியுண்டாம் என்னுதல். ஸர்வஸ்மாத்பரன் என்றார்; பூஜநீயன் என்றார்; அவன்தான் ஸுலபன் என்றார்; ஸுலபனான அவன் அபராதஸஹன் என்றார்; அவன் ஶீலவான் என்றார்; ஸ்வாராதன் என்றார்; நிரதிஶயபோக்யன் என்றார்; அவனுடைய ஆர்ஜவகுணம் சொன்னார்; ஸாத்ம்யபோகப்ரதன் என்றார்; இப்படி — ஏவம்பூதனானவன் நிர்ஹேதுகமாக விஷயீகரிப்பானொருவன் என்றார். "ஆகையாலே B'அவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே'" என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்து தலைக்கட்டினார். 11.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

ஈ— அவ:— நிகமத்தில் — a இப்பத்தைக் கற்றவர்கள் நிரதிஶய புருஷார்த்தமான பகவத் கைங்கர்யத்தைப் பெறுவர் என்கிறார்.

வ்யா:— (b மணியை) 'முந்தானையிலே முடிந்தாளலாம்படி கைப்புகுந்திருக்கும்' என்று ஸௌலப்யம் சொல்லுகிறது. c "தென்குறுங்குடி நின்ற"(9) என்கிறவிடத்தில்

அ— நிகமம் (மணியை இத்யாதி) a "கல்வி" என்றதுக்குக் கைங்கர்யத்தை விவக்ஷித்து அவதாரிகை (இப்பத்தை இத்யாதி).

b,c "மணி" என்கிற பதத்தாலே ஸௌலப்யம் சொல்லும் ப்ரகாரத்தைக் காட்டாநின்று கொண்டு "தென்குறுங்குடி நின்ற" என்ற பதத்தை நிகமிக்கிறது என்கிறார் (முந்தானை

ஜீ— நிகமம் (மணியை இத்யாதி) a "கல்வி" என்றதுக்குக் கைங்கர்யத்தை விவக்ஷித்து அவதாரிகை (இப்பத்தை இத்யாதி).

b,c "மணி" என்கிற பதத்தாலே ஸௌலப்யம் சொல்லும் ப்ரகாரத்தைக் காட்டாநின்று கொண்டு "தென்குறுங்குடிநின்ற" என்ற பதத்தை நிகமிக்கிறது என்கிறார் (முந்தானையிலே

A 1-7-11. B 1-1-1.

ஈ—ஸௌலப்4யம். (வானவர் கண்ணனை) d"உம்பர் வானவராதியஞ்சோதி"(9) என்ற மேன்மையைச் சொல்லுகிறது. (e தன்னதோரணியை) f"அச்செம்பொனே திகழும் திருமூர்த்தி" (9) என்கிற வடிவழகை நினைக்கிறது. g இம்மூன்றும் கூடின h பசுங் கூட்டாயிற்று பரதத்வமாகிறது. (தென் குருகூர்ச் சடகோபன்) i ஆழ்வார் அருளிச் செய்ததாய், "நாம் இங்குத்தைக்குக் கிஞ்சித்கரித்தோமாகவேணும்" என்று, சொற்கள் தான் "என்னைக்கொள், என்னைக்கொள்" என்று jA"மிடைந்த சொல்" என்கிறபடியே சொற்கள் பணிசெய்த ஆயிரம் என்னுதல்; சொல்லாலே பணிசெய்த ஆயிரமென்று வாசிகமான அடிமையைச் சொல்லுதல். (உடன் தணிவிலர் கற்பரேல்) ஸாபி4 ப்ராயமாகக் கற்பராகில். தணிவாகிறது-k மெத்தென்கை. l "வரில் பொகடேன், கெடில்

அ—யிலே இத்யாதி3 வாக்யத்3வயத்தாலே) முந்தானையிலே முடிந்து - தலைப்பிலே முடிந்து. c,d,f "மணியை" இத்யாதி3 விஶேஷணங்களுக்கு விஶிஷ்டத்திலே தாத்பர்யம் என்கிற அபி4ப்ராயத்தாலே அருளிச்செய்கிறார் (தென்குறுங்குடி நின்ற இத்யாதி3) e தன்னதோரணி - தனக்குத் தானே அத்3விதீயமான பூ4ஷணம். g,h (இம்மூன்றும்) "தணிவிலர் கற்பரேல் கல்வி வாயும்" என்கிறதுக்கு ஔசித்யம் உபபாதி3த்தபடி. யத்3வா, B "பரத்வ - காரணத்வ - வ்யாபகத்வ - நியந்த்ருத்வ-காருணிகத்வ-ஶரண்யத்வ-ஶக்திமத்த்வ-ஸத்யகாமத்வ-ஆபத்ஸக2த்வ-ஆர்த்திஹரத்வ விஶிஷ்டன் மயர்வை அறுக்க" இதி வாக்யோக்தப்ரக்ரியயா ப்ரத2மஶதகஸ்ய பரத்வ பரத்வாத், 1. "உபக்ரமோபஸம்ஹாராவப்4யாஸோ‌ऽபூர்வதா ப2லம் । அர்த்த2வாதோ3பபத்தீ ச லிங்க3ம் தாத்பர்யநிர்ணயே ॥" இதி ந்யாயம் ஹ்ருதி3 நித4ாயாஹ (இம்மூன்றும் கூடின இதி) நம்பியிடத்திலே இம்மூன்றும் பூர்ணம் என்று கருத்து. h பசுங்கூட்டு - கர்ப்பூரசந்த3ந குங்குமங்கள் கூட்டியது; இது அப்பனது. மாஷபிஷ்டகு3ட3தைலமிஶ்ரம் வா. i,j (ஆழ்வார் இத்யாதி3) j மிடைந்த - நிபி3ட3மான. முந்தின அர்த்த2த்தில், சடகோபன் சொன்னதாய், சொற்பணிசெய் ஆயிரம் என்று இரண்டிடத்திலும் அந்வயிப்பது. k மெத்து - மாந்த்3யம்; அதாவது-அஶ்ரத்3த4த்4ாநராயிருக்கை. l இத்தை உபபாதி3க்கிறார் (வரில்பொகடேன் இத்யாதி3)

ஜீ—இத்யாதி3 வாக்யத்3வயத்தாலே) முந்தானையிலே முடிந்து-தலைப்பிலே முடிந்து. c,d,f "மணியை" இத்யாதி3 விஶேஷணங்களுக்கு விஶிஷ்டத்திலே தாத்பர்யம் என்கிற அபி4ப்ராயத்தாலே அருளிச்செய்கிறார் (தென்குறுங்குடி நின்ற இத்யாதி3) e தன்னதோரணி - தனக்குத் தானே அத்3விதீயமான பூ4ஷணம். g,h (இம்மூன்றும்) "தணிவிலர் கற்பரேல் கல்விவாயும்" என்கிறதுக்கு ஔசித்யம் உபபாதி3த்தபடி. யத்3வா. B "பரத்வ-காரணத்வ-வ்யாபகத்வ-நியந்த்ருத்வ-காருணிகத்வ-ஶரண்யத்வ-ஶக்திமத்த்வ-ஸத்யகாமத்வ-ஆபத்ஸக2த்வ-ஆர்த்திஹரத்வ விஶிஷ்டன் மயர்வை அறுக்க" இதி வாக்யோக்த ப்ரக்ரியயா ப்ரத2மஶதகஸ்ய பரத்வபரத்வாத், 1. "உபக்ரமோபஸம்ஹாராவப்4யாஸோ‌ऽபூர்வதா ப2லம் । அர்த்த2வாதோ3பபத்தீ ச லிங்க3ம் தாத்பர்யநிர்ணயே ॥" இதி ந்யாயம் ஹ்ருதி3 நித4ாயாஹ (இம்மூன்றும் கூடின இதி) நம்பியிடத்திலே இம்மூன்றும் பூர்ணம் என்று கருத்து. h பசுங்கூட்டு - கர்ப்பூரசந்த3நகுங்குமங்கள் கூட்டினது; மாஷபிஷ்டகு3ட3தைலமிஶ்ரம் வா. i,j (ஆழ்வார் இத்யாதி3) j மிடைந்த-நிபி3ட3மான. முந்தின அர்த்த2த்தில் "சடகோபன் சொன்னதாய், சொற்பணிசெய் ஆயிரம்" என்று இரண்டிடத்திலும் அந்வயிப்பது. k மெத்து-மாந்த்3யம்; அதாவது-அஶ்ரத்3த4த்4ாநனாயிருக்கை. l இத்தை உபபாதி3க்கிறார் (வரில் பொகடேன் இத்யாதி3) m "கல்வி வாயும்" என்றவிடத்திலே,

A 1-7.11. B ஆசார்யஹ்ருத3யம்-218.

ஜ—தேடேன்" என்று இருக்கையன்றியே ஶ்ரத்₃தை₄ மாறுதே கற்பராகில். (m கல்வி n வாயுமே) oA "ஒண்டாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு" என்கிறபடியே - ஜ்ஞாநமாகில் ப₄க₃வத்₃விஷயத்தைப்பற்றியல்லதிராமையாலே, இத்தை அப்₄யஸிக்க, p இதுக்குப் ப₂லமாகக் கைங்கர்யத்தை q இதுதானே தரும். (கல்வி வாயும்) r கல்விதானே ப்ரயோஜநம் என்றுமாம்.

s இத்திருவாய்மொழியில், மேல் பரக்க அருளிச்செய்யப்புகுகிற அர்த்த₂த்தை ஸங்க்₃ரஹேண முதற்பாட்டிலே அருளிச்செய்தார்; இரண்டாம் பாட்டில், பரம ப₄க்திக்கும் பரிக₃ணனைக்கும் ஒக்க முகங்காட்டும் என்றுர்; மூன்றும் பாட்டில், கண்டாயே அவன் ஸ்வரூபமிருந்தபடி, நீயும் உன் ஸ்வரூபத்துக்குச்சேர நிற்கப் பாராய்! என்றுர்; நாலாம் பாட்டில், ஸ்வரூபாநுரூபமாக நெஞ்சு தொழுதவாறே நெஞ்சைக் கொண்டாடினுர்; அஞ்சாம் பாட்டில், கீழ் "எண்ணிலும்" என்றது ப₂லத்தோடே வ்யாப்தமானபடியை நெஞ்சுக்கு அருளிச்செய்தார்; ஆறும் பாட்டில், நாம் இருவரும் இப்படியே நிற்கப்பெறில் நமக்கு ஒரு அநர்த்த₂மும் வாராது என்றுர்; ஏழாம் பாட்டில், கீழ் இவர் அஞ்சினபடியே விடிந்தபடி சொன்னுர்; எட்டாம் பாட்டில், திருநாம ஶ்ரவணத்தாலே தம்முடைய கரணங்களுக்குப் பிறந்த விக்ருதியைச் சொன்னுர்; ஒன்பதாம் பாட்டில், விக்ருதராகாதே மறந்தாலோ? என்ன, மறக்கவொண்ணுது என்றுர்; பத்தாம் பாட்டில், வருந்தியாகிலும் மறந்தாலோ? என்ன, என் ஹ்ருத₃யத்திலே இருக்கிறவனை மறக்கப்போமோ? என்றுர்; நிக₃மத்தில், கற்றுர்க்குப் ப₂லஞ்சொன்னுர்.

அ—m "கல்வி வாயும்" என்றவிடத்திலே கல்வியென்று-ஜ்ஞாநமாய். அத்தாலே - ஜ்ஞாநப₂லமான கைங்கர்யத்தைச் சொல்லுதல். n வாய்கை-கிட்டுகை. அன்றியே, ஜ்ஞாநந்தானே ப்ரயோஜநம் என்றுமாம். o "உடன்" என்கிறத்தை உட்கொண்டு அருளிச்செய்கிறுர் (ஒண்டாமரையாள் என்று தொடங்கி) ப₄க₃வத்₃விஷயமானதே ஜ்ஞாநமாகையாலும், ஜ்ஞாநந்மோக்ஷமாகையாலும், இப்பத்தை ஸார்த்த₂மாக அப்₄யஸிக்கவே ப₄க₃வத்கைங்கர்யம் ஸித்₃தி₄க்கும் என்றபடி. p இதுக்கு-ஜ்ஞாநத்துக்கு. q இதுதானே-கல்விதானே. r (கல்விதானே) "கற்பரேல் கல்வி வாயும்" என்று-கற்கைக்குக் கல்வியைப் ப₂லமாகச்சொல்லுகையாலே, ஸ்வயம் ப்ரயோஜநம் என்றபடி.

ஜீ—கல்வியென்று - ஜ்ஞாநமாய், அத்தாலே - ஜ்ஞாநப₂லமான கைங்கர்யத்தைச் சொல்லுதல். n வாய்கை - கிட்டுகை; அன்றியே ஜ்ஞாநந்தானே ப்ரயோஜநம் என்றுமாம். o "உடன்" என்கிறத்தை உட்கொண்டு அருளிச்செய்கிறுர் (ஒண்டாமரையாள் இத்யாதி₃) ப₄க₃வத்₃விஷயமானதே ஜ்ஞாநமாகையாலும், ஜ்ஞாநந்மோக்ஷமாகையாலும், இப்பத்தை ஸார்த்த₂மாக அப்₄யஸிக்கவே ப₄க₃வத்கைங்கர்யம் ஸித்₃தி₄க்கும் என்றபடி. p இதுக்கு-ஜ்ஞாநத்துக்கு. q இது தானே - கல்விதானே. r (கல்விதானே) "கற்பரேல் கல்வி வாயும்" என்று கற்கைக்குக் கல்வியைப் ப₂லமாகச் சொல்லுகையாலே, ஸ்வயம் ப்ரயோஜநம் என்றபடி.

A முதல்திருவ-67.

ஸ்ரீ— t ஸர்வஸ்மாத்பரனென்றார்; பூஜநீயனென்றார்; அவன்தான் ஸுலபனென்றார்; ஸுலபனானவன் அபராதஸஹனென்றார் ; அவன் ஶீலவானென்றார் ; ஸ்வாராதனென்றார் ; நிரதிஶயபோக்யனென்றார் ; அவனுடைய ஆர்ஜவகுணம் சொன்னார் ; ஸாத்ம்யபோகப்ரதனென்றார் ; இப்படி — ஏவம்பூதனானவன் நிர்ஹேதுகமாக விஷயீகரிப்பானொருவன் ' என்றார் ; u " ஆகையாலே, A 'அவன் துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே' " என்று தம் திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்து தலைக்கட்டினார்.

v முதற்பத்தால்—பகவத் w கைங்கர்யம் புருஷார்த்தமென்று அறுதியிட்டார் ; இரண்டாம் பத்தால் — அந்தக் கைங்கர்யத்தில் x களையறுத்தார்; மூன்றும் பத்தால்— விரோதிகழிந்த கைங்கர்யவேஷம் — y பாகவதஶேஷத்வபர்யந்தமான பகவத் கைங்கர்யம் என்றார் ; நாலாம் பத்தால் — இப்படிப்பட்ட z கைங்கர்யத்துக்கு விரோதி ஐஶ்வர்ய கைவல்யம் என்றார் ; அஞ்சாம் பத்தால்—a அந்த விரோதியைப் போக்கு வானும் அவனே என்றார் ; ஆறும் பத்தால் — விரோதிநிரஸநஶீலனானவன் திருவடிகளிலே b ஶரணம் புக்கார்; ஏழாம் பத்தால் — இப்படிப் பெரியபிராட்டியார்

அ— s.t இத்திருவாய்மொழிப் பாட்டுக்களுக்கு அர்த்தத்தை அருளிச்செய்து, இப்பத்தில் திருவாய்மொழிகளுக்கு அடைவே அர்த்தம் அருளிச்செய்கிறார் (ஸர்வஸ்மாத்பரனென்றார் இத்யாதி) u 1. " அர்த்தைகத்வாதேகம் வாக்யம் " இதி ந்யாயேந ஶதகைகார்த்யமாஹ (ஆகையாலே அவன் துயரறு சுடரடி இதி)

v...z,a...] இப்ரஸங்கத்திலே பத்துக்களுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (முதற்பத்தால் இத்யாதி) w (கைங்கர்யம் புருஷார்த்தம்) என்றது—A "தொழுதெழு" என்று உபக்ரமித்து, "கல்வி வாயும்" என்று உபஸம்ஹரிக்கையாலே. x களையறுத்தது - B"தனக்கேயாக" என்ற விடத்திலே. y (பாகவத ஶேஷத்வபர்யந்தம்) என்றது-C பயிலும் சுடரொளியிலே. z (கைங்கர்யத்துக்கு விரோதி ஐஶ்வர்ய கைவல்யம்) என்றது-D ஒரு நாயகத்திலே. a (அந்த விரோதியைப் போக்குவானும் அவனே) என்றது-E " களைகண்மற்றிலேன் " என்கிறவிடத்திலே ; F "உழலை யென்பிற்பேய்ச்சி" இத்யாதியைப் பற்றவுமாம். b (ஶரணம் புக்கார்) என்றது—G" அடிக்கீழமர்ந்து

ஜீ— s.t இத்திருவாய்மொழிப் பாட்டுக்களுக்கு அர்த்தத்தை அருளிச்செய்து, இப்பத்தில் திருவாய்மொழிகளுக்கு அடைவே அர்த்தம் அருளிச்செய்கிறார் (ஸர்வஸ்மாத்பரனென்றார் இத்யாதி) u 1. " அர்த்தைகத்வாதேகம் வாக்யம் " இதி ந்யாயேந ஶதகைகார்த்யமாஹ (ஆகையாலே அவன் துயரறு சுடரடி இதி)

v...z a...] இப்ரஸங்கத்திலே பத்துக்களுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (முதற்பத்தால் இத்யாதி) w (கைங்கர்யம் புருஷார்த்தம்) என்றது—A" அடிதொழுதெழு" என்று உபக்ரமித்து, "கல்வி வாயும்" என்று உபஸம்ஹரிக்கையாலே. x களையறுத்தது-B "தனக்கேயாக" என்கிற விடத்திலே, y (பாகவதஶேஷத்வபர்யந்தம்) என்கிறது-C பயிலும் சுடரொளியிலே. z (கைங்கர்யத்துக்கு விரோதி ஐஶ்வர்ய கைவல்யம்) என்றது-D ஒரு நாயகத்திலே. a (அந்த விரோதியைப் போக்குவானும் அவனே) என்றது-E "களைகண்மற்றிலேன்" என்கிறவிடத்திலே; F "உழலையென் பிற்பேய்ச்சி" இத்யாதியைப்பற்ற என்னவுமாம். b (ஶரணம் புக்கார்) என்றது—G" அடிக்கீழமர்ந்து

A 1-1-1. B 2-9-4. C 3-7. D 4-1. E 5-8-8. F 5-8-11. G 6-10-10.

ஈ—c முன்னிலையாக ஶரணம் புக்கவிடத்திலும், தூக்குதூபட ந்யாயம்போலே ஸம்ஸாரம் அநுவர்த்திக்கிறபடியைக்கண்டு d விஷண்ணராகிறார்; எட்டாம் பத்தால் — "இப்படி ப்ரபந்நராயிருக்கச்செய்தேயும் தூக்குதூபட ந்யாயம்போலே நம்மை விடாதே அநுவர்த்திக்கிறது நம்முடைய ஆத்மாத்மீயங்களில் நசையறுதபடியாலே" என்று பார்த்து, அவற்றில் ஒரு e நசையில்லை என்கிறார்; ஒன்பதாம் பத்தால் — "இப்படி நசையற்ற பின்பும் ரக்ஷியாதொழிவானென்?" என்று f அதிஶங்கைபண்ண, "நான் நாராயணன், ஸர்வஶக்தியுக்தன்; உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களும் செய்து முடிக்கிறோம்" என்று அருளிச்செய்ய, அவனுடைய g ஶீலகுணத்திலே ஆழங்காற்படுகிறார்; பத்தாம் பத்தால் — ஆழ்வாருடைய h பதற்றத்தைக்கண்டு, திருமோகூரிலே i தங்குவேட்டையாக வந்து தங்கி, இவர்க்கு அர்ச்சிராதிகதியையும் காட்டி, இவருடைய j அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணினபடியை அருளிச்செய்தார். 11.

வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

அ—புகுந்தேன்" என்கிறவிடத்திலே. c முன்னிலையாக-புருஷகாரமாக. d (விஷண்ணராகிறார்) என்றது - A உண்ணிலாவியிலே B"விண்ணுளார் பெருமானேயோ" என்றத்தைப்பற்ற. e (நசையில்லை என்கிறார்) என்கிறது - C நங்கள் வரிவளையிலே. D "உங்களோடெங்களிடையில்லை" என்றத்தைப்பற்ற. f (அதிஶங்கைப்பண்ண) என்றது-E"அறிவொன்றும் சங்கிப்பன்" என்றத்தைப் பற்ற. g (ஶீலகுணத்திலே ஆழங்காற்படுகிறார்) F மாலைநண்ணியிலே என்றபடி. h பதற்றம்-த்வரா. i (தங்கு வேட்டையாக வந்து) என்று தொடங்கி, j (அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணினபடியை அருளிச்செய்தார்) என்றது - G "என்னவாவறச் சூழ்ந்தாயே" என்கையாலே. ["முதற்பத்தால்" என்று தொடங்கி, இந்த நிகமநப்பாட்டுக்கு ஶேஷமாகச் சில ஸ்ரீகோஶங்களிலே, இரண்டாம் பத்தினுடைய ஈட்டினுதியிலே உண்டாயிருக்க. அப்படியே அரும்பதமும் என்று கண்டுகொள்வது.] "மணியை" என்று தொடங்கி, அடைவே உரை அந்வயம். 11.

ஆத்தான்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஜீ-புகுந்தேன்" என்கிறவிடத்திலே. c முன்னிலையாக-புருஷகாரமாக. d (விஷண்ணராகிறார்) என்றது-A உண்ணிலாவியிலே B "விண்ணுளார் பெருமானேயோ" என்றத்தைப்பற்ற. e (நசையில்லை என்கிறார்) என்றது - C நங்கள் வரிவளையிலே, D "உங்களோடெங்களிடையில்லை" என்றத்தைப் பற்ற. f (அதிஶங்கைபண்ண) என்றது - E "அறிவொன்றும் சங்கிப்பன்" என்றத்தைப்பற்ற. g (ஶீலகுணத்திலே ஆழங்காற்படுகிறார்) F மாலைநண்ணியிலே என்றபடி. h பதற்றம் - த்வரை. i (தங்குவேட்டையாக வந்து) என்று தொடங்கி, j (அபேக்ஷித ஸம்விதாநம் பண்ணினபடியை அருளிச்செய்தார்) என்றது - G "என்னவாவறச் சூழ்ந்தாயே" என்கையாலே. ["முதற்பத்தால்" என்று தொடங்கி, இந்த நிகமநப்பாட்டுக்கு ஶேஷமாகச் சில ஸ்ரீ கோசங்களிலே, இரண்டாம் பத்தினுடைய ஈட்டின் அடியிலே உண்டாயிருக்க, அப்படியே அரும்பதமும் என்று கண்டுகொள்வது.] 11.

ராமாநுஜ ஜீயர் திருவடிகளே ஶரணம்.

A 7-1. B 7-1-5. C 8-2. D 8-2-7. E 8-1-7. F 9-10. G 10-10-10.

த்3ரமிடோ3பநிஷத் ஸங்க3தி - பொருமாநீள்

१. इत्थं श्रियःपतिकृतस्वसमस्तदेहसंश्लेषलक्षणफलस्य सुदुर्लभस्य ।
भक्त्यादिवत्स्वगणनेऽपि च तत्प्रसादान्निर्हेतुकत्वमवदद्दशमे शठारिः ॥ १० ॥

1. இத்த2ம் ஶ்ரிய:பதிக்ருதஸ்வஸமஸ்ததே3ஹ-
ஸம்ஶ்லேஷலக்ஷணப2லஸ்ய ஸுது3ர்லப4ஸ்ய ।
ப4க்த்யாதி3வத் ஸ்வக3ணநேऽபி ச தத்ப்ரஸாதா3த்
நிர்ஹேதுகத்வமவத3த்3த3ஶமே ஶடா2ரி: ॥ 10 ॥

அழகிய மணவாளச் சீயர் திருவடிகளே ஶரணம்.

த்3ரமிடோ3பநிஷத் தாத்பர்யரத்நாவளி - பொருமாநீள்

२. विष्वग्विक्रान्तिदृश्यं विगणनसुलभं व्यक्तपूर्वोपकारम्
स्वान्तस्यैकाग्र्यहेतुं स्वयमुदयजुषं बन्धमात्रोपयातम् ।
चिन्तास्तुत्यादिलक्ष्यं नतजनसततश्लेषिणं दर्शितार्चम्
स्मृत्यै चित्ते मिषन्तं स्ववितरणमहौदार्यतुष्टोऽभ्यचष्ट ॥ १० ॥

2. விஷ்வக்3விக்ராந்தித்3ருஶ்யம் விக3ணநஸுலப4ம் வ்யக்தபூர்வோபகாரம்
ஸ்வாந்தஸ்யைகாக்3ர்யஹேதும் ஸ்வயமுத3யஜுஷம் ப3ந்த3மாத்ரோபயாதம் ।
சிந்தாஸ்துத்யாதி3லக்ஷ்யம் நதஜநஸததஶ்லேஷிணம் த3ர்ஶிதார்ச்சம்
ஸ்ம்ருத்யை சித்தே மிஷந்தம் ஸ்வவிதரணமஹௌதா3ர்யதுஷ்டோऽப்4யசஷ்ட ॥10॥

३. आदावित्थं परत्वादखिलसमतया भक्तसौलभ्यभूम्ना
निश्शेषागस्सहत्वात्कृपणसुघटनाच्छक्यसंराधनत्वात् ।
स्वादुस्वोपासनत्वात्प्रकृतिऋजुतया सात्म्यभोगप्रदत्वात्
अव्याजोदारभावादमनुत शतके माधवं सेवनीयम् ॥ ११ ॥

3. ஆதா3வித்த2ம் பரத்வாத3கி2லஸமதயா ப4க்தஸௌலப்4யபூ4ம்நா
நிஶ்ஶேஷாக3ஸ்ஸஹத்வாத் க்ருபணஸுக4டநாச்ச2க்யஸம்ராத4நத்வாத் ।
ஸ்வாது3ஸ்வோபாஸநத்வாத் ப்ரக்ருதிருஜுதயா ஸாத்ம்யபோ4க3ப்ரத3த்வாத்
அவ்யாஜோதா3ரபா4வாத3மநுத ஶதகே மாத4வம் ஸேவநீயம் ॥ 11 ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி

10. பொருமாநீள் சங்குடையோன் பூதலத்தே வந்து
தருமாறே ரேதுவறத் தன்னைத்—திரமாகப்
பார்த்துரைசெய் மாறன் பதம்பணிக வென்சென்னி
வாழ்த்திடுக வென்னுடைய வாய்.

பெரிய ஜீயர் திருவடிகளே ஶரணம்.

வ்யா:— (1) (விஶ்வக்விக்ராந்தித்ருஶ்யம்) ஒரு மாணிக்குறளாகி நிமிர்ந்த அக்கரு மாணிக்கம் - த்ரிவிக்ரமாவதாரம்பண்ணித் திருவுலகளந்தருளினபோது அத்யாஶ்சர்யமாக எல்லாராலும் காணப்படுமவனாய்; (2) (விகணநஸுலபம்) எண்ணிலும் வரும் - "ஒன்று இரண்டு தொடங்கி, இருபத்தஞ்சு இருபத்தாறு" என்று சொன்னால், "இருபத்தாறுவான் நான்" என்று தன்னைச்சொன்னதாகக்கொண்டு ரக்ஷிக்கும் ஸ்வபாவனுமாய்; (3) (வ்யக்தபூர்வோபகாரம்) எம்பிரானை எந்தை தந்தை தந்தைக்கும் தம்பிரானை - இன்று உபகரிக்கையன்றிக்கே, பூர்வ பூர்வர்களுக்கும் உபகாரகனாய்; (4) (ஸ்வாந்தஸ்யைகாக்ர்யஹேதும்) நெஞ்சமே! மலராள் மணவாளனைத் துஞ்சும்போதும் விடாது தொடர்கண்டாய் - மநஸ்ஸு தன்னிடத்திலேதானே ஐகாக்ர்யத்தை பஜிக்கைக்கு ஹேதுபூதனுமாய்; (5) (ஸ்வயமுதயஜுஷம்) ஒரெண்டானுமின்றியே வந்தியலுமாறு - எண்ணிக்கையின்றிக்கே தானே வருவானுமாய்; (6) (பந்தமாத்ரோபயாதம்) தாயும் தந்தையுமாய் இவ்வுலகினில் வாயும் ஈசன் - மாதாபிதாக்களைப் போலே ஸம்பந்தமாத்ரத்தாலே வந்து உதவுமவனாய்; (7) (சிந்தாஸ்துத்யாதிலக்ஷ்யம்) சிந்தையுள் வைப்பன் சொல்லுவன் சிந்தா ஸ்துதி ப்ரணாமங்களுக்கு லக்ஷ்யமுமாய்; (8) (நதஜநஸததஶ்லேஷிணம்) இடைவீடின்றி நல்கி என்னை விடான் - ஆஶ்ரிதரை ஒரு க்ஷணமும் விட்டுப்பிரியில் தரிக்கமாட்டாதவனாய்; (9) (தர்ஶிதார்ச்சம்) நம்பியைத் தென்குறுங்குடி நின்ற - அதுக்கு உதாஹரணமாக, தான் திருக்குறுங்குடியிலே நின்றருளினபடியைக் காட்டுமவனாய்; (11) (ஸ்ம்ருத்யை சித்தே நிஷந்தம்) மறப்பற என்னுள்ளே மன்னினான்தன்னை - மறவாதபடி மநஸ்ஸிலே ஜாகருகனுமாயிருக்கிற பெருமானை அநுஸந்தித்து, A "தன்னைத் தந்த கற்பகம்" என்கிறபடியே தன்னை அநுபவிக்க விதரணம் பண்ணுகிற அவனுடைய மஹௌதார்யத்தினாலே "பொருமாநீள்படை" என்கிற தஶகத்திலே ஆழ்வார் அதிஸந்துஷ்டரானார் என்கிறார். 10.

இப்படி ப்ரதம ஶதகத்திலே பத்து தஶகங்களாலும் ப்ரதிபாதிதங்களான அர்த்தங்களை ப்ரகாஶிப்பித்தருளுகிறார். ஸர்வஸ்மாத்பரனாகையாலும், ஸர்வஸமனாகையாலும், ஆஶ்ரித ஸுலபனாகையாலும், ஸர்வாபராதஸஹனாகையாலும், ஸுஶீலனாகையாலும், ஸ்வாராதனாகையாலும், ஸுரூபோபாஸநனாகையாலும், ருஜுப்ரக்ருதியாகையாலும், ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுபவிப்பிக்கையாலும், / நிர்ஹேதுகோதாரனாகையாலும் எம்பெருமான் ஸேவ்யனென்று ப்ரதமஶதகத்திலே ஆழ்வார் அநுஸந்தித்தருளினார் என்கிறார். 11.

வேதாந்த தேஶிகர் திருவடிகளே ஶரணம்.

A 2.7.11. / (பா) அத்யந்தோதார

அவ:— பத்தாம் பாட்டு. (பொருமாழி) ஸர்வாங்க₃ ஸம்ஶ்லேஷம் பண்ணுகைக்கு ஹேத்வந்தரங்காணமல், "நிர்ஹேதுகமாகாதே!" என்று நிர்வ்ருதராகிறபடியைப் பேசுகிற பாசுரத்தை அநுவதி₃த்து அருளிச்செய்கிறார். எங்ஙனே யென்னில்; "இப்படி உகப்புடனே பண்ணும் ஸர்வாங்க₃ ஸம்ஶ்லேஷமாகிற இந்தப் பேற்றுக்குத் தகுதியாக இவனால் நேர்ந்து செய்யத்தக்கதுண்டோ? என்னில்; பு₃த்₃த்₄யாதி₃ ஸகல பதா₃ர்த்த₂ங்களுக்கும் நியாமகனாகையாலே, அத்₃வேஷம் தொடங்கிப் பரிக₃ணனை நடுவாகப் பரமப₄க்திபர்யந்தமாகத் தானே விளைவித்து வந்து நிர்ஹேதுகமாக அங்கீ₃கரிக்கும் ஸ்வப₄ாவன்" என்று அவனுடைய நிர்ஹேதுகோபகாரகத்வத்தை அநுஸந்தி₄த்து நிர்வ்ருதராகிற பொருமா நீள்படையில் அர்த்த₂த்தை "பொருமாழி சங்குடையோன்" என்று தொடங்கி அருளிச்செய்கிறார்.

வ்யா:— (பொருமாழி சங்குடையோன் பூதலத்தே வந்து) ஶத்ருக்கள் மேலே பொராநிற்கிற திருவாழி † ஸ்ரீ பாஞ்சஜந்யங்களையுடைய ஸர்வேஶ்வரன், எதிரம்பு கோக்கிற இந்த பூ₄தலத்திலே சக்ஷுர்விஷயமாம்படி வந்து; "பொருமா நீள் படை" (1) என்று தொடங்கி, "கருமாணிக்கம் என் கண்ணுளதாகும்" (1) என்றத்தைக் கடாக்ஷித்து அருளிச்செய்தபடி. **(தருமாறேரேதுவறத் தன்னை)** நிர்ஹேதுகமாகத் தன்னை உபகரிக்கிற உபாயத்தை; ஓரேதுவறத் தன்னைத் தருமாறு - ஒரு ஹேதுவின்றிக்கே நிர்ஹேதுகமாக, பூ₄லஸ்வரூபனான தன்னையே தருகிற ப்ரகாரத்தை. **(திரமாகப் பார்த்துரை செய் மாறன்)** அதாவது - "கண்ணுள்ளே நிற்கும் காதன்மையால், தொழில் எண்ணிலும் வரும்" (2) என்கிற பக்திக்கும் பரிக₃ணனைக்கும் ஒக்க முகங்காட்டும்படிக்கு மேலே, "ஓரெண்டானுமின்றியே வந்தியலுமாறு கண்டாயே" (5) என்று - 1. "**सहित:**" (ஸஹித:) 2. "**सङ्गत:**" (ஸங்க₃த:) என்று கரைசேர்ந்த நிர்ஹேதுக க்ருபையை அல்பஜ்ஞராலே அவிசால்யமாம்படி ஸ்தி₂ரமாக த₃ர்ஶித்து, அந்த ப்ரகாரத்தை அருளிச்செய்த ஆழ்வார். **(பதம் பணிக என் சென்னி வாழ்த்திடுக என்னுடைய வாய்)** இப்படி நிர்ஹேதுக வைப₄வத்திலே நிர்வ்ருதராகிறபடியை வெளியிட்ட ஆழ்வார் திருவடிகளை, 3. "**मूर्ध्ना प्रणमामि**" (மூர்த்₄நா ப்ரணமாமி) என்னும்படி என் ஶிரஸ்ஸானது பூ₄ஜித்திடுக; A "திருக்குருகைப்பெருமாள்தன் திருத்தாள்கள் வாழியே" என்று என் வாக்கானது மங்க₃ளாஶாஸநம் பண்ணியிடுக. இப்படி உபகார ஸ்ம்ருத்யதிஶயத்தாலே தாம் ஆழ்வார் திருவடிகளிலே ஆழங்காற்பட்டபடியை அருளிச்செய்தருளினர். 10.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே ஶரணம்.

திருவாய்மொழி முதற்பத்தில்
பத்தாம் திருவாய்மொழி வ்யாக்₂யானங்கள் முற்றுப்பெற்றன.

---

† (பா) ஸ்ரீபாஞ்சஜந்யமாகிற தி₃வ்யாயுத₄ங்களையுடைய   A நம்மாழ்வார் வாழித்திருநாமம்.

1. ஸ்ரீநிவாஸமுநேர் லப்3த4வேதா3ந்தத்3வயஸம்பத3ம் ।
ஸ்ரீஶைல ஸ்ரீநிவாஸார்யம் வந்தே3 வாத்ஸல்யவாரிதி4ம் ॥

ஸ்ரீஶைல ஸ்ரீநிவாஸதே3ஶிகன் அருளிச்செய்த

த்3ரமிடோ3பநிஷத்ஸார வ்யாக்2யாநம்

ஸாராவளீ

2. ப்ரணம்ய நிக3மாந்தார்யபத3பங்கேருஹத்3வயம் ।
த்3ரமிடோ3பநிஷத்ஸாரம் விவ்ருணோமி யதா2மதி ॥

அவதாரிகை

ஸ்ரிய:பதியாய், அகி2லஹேயப்ரத்யநீககல்யாணைகதாநனாய், அவாப்தஸமஸ்தகாமனாய், ஸர்வேஶ்வரனான திருவேங்கடமுடையானுடைய திருவவதாரமாகவும், தத்3தி3வ்யக4ண்டாவதாரமாகவும் ஸுப்ரஸித்3த4ராய், A" ஒன்றே புகலென்று உணர்ந்தவர் காட்டத் திருவருளாலன்றே அடைக்கலங்கொண்ட நம் அத்திகிரித்திருமால்" என்கிறபடியே பேரருளாளன் அருள்பெற்று, B 'காவலரெங்கள் கிடாம்பிக்குலபதியப்புளார்தம் தேமலர்ச்சேவடி சேர்ந்து பணிந்தவர் தம் அருளால் நாவலரும் தென்வடமொழி நற்பொருள்' பெற்று, 3."விம்ஶத்யப்3தே3 விஶ்ருதாநாநவித்4 வித்3ய: த்ரிம்ஶத்3வாரம் ஶ்ராவிதஶாரீரகபா4ஷ்ய:" என்கிறபடியே இருபது திருநக்ஷத்ரத்திலே அதி4க3தஸகலவித்3யர் என்றும், முப்பதுதரம் ஸ்ரீ பா4ஷ்யத்தை ஸச்சி2ஷ்யர்களுக்கு உபதே3ஶித்தருளினார் என்றும் ஸர்வஜநங்களாலே ஶ்லாக4நீயராய், ஸ்ரீரங்க3ராஜ தி3வ்யாஜ்ஞாலப்3த4 வேதா3ந்தாசார்யபத3ராய், ஸ்ரீரங்க3நாயகியாராலே ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரென்னும் திருநாமத்தைப் பெற்றவராய், கவிகத2ககுஞ்ஜரகண்டீ2ரவரென்று ப்ரதிதி3ஶம் ப்ரக்2யாதவைப4வரான C சீராருந்தூப்புல் திருவேங்கடமுடையான் — D உயர்வற உயர்நலமுடையவனாய் அயர்வறும் அமரர்களதிபதியான ஸ்ரிய:பதியால் D மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார் அருளிச்செய்ததாய், ஸர்வாதி4காரமாய், ஸர்வஶாஸ்த்ரார்த்த2 ஸங்க்3ரஹரூபமாய், முமுக்ஷுக்களுக்கு அவஶ்யோபாதே3யமான த்3ரமிடோ3பநிஷத்தான திருவாய்மொழியின் தாத்பர்யங்களை மந்த3மதிகளும் எளிதில் அறிந்து அநுஸந்தி4த்து உஜ்ஜீவிக்கும்படிக்கு, எம்பெருமானார் ஸம்ஸாராக்3நி விதீ3பநவ்யபக3தப்ராணாத்மஸஞ்ஜீவநமான பரமாசார்யவசோம்ருதத்தை பௌ4ளமஸுமநோ போ4க்3யமாகச் செய்தருளினாப்போலே, அழகியமணவாளன் - ஆழ்வார் - எம்பெருமானார் நியமனப்படிக்கு ஸஹ்ருத3யஹ்ருத3யங்க3மங்களான பத்3யங்களாலே "த்3ரமிடோ3பநிஷத்ஸாரம்" என்று ஒரு ப்ரப3ந்த4ரத்நத்தை அருளிச்செய்தார்.

இதில் ஶதகஸங்க3திகளும் ஶதககு3ணங்களும் தது3பபாத3கங்களான த3ஶககு3ணங்களும் மற்றுமுள்ள விஶேஷார்த்த2ங்களும் ஸம்க்ஷிப்தமாயிருக்கும். இதுதான் — மஹாரத்நக3ர்ப்ப4மான மாணிக்கச்செப்புபோலும், மஹார்த்த2க3ர்ப்பி4தமான திருமந்த்ரம்போலும் க3ம்பீ4ரமது4ரமாய் 4. "நாதிஸங்க்ஷேபவிஸ்தரம்" என்கிறபடியே அநபேக்ஷிதவிஸ்தரம், அபேக்ஷிதஸங்கோசம் முதலிய தோ3ஷமின்றிக்கே ஸாரபூ4தமாயிருக்கையாலே "ஸாரம்" என்று பெரியோர்கள் கொண்டாடும்படியானதொன்றாய்த்து.

1. அவ:— அதில் முதல் ஶ்லோகத்தால் வஸ்துநிர்தே3ஶரூபமங்க3ளாசரணம் செய்தருளா நின்றுகொண்டு திருவாய்மொழியின் ஶதககு3ணங்களை ப்ரகாஶிப்பித்தருளுகிறார் (ஸேவாயோக்3ய இத்யாதி3யால்)

A ஹஸ்திகி3ரி மாஹாத்ம்யம்-4. B பிள்ளையந்தாதி-17.
C ஹஸ்திகி3ரி மாஹாத்ம்யம் — திருநாமப்பாட்டு. D 1-1-1.

திருவாய்மொழியின் ஒரோ ஶதகார்த்த2 ஸங்க்3ரஹமாகப் பரமகாருணிகரான வேதா3ந்ததே3ஶிகர் அருளிச்செய்த

த்3ரமிடோ3பநிஷத்ஸாரம்

१. सेवायोग्योऽतिभोग्यश्शुभसुभगतनुस्सर्वभोग्यातिशायी
श्रेयस्तद्धेतुदाता प्रपदनसुलभोऽनिष्टविध्वंसशीलः ।
भक्तच्छन्दानुवर्ती निरुपधिकसुहृत्सत्पदव्यां सहायः
श्रीमान् सर्वोचितायामुपनिषदि मिषत्येष गाथाशतैर्नः ॥ १ ॥

1. ஸேவாயோக்3யோऽதிபோ4க்3யஶ் ஶுப4ஸுப4க3தநுஸ் ஸர்வபோ4க்3யாதிஶாயீ
ஶ்ரேயஸ்தத்3தே4துதா3தா ப்ரபத3நஸுலபோ4ऽநிஷ்டவித்4வம்ஸஶீல: ।
ப4க்தச்ச2ந்தா3நுவர்த்தி நிருபதி4கஸுஹ்ருத் ஸத்பத3வ்யாம் ஸஹாய:
ஶ்ரீமாந் ஸர்வோசிதாயாமுபநிஷதி3 மிஷத்யேஷ கா3தா2ஶதைர் ந: ॥1॥

२. आद्ये पश्यन्नुपायं प्रभुमिह परमप्राप्यभूतं द्वितीये
कल्याणोदारमूर्तेर्द्वितयमिदमिति प्रेक्षमाणस्तृतीये ।
ऐश्वर्यादेश्चतुर्थे विषमधुतुलयाऽनन्यभोग्यत्वमिच्छन्
षड्भिस्स्वां पञ्चमाद्यैरनितरगतितामाचचक्षे मुनीन्द्रः ॥ २ ॥

2. ஆத்3யே பஶ்யந்நுபாயம் ப்ரபு4மிஹ பரமப்ராப்யபூ4தம் த்3விதீயே
கல்யாணோதா3ரமூர்த்தேர் த்3விதயமித3மிதி ப்ரேக்ஷமாணஸ் த்ருதீயே ।
ஐஶ்வர்யாதே3ஶ்சதுர்த்தே2 விஷமது4துலயாऽநந்யபோ4க்3யத்வமிச்ச2ந்
ஷட்3பி4ஸ் ஸ்வாம் பஞ்சமாத்3யைரநிதரக3திதாமாசசக்ஷே முநீந்த்3ர: ॥2॥

வ்யா:— முதற்பத்தில் ஸேவ்யத்வத்தையும், இரண்டாம் பத்தில் அதிபோ4க்3யத்வத்தையும், மூன்றாம் பத்தில் ஶுபா4ஶ்ரயதி3வ்யமங்க3ளவிக்3ரஹவத்த்வத்தையும், நாலாம் பத்தில் ஸர்வ புருஷார்த்த2ாதிஶயிதத்வத்தையும், ஐந்தாம் பத்தில் புருஷார்த்த2 தது3பாய தா3த்ருத்வத்தையும், ஆறாம் பத்தில் ப்ரபத3நஸுலப4த்வத்தையும், ஏழாம் பத்தில் அநிஷ்டநிரஸநஶீலத்வத்தையும், எட்டாம் பத்தில் ஆஶ்ரிதச்ச2ந்தா3நுவர்த்தித்வத்தையும். ஒன்பதாம் பத்தில் நிருபாதி4க ஸுஹ்ருத்த்வத்தையும், பத்தாம் பத்தில் ஸத்பத3விஸஹாயத்வத்தையும் அருளிச்செய்கையாலே, ஸர்வாதி4காரமான உபநிஷத்தான திருவாய்மொழியில் ஶ்ரீமானான நாராயணன் பத்து ஶதகங்களாலும் ஸேவ்யத்வாதி3கு3ணத3ஶகவிஶிஷ்டனாக ப்ரதிபாதி3தனானான் என்கிறார்.

2. அவ :— இரண்டாம் ஶ்லோகத்தில் ஶதகார்த்த2ங்களுக்கு ஸங்க3தி அருளிச்செய்கிறார் (ஆத்3ய இத்யாதி3)

வ்யா:—முதற்பத்தில் எம்பெருமான் மோக்ஷோபாயம் என்று அருளிச்செய்தார். இரண்டாம் பத்தில் பரமப2லமும் அவனே என்று அருளிச்செய்தார். இவ்வுபாயத்வப்ராப்யத்வங்களிரண்டும் ஶுபா4ஶ்ரயதி3வ்யமங்க3ளவிக்3ரஹவிஶிஷ்டனுக்கே என்று மூன்றாம் பத்தில் அருளிச்செய்தார். நாலாம் பத்தில் எம்பெருமானையொழிய ப்ராப்யாந்தரமில்லை என்றும், ஐஶ்வர்யாதி3கள் விஷமது4 துல்யங்களாகையால் தமக்கு ப்ராப்யமாகாதென்றும் அருளிச்செய்யாநின்றுகொண்டு தம்முடைய

१. परं निर्वैषम्यं सुलभमपराधप्रसहनम्
सुशीलं स्वाराधं सरसभजनं स्वार्जवगुणम् ।
सुसात्म्यस्वानन्दप्रदमनघविश्राणनपरम्
मुकुन्दं निध्यायन् मुनिरधिजगावाद्यशतके ॥ ३ ॥

1. பரம் நிர்வைஷம்யம் ஸுலப4மபராத4ப்ரஸஹநம்
ஸுஶீலம் ஸ்வாராத4ம் ஸரஸப4ஜநம் ஸ்வார்ஜவகு3ணம் ।
ஸுஸாத்ம்யஸ்வாநந்த3ப்ரத3மநக4விஶ்ராணநபரம்
முகுந்த3ம் நித்4யாயந் முநிரதி4ஜகா3வாத்3யஶதகே ॥ 3 ॥

அநந்யப்ராப்யதையை வெளியிட்டருளினர். ஐந்தாம் பத்து முதலாக மேல் ஆறு பத்துக்களாலே அநந்யோபாயத்வத்தை அருளிச்செய்தார் என்கிறார்.

ஆக இப்ரப3ந்த4த்திற்கு ப்ரதிபாத்3யன் உபாயத்வோபேயத்வவிஶிஷ்டனான ஶ்ரிய:பதி. அதில் முதற்பத்தில் ஸேவ்யத்வாது3பாயத்வமும். இரண்டாம் பத்தில் போ4க்3யத்வாது3பேயத்வமும். மூன்றாம் பத்தில் இவ்வுபாயத்வோபேயத்வோபயுக்த தி3வ்யமங்க3ளவிக்3ரஹயோக3மும் சொல்லப்படுகிறது. நாலாம் பத்தில் உபேயத்வத்தை ஸ்தி2ரீகரிக்கிறது. மேல் ஆறு பத்துக்களும் உபாயத்வத்தை ஸ்தி2ரீகரிக்கிறன என்றதாய்த்து. 2.

3. அவ:— இஶ்லோகத்தில்—ஸேவ்யத்வஸ்தா2பகங்களாக முதற்பத்தில் பத்துத் திருவாய்மொழிகளாலும் ப்ரதிபாதி3தங்களான பத்து கு3ணங்களையும் அடைவே ஸங்க்3ரஹித்தருளுகிறார் (பரம் இத்யாதி3)

வ்யா:— முதல் திருவாய்மொழியில்—எம்பெருமான் ஸ்வரூப ரூப கு3ண விப4வாதி3களாலே ஸர்வோத்க்ருஷ்டனாகையாலே ஸர்வஸ்மாத்பரனென்றார். இரண்டாம் திருவாய்மொழியில்—ப4க3வதே3க போ4க3த்வோபாயமான ப4க்தியோக3த்தை ஸம்ஸாரிகளுக்கும் உபதே3ஶிக்கையாலே ஸர்வஸமனென்று அருளிச்செய்தார். மூன்றாம் திருவாய்மொழியில்—அவன்தான் ப4க்தஜநங்களால் கட்டுண்ணும்படி எளியனாயிருப்பானொருவனாகையாலே ஸுலப4னென்கிறார். நாலாம் திருவாய்மொழியில் – 2. "ஸர்வத்3ரஷ்டா ந க3ணயதி தேஷாமபக்ருதிம்" என்கிறபடியே அவன்தான் ஸர்வஜ்ஞனாயிருந்துவைத்தும் ஆஶ்ரிதாபராத4ங்களைக் கணிசியாதானொருவனென்று கொண்டு அபராத4ஸஹனென்றார். ஐந்தாம் திருவாய்மொழியில்—A அயர்வறும் அமரர்கள் அதிபதியான தன்னை ஸம்ஸாரிகளும் B "களவேழ் வெண்ணெய் தொடுவுண்ட கள்வா" என்னிலும், அதுகொண்டு ஆபி4முக்2யம்பண்ணி 3. "நிஷாத3ாநாம் நேதா கபிகுலபதி: காபி ஶப3ரீ குசேல: குப்3ஜா ஸா வ்ரஜயுவதயோ மால்யக்ருதி3தி । அமீஷாம் நிம்நத்வம் வ்ருஷகி3ரிபதேருந்நதிமபி ப்ரபூ4தைஸ் ஸ்ரோதோபி4: ப்ரஸப4மநுகம்பே ஸமயஸி ॥" என்கிறபடியே தன் அபாரகாருண்யத்தாலே தன் மேன்மை பாராதே அவர்களோடு ஒரு நீராகக் கலக்கும் ஸ்வபா4வனாயிருப்பானொருவனென்று கொண்டு "நிரதிஶய ஸௌஶீல்ய ஜலதி4:" என்று அருளிச்செய்தார். ஆறாம் திருவாய்மொழியில்—அவனாராத4நத்திற்கென்று த்3ரவ்யவ்யயம் தே3ஹஶ்ரமம் முதலியவை வேண்டாதபடி ஸுலப4மான குஸுமஸலிலாதி3களைக்கொண்டு பூஜிக்கிலும் 4. "மாதங்க3மா ருஷபி4தா3 ந விஶேஷஹேது:" என்கிறபடியே அதி4காரி நியமம் பாராதே, இது யோக்3யம் இது அயோக்3யமென்று பாராதே, 5. "அண்வப்யுபஹ்ருதம்

A 1-1-1. B 1-5-1.

१. द्विकाभ्यां द्व्यष्टाङ्घ्रिर्दुरधिगमनीतिस्थपुटिता
यदन्त्या मीमांसा श्रुतिशिखरतत्त्वं व्यवृणुत।
तदादौ गाथाभिर्मुनिरधिकविंशाभिरिह नः
कृती सारग्राहं व्यतरदिह सङ्गृह्य कृपया॥ ४॥

1. த்3விகாப்4யாம் த்3வ்யஷ்டாங்க்4ரிர் து3ரதி4க3மநீதிஸ்த2புடிதா
யத3ந்த்யா மீமாம்ஸா ஶ்ருதிஶிக2ரதத்த்வம் வ்யவ்ருணுத।
தத3ாதௌ3 கா3தா2பி4ர் முநிரதி4கவிம்ஶாபி4ரிஹ ந:
க்ருதீ ஸாரக்3ராஹம் வ்யதரதி3ஹ ஸங்க்3ருஹ்ய க்ருபயா ॥ 4 ॥

ப4க்தை: ப்ரேம்ணா பூ4ர்யேவ மே ப4வேத்'' என்று உகப்பானொருவனாகையாலே ஸ்வாராத4னென்று அருளிச்செய்தார். ஏழாம் திருவாய்மொழியில்—எம்பெருமான் A''வைப்பாம் மருந்தாம்'' என்று ஆஶ்ரிதர்க்குச் சேமித்துவைக்கும் நிதி4போலே தன்னை இஷ்டவிநியோகா3ர்ஹனாக்கி வைப்பானொருவனாகையாலே அவனுடைய ப4ஜநம் அம்ருதபாநம்போலே ஸரஸமாயிருக்கும் என்றுகொண்டு ஸரஸப4ஜநனென்று அருளிச்செய்தார். எட்டாம் திருவாய்மொழியில்—எம்பெருமான் ஆஶ்ரிதர் அபேக்ஷித்தபடி 'அடிமைகொண்டு அநுப4ாவ்யனுவானொருவனென்று கொண்டு ஆர்ஜவகு3ணத்தை அருளிச்செய்தார். ஒன்பதாம் திருவாய்மொழியில்—எம்பெருமான் லக்ஷ்மீயஶோதா3 கூ3ருடா3தி3களில் பண்ணும் ஸம்ஶ்லேஷ ப்ரகாரங்கள் எல்லாவற்றையும் பண்ணி, பூர்வபூர்வாநுப4வம் ஸாத்மிக்க ஸாத்மிக்க மேன்மேலன அநுப4விப்பிப்பானொருவனென்று கொண்டு ஸாத்ம்யபோ4க3ப்ரத3னென்று அருளிச்செய்தார். பத்தாம் திருவாய்மொழியில்—அவன்தான் உபாயலாக4வமும் உபேயகௌ3ரவமும் பாத்ராபகர்ஷமும் பாராதே ஸ்வாத்ம ப்ரதா3நம்பண்ணும் ஸ்வபா4வனென்றுகொண்டு மஹோதா3ரனென்று அருளிச்செய்தார். இப்படி ஸர்வஸ்மாத்பரத்வாதி3களாலே எம்பெருமான் ஸேவ்யன்; அத ஏவ மோக்ஷோபாயம் 3.
என்று முதற்பத்தில் அருளிச்செய்தாராய்த்து.

4. அவ:— இனி, 2. ''காரணத்வமப4ாத்4யத்வமுபாயத்வமுபேயதா'' என்று சொன்ன ஶாரீரக ஶாஸ்த்ரார்த்த2த்தை, ப்ரத2மத்3விதீய த3ஶகங்களாலே ப்ரதிபாதி3த்தருளினார் என்கிறார். (த்3விகாப்4யாம் இத்யாதி3)

வ்யா:— ஜக3த்காரணத்வமும், தத3பா4த்4யத்வமும், முமுக்ஷூபாஸ்யத்வமும், முக்தப்ராப்யத்வமுமிறே ஶாரீரகஶாஸ்த்ரத்திலே பூர்வோத்தரத்3விகங்களாலே ப்ரதிபாதி3தமாய்த்து. இங்கும் முதல் திருவாய்மொழியில்—முதல் ஆறு பாட்டுக்களாலே ப்ரத2மாத்4யாயார்த்த2மும், மேல் ஐந்து பாட்டுக்களாலே த்3விதீயாத்4யாயார்த்த2மும் ஸங்க்3ருஹீதமாயிருக்கிறது. இரண்டாம் திருவாய்மொழியில்—ஒன்பது பாட்டுக்கள் த்ருதீயாத்4யாயார்த்த2த்தையும், மேல் இரண்டு பாட்டுக்கள் சதுர்த்தா2த்4யாயார்த்த2த்தையும் ஸங்க்3ரஹிக்கின்றன. ஆக, இப்படி இரண்டு திருவாய்மொழியாலும் நிக3மநமுள்ளாக இருபத்திரண்டு பாட்டுக்களாலே ஷோட3ஶ பாத3மாய் அத்4யாய சதுஷ்டயாத்மகமாய் து3ரதி4க3மநீதிநிப3ந்த4ந ரூபமான உத்தரமீமாம்ஸா ஶாஸ்த்ரத்தாலே ப்ரதிபாதி3தமான அர்த்த2விஶேஷங்களை ஸாரோத்3த4ாரம்பண்ணி ஆழ்வார் அருளிச்செய்தருளினார் என்றதாய்த்து. அன்றிக்கே, முதல் திருவாய்மொழியால் பூர்வத்3விகார்த்த2மும், இரண்டாம் திருவாய்மொழியில் முதல் ஒன்பது பாட்டுக்களாலே த்ருதீயாத்4யாயார்த்த2மும், மேல்பாட்டாலும், மூன்றாம் திருவாய்மொழியில் B''வணக்குடைத் தவநெறி''

A 1-7-2. B 1-3-5.

१. परत्वाद्यैरित्थं परिचरणसक्तो गुणगणैः
प्रभुं सेवायोग्यं प्रथमशतके वीक्ष्य वरदम् ।
तमेव स्वात्यर्थप्रियमथ च भोक्तुं व्यवसितो
वरेण्यत्वं तस्य प्रथमवरणीयं प्रथयति ॥ ५ ॥

பரத்வாத்₃யைரித்த₂ம் பரிசரணஸக்தோ கு₃ணக₃ணை:
ப்ரபு₄ம் ஸேவாயோக்₃யம் ப்ரத₂மஶதகே வீக்ஷ்ய வரத₃ம் ।
தமேவ ஸ்வாத்யர்த்த₂ப்ரியமத₂ ச போ₄க்தும் வ்யவஸிதோ
வரேண்யத்வம் தஸ்ய ப்ரத₂மவரணீயம் ப்ரத₂யதி ॥ 5 ॥

ஸ்ரீமதே வேதா₃ந்தகு₃ரவே நம:

என்கிற பாட்டாலுமாக சதுர்த்த₂ாத்₄யாயார்த்த₂மும் ஸங்க்₃ருஹீதமாய், அத்தாலேயாக, இருபத்தொரு பாட்டுக்களாலே ஶாரீரகஶாஸ்த்ரார்த்த₂ ஸாரஸங்க்₃ரஹம் பண்ணிற்றுயித்து என்னுதல். அத₂வா, மூன்றும் திருவாய்மொழியில் A''வணக்குடைத் தவநெறி'' என்கிற பாட்டளவாகவுள்ள ஐந்து பாட்டாலுமாக சதுர்த்த₂ாத்₄யாயார்த்த₂ம் ஸங்க்₃ருஹீதமாய், இப்படி இருபத்தைந்து பாட்டுக்களாலே ஶாரீரகஶாஸ்த்ர ப்ரதிபாத்₃யமான வேதா₃ந்தார்த்த₂ தத்வம் ஸாரோத்₃தா₄ரேண ஸங்க்₃ருஹீதமாய்த்து என்னுதல். ரத்நாவளியிலும், 2. ''ஆதெ₃ள ஶாரீரகார்த்த₂க்ரமமிஹ விஶத₃ம் விம்ஶதிர் வக்தி ஸாக்₃ரா'' என்றிறே அருளிச்செய்தது. 4.

5. அவ:— இஸ்லோகத்தில் முதற்பத்துக்கும் இரண்டாம் பத்துக்கும் ஸங்க₃தி அருளிச் செய்கிறார் (பரத்வாத்₃யைரித்யாதி₃)

இப்படி முதற்பத்தில் ஸர்வஸ்மாத்பரத்வாதி₃கு₃ணத₃ஶகத்தாலும் எம்பெருமான் ஸேவ்ய னென்று உபபாதி₃த்தருளி, ''அவனே மோக்ஷோபாயம், D அவன் துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே'' என்று தம் திருவுள்ளத்தை அநுஶாஸித்து நின்றாராயிருந்தது; மேல்— இப்படி ஸேவ்யத்வாது₃பாயபூ₄தனான எம்பெருமான் உபேயனுமாயிருக்கும் என்றுகொண்டு தமக்கு நிரதிஶயப்ரியனான அவனை அநுப₄விக்கக்கடவராய், அதற்கு உறுப்பாக அவனுடைய அதிபோ₄க்₃யத்வத்தை இரண்டாம் பத்தில் ப்ரகாஶிப்பித்தருளினார் என்கிறார்.

இங்கு ''வரத₃ம்'' என்று அருளிச்செய்தது—B ''வாரணவெற்பில் மழைமுகில்போல் நின்ற'' என்றும், 2. ''காலே ந: கரிஶைலக்ருஷ்ணஜலத₃:'' என்றும் அருளிச்செய்தபடியே C கரிகிரிமேல் நின்று அனைத்தும் காக்கின்ற பேரருளாளனை. இதன் கருத்து என்னென்னில்; உடையவர் ஸ்ரீ பாத₃த்து முதலிகள் திருவாய்மொழியை அநுஸந்தி₄த்து ''ஆழ்வார், எம் பெருமான்களெல்லாரையும் பாடினாராய் அருளிச்செய்தது; நம் பேரருளாளனைப் பாடிற்றில்லையே'' என்ன, உடையவரும் ''முதற்பத்து முழுவதும் தம் பேரருளாளனையிறே பாடிற்று'' என்ன, 'இதெங்ஙனே அறியலாய்த்து?' என்ன, ''முதலடியிலே D'அயர்வறும் அமரர்களதிபதி' என்கை யாலும், மேல் பலவிடங்களிலும் இந்த நித்யஸூரி நாயகத்வத்தையே அருளிச்செய்கையாலும், தம் பேரருளாளனே தேவபிரானுகையாலும் அறியலாய்த்து'' என்ன, E''தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பன்'' என்றும், F''தென்குறுங்குடி நின்ற'' என்றும் அருளிச்செய்ததில்லையோ? என்ன, ''ஆகிலென்? நம் பேரருளாளனுக்கே வேங்கடாசலவாஸித்வம் திருக்குறுங்குடி வாஸித்வ மாகிற ஸம்பத்தைச் சொல்லுகிறது'' என்ன, ''அதென்? அவர்களுக்கே நித்யஸூரிநாயகத்வம் சொல்லவடுக்காதோ? பேரருளாளனென்றுதல் அத்திகிரிப்பெருமாளென்றுதல் சொல்லவில்லையே''

A 1-3-5 B பன்னிருநாமம்-2. C அதி₄காரஸங்க்₃ரஹம் 41. D 1-1-1. E 1-8-3. F 1-10-9.

Released by Maaran's Dog ,Toronto , Canada

என்ன "நம் பேரருளாளன் ஸந்நிதி4யில் ஆழ்வார் தி3வ்யமங்க3ளவிக்3ரஹத்தாலே முதற்பத்து பேரருளாளனைப் பாடிற்று என்னுமிடம் ஸுவ்யக்தமன்றோ; A 'அயர்வறும் அமரர்கள் அதிபதியவன் அவன் துயரறு சுடரடி தொழுதெழென் மனனே' என்று அருளிச்செய்தபடி வ்யக்தமாயன்றோ இருப்பது; தம் திருவுள்ளத்தை அநுஸந்தித்தபடி தோற்றவிறே திருமார்பில் ஜ்ஞாநமுத்3ரைவைத்து எழுந்தருளியிருக்கிறது: முன்பு கலியன், பேரருளாளன் ஸந்நிதி4யில் ஆழ்வார் தி3வ்யமங்க3ளவிக்3ரஹத்தை ப்ரதிஷ்டை2 செய்விக்கைக்காக மற்றை தி3வ்யதே3ஶங்களைப்போலே இடதுதிருக்கை திருமடியிலும் வலதுதிருக்கை ஜ்ஞாநமுத்3ரையுமாக ஆழ்வார் தி3வ்யமங்க3ள விக்3ரஹத்தை உகந்தருளப்பண்ணிவைக்க, அதுதானும் இவர்கள் செய்தபடியன்றியே வலது திருக்கை திருமார்பிலேயாயிருக்க, மறுபடியும் முன்போலே உகந்தருளப்பண்ண, அதுவும் அங்ஙனேயாயிருக்க, இப்படி மூன்றுதடவையாயும் அப்படியே இருக்கையாலே எல்லோரும் விஸ்மிதராயிருக்கிறவளவிலே, ஆழ்வார் அங்கு ஒருவரிடத்திலே ஆவேஶித்து "என்னே உங்கள் அஜ்ஞாநமிருந்தபடி! நீங்கள் செய்தாற்போலன்றியே அர்ச்சை வேறுயிருந்தவாறே அறிந்துகொள்ள வல்லவரல்லிகோளோ? இரண்டு மூன்று தடவை செய்வதே! இதை இங்ஙனே நம் பேரருளாளன் ஸந்நிதி4யில் ப்ரதிஷ்டை2செய்க" என்ன; அவர்களும் திருவடிதொழுது தேவரீர் திருவுள்ளக்கருத்தை அடியோங்களுக்கு வெளியிடவேண்டுமென்று ப்ரார்த்தி2க்க, ஆழ்வாரும், "கேளிகோள்; நம் பேரருளாளனையேயாயிற்று நாம் திருவாய்மொழி முதற்பத்தில் பாடிற்று, 'தேவபிரான்' என்னும் திருநாமம் நம் பேரருளாளனுக்கு அஸாதா4ரணமாய்க்காணுமிருப்பது, நாமும் முதலிலே A 'அயர்வறுமமரர்களதிபதி' என்றுயிற்றுப்பேசிற்று, A 'அவன் துயரறு சுடரடி தொழுதெழென்மனனே' என்று நாம் மனதை அநுஸந்தம் பண்ணினதும் பேரருளாளனைப்பற்றும்படியிறே, ஆக இவ்வர்த்த2ம் மேலுள்ளாரும் அறியலாம்படி நாம் மனதிற்கு அநுஸந்தம்பண்ணினபடி தோற்ற மார்பில் உபதேஶமுத்3ரைவைத்து வீற்றிருக்க நினைத்தோம்" என்று அருளிச்செய்ய, கலியனுள்ளிட்டாரும் போர விஸ்மிதர்களாய் அந்த தி3வ்யமங்க3ளவிக்3ரஹத்தையே ஆழ்வார் நியமநப்படி பேரருளாளன் ஸந்நிதி4யில் திரு ப்ரதிஷ்டை2 செய்து வைத்தார்களென்று ப்ரஸித்3த4மென்று திருமாலையாண்டானும் அருளிச்செய்தார்" என்றருளிச்செய்ய; முதலிகளும் போர விஸ்மிதரானார்களென்று ப்ரஸித்3த4மிறே, அதைப்பற்ற முதற்பத்து பேரருளாளனைப் பேசிற்றென்று திருவுள்ளம்.

1. "யஸ்யாநுபா4வமதி4க3ந்துமஶக்நுவந்தோ முஹ்யந்த்யப4ங்கு3ரதி4யோ முநிஸார்வபௌ4மா:" என்று அருளிச்செய்ததில்லையோ? என்னில்; அது நம்மாழ்வாரைச் சொல்லிற்றில்லை; மற்றையாழ்வார்களைச் சொல்லிற்று. அது நம்மாழ்வாரையும் சொல்லிற்றாயினும் விரோத4மில்லை; B "எத்திறம்" என்று மோஹித்துக் கிடந்தாற்போலே மோஹித்தபடியைச் சொல்லிற்றாயிருக்கும்.

2 "நிரந்தரம் நிர்விஶதஸ் த்வதீ3யமஸ்ப்ருஷ்டசிந்தாபத3மாபி4ரூப்யம்। ஸத்யம் ஶபே வாரணஶைலநாத2 வைகுண்ட2வாஸேऽபி ந மேऽபி4லாஷ:॥" என்னும்படியிறே நம் பேரருளாளன் தி3வ்யமங்க3ளவிக்3ரஹவைலக்ஷண்யமிருப்பது. ஆக இப்படி A "அயர்வறும் அமரர்களதிபதி" என்று தொடங்கி. C "மணியை வானவர் கண்ணனை" என்னுமளவாக உபக்ரமோபஸம்ஹாராதி3களாலே முதற்பத்து நம் பேரருளாளனையே பேசிற்று என்னுமிடம் ஸுவ்யக்தம். 5.

ஸ்ரீமதே ஸ்ரீஶைல ஸ்ரீநிவாஸார்ய மஹாதே3ஶிகாய நம:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்.

திருவாய்மொழி முதற்பத்து வ்யாக்2யானங்கள் முற்றிற்று.

A 1-1-1 B 1-3-1 C 1-10-11

Released by Maaran's Dog ,Toronto , Canada